Koviloor Digital Library



ACC. NO.
2002

சத்திய ஒளி

Koviloor Digital Library

Koviloor Digital Library

5-6

சத்திய ஒளி

2002

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 2002
R65

தொகுத்து எழுதியவர் :

டாக்டர் பி. கே. சுந்தரம், எம்.ஏ., பி.எச்.டி.,

தத்துவப் பேராசிரியர்

சென்னைப் பல்கலைக் கழகம்

1979 –

Koviloor Digital Library

All Rights Reserved
First Edition 1979

Published by:

Sri Sathya Sai Education and Publication Foundation,
61, Arthoon Road, Madras-609 013.

Printed at

CAXTON PRESS,
62, Chinnathambi St., Madras - 600 001.

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

முன்னுரை

சென்னை
23-11-79

பகவானது பிறந்த நாளான இன்று இந்தக் கட்டுரைக் கோவையை அவரது திருவடித் தாமரைகளில் வைத்து வணங்குகிறோம்.

பகவானது வரலாறும் அவரது அருளிச் செயல்களும், அவரது அரிய அருளுபதேசங்களும், கீதா விளக்கமும், குட்டிக் கதைகளும், 1979ம் ஆண்டு பிருந்தாவனத்தில் வேனிற்கால ஆன்மீகப் பயிற்சி முகாமில் அவர் ஆற்றிய உரைகளில் சிலவும் சுருக்கமாக இந்தச் சிறிய நூலில் இடம் பெற்றிருக்கின்றன.

பகவான் எனும் ஆழ்கடலை அளக்க முடியுமோ? கடலிலிருந்து முத்தெடுப்பதுபோல, ஏதோ சிற்சில ஒளிக்கதிர் மணிகளைப் பொறுக்கி இங்கே தந்திருக்கிறோம்.

படித்துப் பயனடையும் அனைவருக்கும் எம் தாழ்வான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நூலைச் சாத்தியமாக்கிய பகவானுடைய பேரருள் என்றும் நமக்குத் துணை நிற்பதாக!

பி. கே. சுந்தரம்
சென்னைப் பல்கலைக் கழகம்

Koviloor Digital Library

பொருளடக்கம்

			பக்கம்
1.	சத்திய ஒளி	...	1
2.	வேனிற் காலச் சாரல்கள்	...	22
3.	ஸத்ய ஸாயி ஸேவா ஸமிதி	...	28
4.	ஷிர்டி பாபாவும் ஸத்ய ஸாயியும்	...	30
5.	அருளில் விளைந்த அதிசயங்கள்	...	36
6.	பகவானும் பகவத்கீதையும்	...	50
7.	பகவானின் குட்டிக் கதைகள்	...	62
8.	இதய விளக்கு	...	63
9.	கண்ணனும் கண்ணாடியும்	...	64
10.	கண்ணுக்குத் தெரியாத பழங்கள்	...	66
11.	இரட்டிப்புக் கூலி	...	67
12.	சப்பை மூக்கு	...	68
13.	தன்னம்பிக்கை	...	70
14.	பணம் படுத்தும் பாடு	...	70
15.	மூன்று கேள்விகள்	...	71
16.	கஞ்சாவும் சாக்கட்டியும்	...	73
17.	கண்ணனின் தலைவலி	...	74
18.	கரடியும் மாயையும்	...	75
19.	தானிஷா பாரதம்	...	76
20.	நஷ்ட ஈடு	...	79
21.	கர்வ பங்கம்	...	80

Koviloor Digital Library

சத்திய ஒளி

1

சிவப்பும் பழுப்புமான மலைகளின் மையத்தில் ஆழ்ந்து அகன்ற பள்ளத்தாக்கு. அதனூடே ஓடும் அழகிய ஆறு. அதன் கரையிலே அமைதியான சின்னஞ்சிறு கிராமம். அதுவே புட்டபர்த்தி.

ஒரு காலத்தில் ஊரை ஆண்ட குறுநில மன்னர்களின் தலைநகரம் அது. பழம்பெருமை மறைந்து மன்னர்களையும் மனிதர் மறந்து விட்டபோதும், அறிவுக்கும் அருட்செல்வத்துக்கும் ஓர் அரும் பண்ணையாகவே தொடர்ந்து வளமாக விளங்கியது. புட்டபர்த்தி இந்த நிலத்தை ஆண்ட பழம் பெரும் மன்னர் வழிவந்த ராஜுக்களின் குடும்பம் கிராமத்து இளம் உள்ளங்களைக் கல்வியினால் பண்படுத்தும் பணியினைத் தொடர்ந்து செய்து வந்தது.

கடமைகளைச் செய்துகொண்டு நூறு ஆண்டுகள் வாழ்வாயாக என்று வாழ்த்துகிறது வேதம். கொண்டமராஜு நூறாண்டு வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர். மெய்யறிவு புகட்டும் மறை நூல்களின் கரை கண்ட சிறந்த அறிவாளர். கண்ணனின் ஆசைப் பத்தினியான சத்தியபாமைக்கு நித்தியமான கோயில் ஒன்றைத் தமது பக்திக்குச் சான்றாகக் கட்டி மகிழ்ந்தவர்.

கொண்டமராஜுவின் தங்கப் புதல்வர் வெங்கப்ப ராஜு. மூதாதையரில் முற்றுந்துறந்த அவதூதராக விளங்கிய வெங்க அவதூதரின் நினைவாக இப்பெயரை தமது பிள்ளைக்கு இட்டார் கொண்டமராஜு.

Koviloor Digital Library

வெங்கப்பராஜுவுக்கு வாய்த்த வாழ்க்கைத் துணைவியார் பக்தியில் பழுத்த பலா. அந்த அம்மையாரது தந்தையார் அம்மையப்பராகிய ஈசனுக்கு ஆலயம் எடுப்பித்த வேளையில் குல விளக்காக வந்துதித்ததனுல் ஈசுவராம்பா என்னும் திருநாமம் பெற்ருர்.

வீணையும் நாதமும் போல், ரிக்கும் ஸாமமும்போல் இயைந்த இன்பமான இல்வாழ்க்கை இவர்களுடையது.

வெங்கப்பராஜு தமது தந்தையாரைப் போலவே, கலை யுள்ளம் கொண்டவர். இதிகாச புராணங்களிலிருந்து சுவை யான நிகழ்ச்சிகளை எடுத்து நாடகமாக்கி அரங்கத்தில் நடித்துக் காட்டுவார். அங்கு புராண பாத்திரங்களெல்லாம் உயிர் பெற்று நடமாடுவர். படம் பிடித்தது போல அக் காட்சிகள் காண்போர் மனத்தில் பதிந்து நிலைத்துவிடும். நூறு புத்தகங்களைப் படித்தாலும் பெறமுடியாத அறிவையும் பண்பையும் தமது ஒரே நாடகத்தின்மூலம் புகட்டிவிடுவார் வெங்கப்பராஜு.

இந்த இன்பத் தம்பதிகளுக்கு மூன்ருவது பிள்ளையாக, நான்காவது குழந்தையாக வந்து தோன்றியவர்தான் இந்த வரலாற்றுத் தலைவரான பகவான் ஸத்ய ஸாயி பாபா. இந்தப் பெயர் கோடிக்கணக்கான பக்தர் குழாம் ஏற்றுக் கொண்ட பிற்காலத்துப் பெயர். குழந்தைக்குத் தாய் தந்தையர் இட்ட பெயர் சத்தியநாராயணு. குழந்தை தோன்றிய ஆண்டு 1926, நவம்பர் மாதம், 23ம் தேதி.

குழந்தை வளர்மதி போல் நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்ந்தது. குஞ்சுக் கைகளையும் கால்களையும் உதைத்துக்கொண்டு, அரி மிரட்டிச் சிரித்து, குப்புறப்படுத்துத் தலையைத் தூக்கி நீந்திப் பின் தவழ்ந்து, நிமிர்ந்து தளர் நடை பயின்று, மழலைபேசி கொழுகொழு வென்று தங்கச் சிலையாக கிருஷ்ணவிக்ரகமாகச் செழித்து மலர்ந்து முத்துப் பல் வரிசை முகிழ்த்து கொள்ளையாக

Koviloor Digital Library

அள்ளிக் கொண்டுபோகும் அழகுடன் வளையவந்தது. தன்னை யொத்த சிறுவர்களுடன் விளையாடி தெருப்புழுதியை மேனி யெங்கும் பூசிக்கொண்டு அன்னைக்கு இன்பத் தொல்லையின் இறுதியைத் தந்தது.

நாட்களும் மாதங்களும் வருடங்களாகப் பவனி சென்றன. தீராத விளையாட்டுப் பிள்ளையான சத்தியநாராயணா சிறுவர் உலகத்தின் தலைவனாக இருந்தான். நாட்டாண்மை அவனிடம் இயற்கையாகவே உடன் பிறந்து செயற்பட்டது. தோழனுக்குத் தோழனாக தோளொடு தோள் நின்று குறும்பு கள் செய்தவன், அவர்களிடையே நல் ஆசிரியனுயும் சட்டாம் பிள்ளையாகவும் எட்ட நின்று இயங்கினான்.

நண்பர்களுக்குத் துன்பத்தில் கைகொடுத்து இன்புற்ற வன் அவர்களுடைய குற்றங்களைக் கடிந்து மற்றைக் காமங்கள் மாறத் திருத்தவும் செய்தான். தான் முகம் சுளிக் காமல் மனம் சளைக்காமல் உடல் களைக்காமல் உடுக்கை இழந்தவன் கைபோல நண்பர்களின் இடுக்கண் களைந்தான்.

கொடுக்கும் பழக்கம் அப்பொழுதே வந்துவிட்டது. காசு கொடுத்துக் கடை வீதியில் வாங்கின பண்டங்களல்ல அவன் வாரி வழங்கியது. எங்கிருந்தோ வந்த இந்த மாயக்கண்ணன் காலிப் பையில் கைவிட்டு வெளியே எடுக்கும்பொழுது, அதில் இனிப்புப் பணியாரங்களும், பென்ஸில்களும், ரப்பர்களும், பொம்மைகளும், பூக்களும் பழங்களுமாக குவியல் குவியலாக "எங்கிருந்தோ" வரும்.

பலாப் பழத்தை ஈ மொய்ப்பதுபோல நண்பர் குழாம் எப்பொழுதும் இவனைக் குதூகலத்துடன் சுற்றி நின்றது.

ஐந்து வயதாகி முடிந்து ஆறுவது வயது வந்தது. சத்திய நாராயணாவைப் பள்ளியில் சேர்த்தார்கள். அங்கும் இவனது விளையாட்டுத் தொடர்ந்தது. "பிரம்ம ஞானி" என்று பட்டப்பெயர் அப்பொழுதே சூட்டப்பட்டு ஒட்டிக் கொண்டது. அற்புதங்களின் விளைச்சலில் குறைச்சலில்லை.

Koviloor Digital Library

ஊரெங்கும் இவனைப்பற்றியே பேச்சாயிற்று. ஆற்றங்கரையில், கோயிலில், பொதுச் சாவடியில், சமையற்கட்டில், கிணற்றடியில், கழனிகளில் இரண்டு பேர் ஒன்று கூடி உரையாடிய இடமெல்லாம் சத்திய நாராயணாவின் மகிமை மையப் பொருளாக இருந்தது.

ஒரு சமயம் வகுப்பில் இவனை ஆசிரியர் பெஞ்சின்மேல் நிற்க வைத்தார். இவனும் நின்றான். இந்தப் பூனையும் பாலைக்குடித்திருக்குமா என்று எண்ணும்படி பால் வடியும் முகத்தில் ''ஐயோ பாவம்'' என்ற பாவத்தோடு நின்றான். அதன்பின், ஆசிரியர் தமது நாற்காலியினின்று எழுந்து நிற்க முயன்றார்; முடியவில்லை. பசை வைத்து ஒட்டியதுபோல் நாற்காலி அவரைப் பிடித்துக்கொண்டது. சத்திய நாராயணாவின் தண்டனை முடிந்து பெஞ்சின் மீதிருந்து கீழே இறங்கிய பொழுதுதான் ஆசிரியருக்கும் நாற்காலியிலிருந்து விடுதலை கிடைத்தது.

சத்திய நாராயணாவுக்குப் பாடவும் ஆடவும் தெரிந்திருந்தது. மேடையில் ஏறி நடிப்பதும் கைவந்த கலையாக இருந்தது. பாட்டெல்லாம் தெருப்பாட்டாக இல்லாமல் திருப்பாட்டாகவே அமைந்தது. இறைவன் திருநாமங்களைத் தானும் பாடி பிறரையும் பாடச் செய்தான் சத்தியா. தானே பாடல்களைப் புனையும் ஆற்றலும் அவனிடம் பொருந்தியிருந்தது.

ஆனால் உலக இயற்கைக்கு மீறிய, மானிட அறிவிற்கு எட்டாத பெரும் அருட்செயல்கள் அவனிடமிருந்து அருவி போல பெருகிக் கொண்டேயிருந்தன. அந்த அருவியில் குளித்துத் திளைத்த எண்ணற்ற எளிய உள்ளங்கள் சத்தியாவை வாயார வாழ்த்தி, உளமார உகந்தன.

உயர்நிலைப் பள்ளியில் ஈராண்டு காலம் படித்து முடிப்பதற்கு முன்னமே, அருள் வெள்ளமான சத்தியாவின் உள்ளத்தைச் சின்னஞ்சிறு பள்ளி அறைகளில் வைத்துப் பூட்ட

Koviloor Digital Library

முடியாது என்று தெரிந்து போயிற்று. அளப்பற்கரிய அந்த ஆதிசக்தி உலக முழுவதையும் தன் அன்பினால் பிணைப்பதற்காக சின்னஞ்சிறு எல்லைகளை உதறித் தள்ளிவிட்டு உற்சாகமாகப் புறப்படும் நேரம் வந்தடைந்தது.

ஆனால் என்ன பேதைமை! சிற்றறிவுக்கு எட்டாத செயல்களெல்லாம் சுற்றியிருந்த வெற்று மனிதர்களுக்கு மன நோயாகவும் உள்ளப் பேயாகவும் தோன்றியது. மருத்துவர்களும் மந்திரவாதிகளும் தங்கள் கைவரிசையைக் காட்ட வரிசையாக வந்தார்கள். சத்தியாவை அடித்து, கொடுமைகள் பல செய்து, பேயாட்டுகிறோம் என்று சொல்லித் தாங்களே பேயாட்டம் ஆடினார்கள். சத்தியா அசையவில்லை; ஆடவில்லை. சுழலும் சக்கரங்களைத் தாங்கும் அச்சாணி போலத் தான் நிலையாக நின்று பிறரை ஆட்டுவித்துக் கொண்டிருந்தான். இப்படி எத்தனை நாளைக்குத்தான் நடக்க முடியும்? ஒரு முடிவுக்கு வரவேண்டிய அந்த வேளையும் வந்தது. 1940ம் ஆண்டு மேமாதம் 13ந்தேதி கிளி கூண்டை விட்டு அகண்ட பெருவெளியில் பறக்கத் தொடங்கியது. வேண்டுவதை வந்தவர்களுக்கெல்லாம் வாரி வழங்கிவிட்டு அந்த வள்ளல் ''நானே ஸாயிபாபா'' என்று உலகறிய உணர்த்தினார். அடுத்து அக்டோபர் மாதம் இருபதாம் தேதி பள்ளியிலிருந்து திரும்பியதும், தனது புத்தக மூட்டையைத் தனது அண்ணனது வீட்டு வாயிற்படியில் விசிறி எறிந்தார். சத்தம் கேட்டு வாயிற் கதவைத் திறந்த அன்பு அண்ணியிடம் பாபா சொன்னார்: ''எனக்கு இங்கு இனி வேலையில்லை. நான் போகிறேன். என்னுடைய வேலை வெளியே நிறைய காத்துக் கிடக்கிறது. என்னுடைய அன்பர்கள் என்னை அழைக்கிறார்கள்!'' சொல்லிக்கொண்டே பாலபாபா திரும்பிப் பாராமல் தெருவில் இறங்கி நடந்தார். தடுத்து நிறுத்தப் பார்த்தவர்களுக்கு வந்த பதில் இதுதான்: ''மாயை விலகியது; நான் உங்களுக்கு மட்டும் உரியவனன்று. இந்தத் துறவினில் சொந்த உறவுகளுக்கு இனி இடமில்லை. நான் ஸாயிபாபா. இதனை மறந்து விடாதீர்கள்!''

Koviloor Digital Library

ஒளி படைத்த பாலஸாயியின் உருவம் விரைவாக நடந்து ஊரின் ஒருபுறமிருந்த மரத்தினடியில் வந்து அமர்ந்தது, தென்முகக்கடவுளைப் போல. சில கணங்களுக்குள்ளாக சத்தியாவின் துறவு காட்டுத் தீயினும் கடிது பரவிவிட்டது. ஊர் முழுதும் அவர் முன்னர் வந்து கூடியிருந்தது. ஸாயியின் இனிய குரலிலிருந்து ''மானஸ பஜரே குருசரணம்; துஸ்தர பவ ஸாகரதரணம்'' என்ற பாடல் எழுந்தது. குருவின் சரணாரவிந்தங்களைப் பஜி, மனமே! ''பிறவிக் கடலைக் கடந்து செல்''! ஒரு குரலாக எல்லா இதயங்களும் ஒன்றி இசைத்தன. இது நடந்தது உரவகொண்டாவில்.

புட்டபர்த்திக்குத் திரும்பிய பாலபாபா ஆயிரம் ஆயிரம் நொந்த உள்ளங்களுக்கு புத்துயிரும் புத்துணர்ச்சியும் கொடுத்து அவர்களையும் மனிதர்களாக்கும் தன் பணியைத் தொடங்கிவிட்டார்.

கரைபுரண்ட வெள்ளம்போல் திரண்டு வந்த மக்களுக்காகப் பெரிதான மண்டபம் எழும்பியது.''பிரசாந்திநிலயம்'' உருவாயிற்று. பாபா வைத்த பெயர் அது. நவராத்திரியும் சிவராத்திரியும் கோலாகலக் கொண்டாட்டமாகி அன்பர்களையெல்லாம் புட்டபர்த்தியில் கூட்டுவித்தன. பாபாவிடமிருந்து சிவலிங்கம் தோன்றும் அதிசயக்காட்சி ஒவ்வொரு சிவராத்திரியும் நிகழலாயிற்று.

''பிரசாந்தி நிலயம்'' என்ற பெயர் ''மிகுந்த அமைதியின் உறைவிடம்'' என்பதனைக் குறிக்கின்றது.

பிரசாந்தி நிலயத்தின் அமைப்பே ஓர் அத்யாத்மவித்தையின் எழில்மிகு ஆலயமாக உருவெடுத்திருக்கிறது. சுற்றிலும் நிமிர்ந்து நிற்கும் மலைகள் காலமெல்லாம் மோனத் தவத்தில் ஆழ்ந்திருக்கும் முனிகணங்களைப் போலத் தோற்றமளிக்கின்றன.

நிலயத்தின் பின்புறத்தில் பகவான் பாபா ஓர் ஆலங்கன்றை நட்டிருக்கிறார். ஆல்போல் தழைத்து விழுதுவிட்டு

Koviloor Digital Library

விழுதுகள் தூண்களாகிப் படர்ந்து விரிந்த சத்தியத்தின் காட்சியைத் தாங்குவதற்கு அடையாளமாக இந்த ஆலங் கன்று நடப்பெற்றது. உயிருக்கு உணர்வூட்டியது போல, இந்த ஆலின் அடியில் பகவான் ஒரு யந்திரத்தகட்டைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்.

பிரசாந்தி நிலயத்துக்குள் நுழையும்போதே படிப்படியாக உள்ளமும் உணர்வும் தூய்மையாவதைக் காட்டும் வகையில் ஒவ்வோர் கட்டும் வட்டமாக அமைக்கப் பெற்றிருக்கிறது. பிரசாந்தி நிலயத்தின் முதல் நுழைவாயில் ''இருள் வாசல்'' என்று அழைக்கப்படுகிறது. மெய்யுணர்வு தோன்றுமுன் ஓர் இருட்படலம் உயிரைக் கவ்வும். இதை "Night of the Soul" என்று கூறுவதுண்டு. அடுத்துவரும் உணர்வின் ஒலிக்கு இந்த இருள் முன்னோடி.

இரண்டாவது நுழைவாயில் தாமரை வட்டத்தைச் சுற்றி யிருக்கும் தோட்டத்தில் இருக்கிறது. இங்கிருந்து பார்த்தாலே பிரசாந்தி நிலயத்தின் கட்டடம் கம்பீரமாக எழும்பியிருப் பதைக் காணலாம். மூன்றாவது நுழைவாயில் வழிபாட்டு மண்டபத்தின் தொடக்கத்தில் இருக்கிறது. இதுவே ''அறிவு வாசல்'', பிரசாந்திக்குப் பாதை.

பிரசாந்தி நிலயத்தின் அமைப்பு வட்டத்துக்குள் வட்டமாக இருக்கிறது. முதல் வெளி வட்டம் வெறும் தரையாய் மணற்பாங்காக இருக்கிறது. இரண்டாவது வட்டம், அடர்ந்து வளரும் குட்டையான புதர்ச்செடிகள் நிரம்பியிருக்கிறது. இவற்றை அவ்வப்பொழுது கத்திரித்து விடவேண்டும். முளைக்க முளைக்க வெட்டி விடவேண்டும்.

இதையடுத்து சிவந்த வண்ணந்தீட்டிய வட்டங்கள் இரு படிகளாக ஒன்று கீழேயும் மற்றொன்று அதற்கு மேலேயும் கட்டப்பட்டிருக்கின்றன.

இவற்றில் ஏறினால், மூன்றாவது வட்டம் தோன்றுகிறது. பசும்புல்வெளியாக, பச்சைப்பாய் விரித்தாற்போல் கண்

Koviloor Digital Library

னுக்கும் கருத்துக்கும் குளுமையாய் அமைதியையும் இன்பமுமூட்டும் இடம் இது.

இதைக் கடந்தால், பரந்தவெளி காணப்படுகிறது. இங்கு உட்கார்ந்து இளைப்பாறித் தெம்பு பெறலாம்.

இதையும் கடந்தால், கண்முன்பு தூண் ஒன்று தென் படும். இதன் மேலே உச்சியில் மலர்ந்த தாமரைப்பூ ஒன்று அழகாக அமைக்கப் பெற்றிருக்கிறது. அதன் நடுவே ஒரு தீபம் ஒளி வீசுகின்றது. தூணைச் சுற்றியிருக்கும் வட்டத்தில் எட்டுப் பூந்தொட்டிகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

முதல்வட்டம் பாசங்களின் பாலைநிலமானதால் அது மணற்பாங்காக வெறும் தரையாக இருக்கின்றது. சொந்த விருப்பு வெறுப்புக்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு, ஊர் உலக வம்பு வழக்குகளை எல்லாம் மறந்துவிட்டு, அழுக்குப் படாத வெண்மணலாக உள்ளத்தைத் தூசுதட்டித் துப்புற வாக்கிக்கொண்டு, மணல் ஒட்டாததுபோல தீயவை ஒன்றிலும் ஒட்டாமல் ஒதுங்கிக் கொண்டு, உள்ளே நுழைய வேண்டும் என்பதை இது உணர்த்துகின்றது.

பாசக்கயிற்றுக்குப் பாலைநிலமாக உலர்ந்துபோனாலும், உயிர்களனைத்தையும் தன் அன்பு என்னும் பசுமைக்குள் அரவணைக்க உள்ளத்தில் ஈரம் வேண்டும். இந்த ஈரத்தில் சிலபொழுது அன்பு என்னும் பயிரோடு, விட்டகுறை தொட்ட குறையாக திமிறிக்கொண்டு சினம் என்னும் களை வந்து முளைக்கக்கூடும். அதை அறிவு என்னும் கத்தி கொண்டு வெட்டி எறிய வேண்டும். மீண்டும் மீண்டும் அவை தலை யெடுக்கும். மிகுந்த விழிப்புடனிருந்து அவற்றை முளை யிலேயே துணித்து விடவேண்டும். இதை இரண்டாவது வட்டம் குறித்து நிற்கிறது.

அடுத்துவரும் இரண்டு படிகளும் வெறுப்பின் இரண்டு வகைகளைக் காட்டுகின்றன. ஆசைகள் நிறைவேறாதபோது உண்டாகும் வெறுப்பும், தனக்குப் பிறர் துன்பந்தரும்போது

Koviloor Digital Library

தோன்றும் வெறுப்புமே இவை. இதைக் காட்டுவதற்குத் தான் இவை சிவப்பு வண்ணம் பூசப்பட்டிருக்கின்றன.

காமம், வெகுளி, வெறுப்பு என்ற இம்மூன்றும் நீங்கிய மனநிலையில் அடுத்த வட்டத்தில் கால்வைக்கும் ஒருவன், அமைதியையும் ஆனந்தத்தையும் பெற்று, பேரன்பிற்கு விளை நிலமாகிறான் என்பதைப் புல்வெளி காண்பிக்கிறது. எல்லா வற்றையும் சமநோக்குடன் பார்க்கின்ற பக்குவம் ஏற்படுவது இந்த வட்டத்தில்தான்.

அடுத்துவரும் திறந்தவெளியில் இளைப்பாறுவது என்றால், தான் இதுவரை பயின்ற மனப்பக்குவத்தையெல்லாம் மனத்தில் நிறுத்திப்பார்த்து அவற்றை நிலைப்படுத்திக்கொள் வதுதான். யோகம் பலிக்கும் வேளை நெருங்கிவிட்டதற்கும் இது அடையாளமாகும்.

இங்கிருந்து தெரியும் தூண் யோகத்தைக் குறிக்கும். இறைவனோடு ஒன்றுவதுதான் யோகம் எனப்படும்.

அதன்மேல் இதழ் விரிந்து மலரும் தாமரை, உண்மை என்னும் சூரியனைக் கண்டதும் மலரும் உள்ளத்தாமரையைக் குறிக்கும்.

அதன் நடுவில் ஒளிரும் தீபம் உள்ளத்தின் சத்திய ஒளி யாகும்.சுற்றிலும் வைக்கப்பட்டிருக்கும் எட்டுப் பூஞ்செடிகளும் எட்டு யோகசித்திகளைக் குறிக்கும். அணிமா, மஹிமா, லகிமா, கரிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம், வசித்வம், ஈசித்வம் என்பவையே அந்த அட்டமாசித்திகள். அணுவுக்கு அணுவாய்ச் சிறுப்பது, மலைக்கும் மலையாய் வளர்வது, காற்றி லும் லேசாகி விடுவது, இரும்பினும் கனமாகிவிடுவது, வெகு தொலைவில் இருக்கும் இடங்களையும் அடைவது, நினைத்த தைப்பெறுவது, பிறரை வசீகரிப்பது, எல்லாவற்றையும் அடக்கி ஆள்வது என்பன இவற்றில் அடங்கும்.

பிரசாந்தி நிலயத்தில் பகவானால் ஏற்றப்படும் பிரசாந் திக்கொடி ஓர் அமைதிக்கொடி. அதில் பிரசாந்திநிலயத் தின்

Koviloor Digital Library

அமைப்பு எழுதப்பட்டுள்ளது. அமைதியை ஒவ்வொருவரும் தமது உள்ளத்தில் குடிஏற்றி வைக்க வேண்டும் என்பதனை இக்கொடியேற்றும் குறித்து நிற்கின்றது.

மூன்ருவது அறிவு வாசலைத் தாண்டியதும் மையமான பிரார்த்தனை மண்டபம் இருக்கிறது. இதுவே நிலயத்தின் சிறப்பான பகுதி. இந்த மண்டபத்தின் இருமருங்கினும் உள்ள எடுப்பான மேடைகளில் ஷிர்டி ஸாயிபாபாவின் திரு உருவப்படமும் பகவான் ஸத்ய ஸாயி பாபாவின் திருவுருவப் படமும் வைக்கப்பட்டிருக்கின்றன.

அதிகாலை 4-30 மணிக்கெல்லாம் ஓங்காரமணி ஒலிக்கிறது. பிரார்த்தனைக்கும் தியானத்துக்கும் அது அழைக்கிறது. சரியாக 4-45க்கு, அன்பர்கள் ஓம்காரத்தை ரீங்காரம் செய்யத் தொடங்குகிருர்கள். ஆங்காரங்களெல்லாம் அடங்கி அமைதி யுற்ற அந்த வேளையில் ஆழ்ந்த மோனத்தில் இறைவனது திருப்பெயர்களை அன்பர்கள் சிந்தித்துத் தியானம் செய்கி ருர்கள்.

பின், திருமறைகள் ஓதப்பெறுகின்றன. ஒருருவம் ஒரு நாமம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமங்கள் பாடப்பட்டுப் பரவச மூட்டுகின்றன.

இதேபோன்று ஒவ்வொருநாளும் மாலை வேளைகளில் புராண இதிகாசங்களும் வேத வேதாந்த நூல்களும் எடுத்து விளக்கப் பெறுகின்றன.

பிரசாந்தி நிலயத்திற்குள் வரும் பேறுபெற்ற ஒவ்வொரு வரும் பகவானுடைய தரிசனம் கிடைக்கப் பெறுவதோடு, அவரோடு சில விஞடிகளேனும் தனியே இருக்கும் வாய்ப் பையும் அடைந்து அருள் மழையில் குளித்துத் தூய்மை யாகித் திரும்புகிருர்கள். இவ்வாறு மக்களைப் பார்ப்பதற் கென்றே தனி அறை ஒன்றைப் பகவான் பிரசாந்தி நிலயத் தில் ஒதுக்கியிருக்கிருர். ''நானிருக்கப் பயமேன்'' என்ற அபயப்ரதானம் அங்கு அனவரதமும் நடைபெற்றுக் கொண்டி

Koviloor Digital Library

ருக்கின்றது. ''நம்பினோர் கெடுவதில்லை; நான்மறை தீர்ப்பு'', ''தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் தரப்படும்.'' இச் சொற்கள் மீண்டும் மீண்டும் மெய்ப்பிக்கப்படுகின்றன.

பிரசாந்தி நிலயத்தில் நடைபெறும் பஜனைகளில் பெரும் பாலும் பகவான் கலந்து கொள்ளும் நேரங்கள் நெஞ்சை அள்ளும் கண்கொள்ளாக்காட்சிகள். பஜனை என்பது வெறும் ஆரவாரமன்று; ஆடம்பரச் சடங்குமன்று. பிறர் பார்த்துப் பிரமிக்க வேண்டுமென்ற தடபுடலான வெறுங்கூத்துமன்று. இறைவனிடத்து உள்ளார்ந்த ஈடுபாட்டோடு அவனைப் பாடு வதுதான் ''பஜனை'' யாகும். பெருங்கூட்டத்தை கூட்டி வைத்துக் கொண்டு ஜாலராக்கள் ஒலிக்க உதட்டளவில் செய்யப்படும் பஜனை வெறும் போலி ஏமாற்று வித்தையாகும். இதைக் காட்டிலும், தன்னந் தனியாக தத்தம் வீட்டிலேயே பாடித் துதிப்பது எவ்வளவோ மேல்.

ஆனால், ஒருமித்த கருத்தோடு, மனமொன்றிப் பாடும் பொழுது, கூட்டுப் பிரார்த்தனை மிகுந்த பயனை அளிக்க வல்லது. தாளம் போட்டுக்கொண்டு நாமாவளியை இசைக்கும்பொழுது, அந்த இசையிலும் லயத்திலும் உள்ளம் லயித்து, தனிமனிதன் என்ற எண்ணம் மறைந்து, ஒரு பொது உள்ளம் அங்கே உருவாகி விடுகிறது. தான் என்பது ஒரு சிறு பொழுதேனும் மறைந்து விடுவதுதான் இந்த இறை வழிபாட்டின் நோக்கமும் முடிவுமாகும்.

கைகளைத் தட்டினால் காக்கைகள் பறந்து போவது போல, கைகளினால் தாளம் போட்டுக்கொண்டு தலைவன் நாமத்தைப் பாடும்பொழுது, காமம்போன்ற காக்கைகளெல் லாம் கலைந்தோடி விடுகின்றன என்பார் பகவான்.

எல்லாத் தெய்வங்களைப் பற்றிய பாடல்களும் பிரசாந்தி நிலயப் பஜனைகளில் இடம் பெறுகின்றன. எந்தத் தெய்வத் தைப் பற்றிப் பாடினாலும், அது கொண்டு சேர்க்கும் இடம் முடிவில் ஒன்றுதான்.

Koviloor Digital Library

பாபாவே பல பாடல்களை இயற்றியிருக்கிறார். உதாரணமாக ஒரு பாடல் மிக நுட்பமான கருத்தமைந்து இருப்பதை இங்கு எடுத்துக் காட்டலாம்.

"நம்முடைய இதயம் ஒரு விவசாயப் பண்ணை; மனமே உழுவதற்கு வேண்டிய ஏர்; ஸத்துவமும், ரஜஸ்ஸும், தமஸ்ஸும் உழவு மாடுகள்; பகுத்தறிவு என்னும் சாட்டையை வீசி மாடுகளைத் தூண்டி இதய வயலை மன ஏரைக் கொண்டு உழுது நடவு செய்யுங்கள்! வயலுக்கு வேண்டிய உரம் உள்ளத்தின் உரம்தான்; அன்பே விதைகள்; பக்தியே மழை; மனமாசுகளே பிடுங்கி எறிவேண்டிய களைகள்; இறைவனோடு ஒன்றி விடுவது இதற்கெல்லாம் பயனான அறுவடை!"

பாடும்பொழுதே இதய வயல் பயிராகித் தழைத்து அமோக விளைச்சலை அள்ளித் தந்து விடுகிறது.

பிரசாந்தி நிலயத்தில் உள்ள பிரார்த்தனை மண்டபம் எழும்பிய கதை வெகு சுவையானது. பிரம்மாண்டமான இரும்புக் கிராதிகள் திருச்சியிலிருந்து ரயிலில் பெனுகொண்டாவுக்குக் கொண்டுவரப்பட்டன. அங்கிருந்து பதினறு மைல்கள் சாலைவழியாகக் கொண்டு வந்து சேர்ப்பது எப்படி? நம்மூர்ச் சாலைகளைப் பற்றித்தான் நமக்கு நன்ருகத் தெரியுமே! இந்தப் பதினறு மைல்களுக்கு நடுவில் ஏழாவது மைலில் ஓர் ஆறு வேறு. இதையும் தாண்டினலும் கூட, அதன் பின்னர் எதிர்ப்படும் சின்னஞ் சிறு கிராமங்களின் வளைந்து நெளியும் சந்துகளின் வழியாகப் புகுந்து புறப்படுவது எப்படி? புக்கப் பட்டணம் வந்து சேர்ந்துவிட்டாலும், அப்புறம் ஒரு சாலை என்று பெயருக்கு அழைக்கப்படும் மண் பரப்பைக் கடக்க வேண்டும். இதையும் சமாளித்துவிட்டாலும்கூட, சுமார் மூன்று பர்லாங் தூரத்துக்குப் பரந்து விரிந்து கிடக்கும் சித்ராவதி ஆற்றின் மணற்பரப்பைத் தாண்டிச் செல்வது எப்படி? பளு தாங்காமல், சிறு பாலங்கள் தகர்ந்து விடக் கூடும். எந்த இடத்திலும் வண்டியின் சக்கரங்கள் மண்ணில் புதைந்து விடக்கூடும். இதையெல்லாம் செய்து விடுவதாக

Koviloor Digital Library

வைத்துக் கொண்டாலும் இந்த ராட்சசக் கிராதிகளைத் தூக்கி பல அடிகள் உயரத்தில் பொருத்துவது அடியோடு முடியாத காரியம் என்று வல்லுநர்கள் கையை விரித்து விட்டார்கள். ''இரும்பும் வேண்டாம், கிராதியும் வேண்டாம்; உங்களுக்குப் புண்ணியமாய்ப் போகிறது; வேறு ஏதாவது சொல்லுங்கள், செய்து விடுகிறோம்'' என்று பகவானிடம் முறையிட்டார்கள்.

இந்த வல்லுநர்களின் தலைவர் அநந்தபூரில் தம் வீட்டில் இரவெல்லாம் இதனையே சிந்தித்துக் குழப்பிக் கொண்டிருந்தார். பிறகு, களைத்துப்போய் நடுநிசி அளவில் சிறிது கண்ணயர்ந்தபொழுது, வீட்டுவாசலில் ஏதோ பெரும் இரைச்சல் கேட்டுக் கண்விழித்தார். ஜன்னல் வழியே இருட்டில் அவர் உற்றுப்பார்த்தபொழுது, அவர் கண்ணுக்குத் தென்பட்டது ஒரு பெரிய பளுதூக்கி யந்திரம். துங்கபத்ரை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு வந்த அணைக்கட்டு வேலைக்காக அமர்த்தியிருந்த யந்திரம் அது. இன்னும் சற்று உன்னிப்பாக ஆராய்ந்ததில், அது பழுதடைந்துபோய் இவர் வீட்டின் வாசலில் நின்றுவிட்டிருந்தது.

அவ்வளவுதான்; வல்லுநரின் மூளையில் ஓர் ஒளிக்கீற்று பளிச்சிட்டது. ஓடினார் புட்டபர்த்திக்கு. பாபாவிடம் போனார். செய்தியைச் சொல்லி, இந்த யந்திரத்தை மட்டும் பழுது பார்த்துச் சரிசெய்து மீண்டும் ஓட்ட முடியுமானால், அதன் சொந்தக்காரரிடம் சம்மதம் பெற்று இரும்புக் கிராதிகளைப் புட்டபர்த்திக்குக் கொண்டு வந்து சேர்த்து விடலாம் என்றார்.

பகவான் புன்முறுவலுடன் கேட்டார். பின், கையை யசைக்க விபூதி தோன்றியது. அதைப் பெற்றுக் கொண்ட அந்த வல்லுநர் நேரே யந்திரத்தை அடைந்து அதன் மேலெங்கும் அந்த விபூதியைத் தூவினார். டிரைவரிடம் அதை ஓட்டும்படி சொன்னார். விந்தையிலும் விந்தை! சண்டித்தனம் செய்து நின்றுவிட்ட அந்த பளுதூக்கி வண்டி ''தடதட''வென்று இடித்துக் கொண்டு உயிர் பெற்றது.

Koviloor Digital Library

பின், காரியங்கள் துரிதமாக நடைபெற்றன. பெனு கொண்டாவிலிருந்து கிராதிகளைத் தாங்கிக் கொண்டு, அந்த வண்டி மேடுபள்ளங்களையும், வளைவுநெளிவுகளையும், சேற்றையும், ஆற்றையும் ஒருங்கே கடந்து வந்து மணற்பாங்கான இடத்துக்கு வந்ததும் ஓர் இரைப்பு இரைத்து நின்றுவிட்டது. இது ஏதடா புது வம்பு என்று எல்லோரும் நினைத்தபொழுது, பாபாவிற்குச் செய்தி போயிற்று. விரைந்த பாபா எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, வண்டியில் தாவி ஏறினர். வண்டியோட்டியின் பக்கத்தில் அமர்ந்து, ''ஸ்டியரிங்''கைப் பிடித்தார்; திருப்பினர்; சுழற்றினர். அடங்காப்பிடாரியாக திமிறிய வண்டி, பகவான் கைப்பட்டதும், கைப்பாவையாக ஒடுங்கி சொன்னபடி கேட்டு ஓடி, பிரார்த்தனை மண்டபம் கட்டும் இடத்திற்கு வந்து சேர்ந்தது!

இதெல்லாம் சரி;கிராதிகளைச் சுவர்களில் ஏற்றிப் பொருத்த வேண்டுமே? இவ்வளவும் செய்து என்ன பயன்? தெய்வ ஸங்கல்பம் மறுபடிவேலை செய்தது. துங்கபத்ரை அணைக் கட்டிலிருந்து ஆட்கள் கொண்டுவரப்பட்டனர். கயிறுகள் இறுக்கப்பட்டன; சகடைகள் நிறுவப்பட்டன; நூற்றுக் கணக்கான குரல்கள் ''ஜெய் ஸாய்ராம்!'' என்று கோஷம் செய்தன. அதே வேகத்தில் கிராதிகள் எல்லாம் மேலே ஏறி விட்டன. மனிதனுல் முடியாது என்று கைவிடப்பட்ட முயற்சி, நடந்து முடிந்து விட்டது.

பிரசாந்திநிலயம், *1950*ம் ஆண்டு நவம்பர்மாதம்இருபத்து மூன்ரும் தேதி துவங்கப்பெற்றது. அப்போது பகவானுக்கு இருபத்து நான்கு வயது. நிலயம் கட்டி முடிக்க இரண்டு ஆண்டுகளாயின. இதன் ஒவ்வொரு கட்டத்திலும் பகவான் நுணுக்கமான கருத்துக்களை கட்டடக்கலை நிபுணர்களுக்குச் சொல்லி, இதை இப்படிச் செய்யவேண்டும், அதை அப்படிச் செய்ய வேண்டும் என்று திருத்தமாகவும் பொருத்தமாகவும் எடுத்துக் காட்டுவார். சிறந்த கலையுணர்வோடு பகவான் கூறுகின்ற யோசனைகள் அந்த நிபுணர்களையும் வியக்க வைக்கும். இவ்வாறு எழுந்த இந்தப் பிரார்த்தனை மண்டபம்,

Koviloor Digital Library

ஆசியாவிலேயே ஓர் அதிசயம் என்று பல்லோரும் பாராட்டக் கம்பீரமாகக் காட்சி தருகின்றது.

பிரசாந்திநிலயத்தை ஒட்டி இப்பொழுது ஒரு கல்லூரி நிறுவப்பட்டிருக்கிறது. அனந்தபூரிலும், பரோடாவிலும், ஜெய்பூரிலும், பங்களூரில் பிருந்தாவனத்திலும் கல்லூரிகள் ஏற்கனவே நடைபெற்று வருகின்றன. இவற்றில் பெண்களுக்கென்றே தனியான கல்லூரிகள் அனந்தபூரிலும், பரோடாவிலும், ஜெய்ப்பூரிலும் இயங்குகின்றன. பிரசாந்திநிலயத்தில் உற்சவங்கள் ஆண்டின் ஒவ்வொரு புண்ணிய தினத்திலும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றன.

இந்நாட்களில் சாயங்காலங்களில் பகவான் அன்பர்புடை சூழச் சித்ராவதி ஆற்றுக்குச் செல்வது வழக்கம். அங்கு மனத்திற்கினிய பஜனை கீதம் ஆற்றங்கரைக் குன்றுகளில் எதிரொலிக்கும். வானத்து முழு நிலாவும் நட்சத்திரங்களும் கூட இதைக் கண்டு கேட்டு மகிழும். மலைத் தொடர்களும் நின்று கவனிக்கும். ''சலசல'' வென்று சித்ராவதி ஆறு தன் உள்ளத்துக் கிளுகிளுப்பை இங்கிதமாக வெளியிட்டுக் கொண்டே புன்னகையுடன் ஓடும்.

எங்கு சென்றாலும், ஆற்றங்கரையும் கடற்கரையும் அருகில் இருத்தால் பகவான் பக்தர்களை அங்கு அழைத்துச் செல்லத் தவறுவதில்லை. அது கோதாவரியாக இருந்தாலும் சரி, அல்லது ஸ்வர்ணமுகி, வைகை, கங்கையாக இருந்தாலும் சரி, அந்தப் புண்ணிய நதிக் கரைகளில் சென்று அன்பர்களுடன் அளவளாவுவதும், அவர்களுக்கு அங்கே இதோபதேசம் செய்வதும் பகவானுக்கு மிகவும் இனிய பொழுதுகளாகும். பக்தர்களுக்கோ ஒரே ஆனந்த பரவசம் தான்.

அதே போலத்தான் கடற்கரைகளும், சென்னை, தரங்கம்பாடி, மசூலிப்பட்டணம், தென்குமரி, கோவலம் போன்ற இடங்களிலெல்லாம் பகவானின் உள்ளம் குதூகலிக்கும். சூழ இருக்கும் தொண்டர் கூட்டமும் கிடைத்தற்கரிய

Koviloor Digital Library

மகிழ்ச்சியில் கும்மாளமிடும். அவ்வப்பொழுது பகவானுடைய கைகளில் நினைத்த மாத்திரத்தில் வந்து தாமே தோன்றும் புதுப்புதுப் பொருள்களுக்குக் கணக்கேயில்லை. வெறும் மணல் சிலைகளாகவும், விபூதியாகவும், பழங்களாகவும், பூக்களாகவும் அவர் எண்ணியது எண்ணியவாறு மாறி வியப்பை விளைவிக்கும். விழாக் காலங்களில், குறிப்பாகக் கிருஷ்ண ஜயந்தி போன்ற புண்ணிய நாட்களில் மணலை எடுத்து அதை எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கிருஷ்ண விக்கிரகமாக்கி மகிழ வைப்பார். பின்னர், அதை யாரேனும் ஒரு பாக்கியசாலியான பக்தருக்கு, வீட்டில் வைத்துப் பூஜை செய் என்று கொடுத்துவிடுவார். இதுபோல், ஸ்ரீ ராம நவமியன்று, ராமச்சந்திரமூர்த்தியின் திருப் படிமம் ஒன்றைப் படைத்து யாரேனும் ஓர் அன்பரிடத்தில் பூஜைப் பரிசாக ஒப்படைப்பார். காளஹஸ்தி திருத்தலத்தில் பாயும் ஸ்வர்ண முகி என்னும் புண்ணிய நதியின் மணலிலிருந்து இவ்வாறு ஒரு பெரிய ராமர் சிலையை படைத்து, அது இன்னும் வெங்கட கிரி நகரத்தில் பொதுமக்களால் கோயிலில் எழுந்தருளச் செய்து தொழப்படுகிறது.

ஒரு சமயம் கோவலம் கடற்கரையில் அன்பர்கள் சூழ இருக்கும்பொழுது, பஜனைப் பாடல்களுக்கேற்ப தாளம் போட்டுக்கொண்டிருந்த பகவானின் இரண்டு கைகளிலிருந்தும் தேன்பொழிந்தது. அமிர்தம் என அன்பர் உண்டு திளைத்தனர்.

பிரசாந்தி நிலையத்தில் புனிதமான திரு நாட்களில் பகவான் முன்னிலையில் திருமணங்களும், உபநயனங்களும், இன்னும் பல சுபகாரியங்களும் மறைவழி மரபின்படி நடந்தேறுகின்றன.

தீபாவளியன்று உற்சாகத்துக்குக் கேட்கவே வேண்டாம். கிராமத்திலிருக்கும் குழந்தைகளுக்கும், நிலயத்திலிருக்கும் பக்தர்களின் குழந்தைகளுக்கும் பகவான் கையினாலேயே பட்டாசுகளும் வாணங்களும் மத்தாப்புக்களும் கொடுக்கும்

Koviloor Digital Library

அழகை அனுபவிக்கப் பதினுயிரம் கண்கள் வேண்டும்.

நவராத்திரிப் பண்டிகை ஒரு தவமியற்றும் பண்டிகை. முதல் நாள் காலை தெய்வக்கொடி பகவானுல் ஏற்றப்படும். அன்றே தாய்மார்கள் பராசக்தியின் பூஜையைத் தொடங்கிப் பத்து நாட்களும் செய்து நிறைவுறச் செய்வார்கள். இரண்டாம் நாள் சமூகத் தொண்டிற்கு ஒதுக்கப்படும். மூன்றும் நாள் குழந்தைகள் தினம். பூத்துக் குலுங்கும் நந்தவனம்போல் மதலைகளின் மழலைச் சிரிப்பால் பிரசாந்தி நிலயம் நிரம்பியிருக்கும். நான்காம் நாள் கவிஞர் பெருமக்கள் வந்து கூடி தேவிக்குப் பாமாலை சூட்டுவார்கள். ஏழாம் நாள் ஏழைகளுக்கு அன்னமிடும் புண்ணிய நாள். அன்று பிரசாந்தி நிலயம் புதுப்பொலிவு பெற்றுத் திகழும். "என் அன்ன மரியாதையை ஏற்கும் மக்கள் ஆண்டவனுக்கு நிகர்; அவர்கள் எழுந்தருளும்போது இந்த இடம் கோயிலாகி விடவேண்டும்; அணியலங்காரம் பூண்ட மணிமண்டபமாகி விடவேண்டும்!" என்று சொன்னவர் பகவான்.

எட்டாம் நாளும் ஒன்பதாம் நாளும் நாட்டில் பல பகுதிகளிலுமிருந்து வந்து கூடும் இசைவிற்பன்னர்கள் தங்கள் கைவரிசையையோ குரல் வரிசையையோ காண்பித்து மக்களை மகிழ்விப்பார்கள். வாய்ப்பாட்டு வித்வான்கள், வீணையும் வேணுவும் கொண்டு இசைப்பவர்கள், கோஷ்டி கானம் செய்யும் குழுவினர் எல்லோரும் நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டு, இந்த நவராத்ரி நாட்களில் கச்சேரி செய்ய வேண்டும் என்று முந்துவார்கள். அதை அவர்கள் கிடைத்தற்கரிய பேருகக் கருதுகிருர்கள். கண்ணனின் சந்நிதானத்தில் தாங்கள் ஆற்றவேண்டிய ஒரு பணியாக எண்ணி தங்கள் ஆற்றலைக் காண்பித்து பகவான் கையிலிருந்து பரிசில் பெற்றுப் போவார்கள்.

பத்தாவது நாளான விஜயதசமியன்று, எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல், நிகழ்ச்சிகள் நடக்கும். ஷிர்டி பாபாவின் வெள்ளிச்சிலைக்கு நீராட்டி அலங்கரித்திருப்பார்கள். இன்றுதான் பகவான், ஷிர்டி பாபாவிற்கு விபூதி அபிஷேகம்

Koviloor Digital Library

செய்வார். ஒரு சிறு குடத்தில் புனிதமான விபூதியை நிரப்பி அதை ஒருவர் தலைகீழாகப் பிடித்துக்கொள்ள, அதிலிருந்து விபூதி ஒரே அளவில் ஆற்றொழுக்குப் போல ஷிர்டிபாபாவின் திருவுருவத்தின் மேல் பொழிய வேண்டும் என்பதற்காக பகவான் அந்தக் குடத்துக்குள் கையை விட்டுக் குலுக்குவார். விபூதியும் சீராகப் பொழியும். ஆனால் குடத்தில் நிரப்பிய விபூதியெல்லாம் தீர்ந்துபோன பிறகும், தொடர்ந்து அதே அளவில் விபூதி மழை பொழிந்து கொண்டேயிருக்கும்; குன்றமெனக் குவிந்து விட்ட விபூதியில் சிலை முழுவதும் அமிழ்ந்து விடும். இது பகவானுடைய லீலா விபூதிகளில் ஒன்று! ஷிர்டி பாபா தம்மை அண்டியவர்களுக்கு, எப்பொழுதும் எரிந்து கொண்டேயிருக்கும் கணப்பிலிருந்து சாம்பலை எடுத்து அதை ஊதி விபூதியாகத் தருவார். இந்தக் காரணத்தால், ஷிர்டி பாபாவுக்குப் பகவான் விபூதி அபிஷேகம் செய்வதைச் சிறப்பானதொரு நினைவாஞ்ஜலியாக செய்கிறார் என்று கொள்ளலாம்.

நவராத்திரியைப் போலவே சிவராத்திரியும் பிரசாந்தி நிலயத்தில் கொண்டாடப்படும் ஒரு கோலாகலமான புனிதத் திருவிழாவாகும்.

இரவெல்லாம் இடையறாது இறைவனின் திருநாமங்களை இசைத்து இன்புறுவர் தொண்டர். இந்தப் புண்ணிய இரவில் பகவானின் கை, கால், நெற்றி முதலிய இடங்களில் விபூதி அரும்பி வழியும். பக்தர்கள் இதை அருட்கொடையாகப் பெற்று மேனியில் பூசிப் புனிதமாவார்கள். 1950ம் ஆண்டிலிருந்தே சிவராத்திரி புட்டபர்த்தியில் கொண்டாடப் பெறுகிறது.

இச்சிவராத்திரி நன்னாளில் மாலையில் பிரார்த்தனை நேரத்தில் அன்பர்களுக்குத் தரிசனம் தந்து, பின் பகவான் தனது அருளுரையை நிகழ்த்துவார். அவ்வாறு நிகழ்த்திக் கொண்டிருக்கும் பொழுதே, அவரிடத்தில் சில மெய்ப்பாடுகள் தோன்றும். உடம்பிலே ஒருவிதமான இறுக்கமும் துடிப்பும் தென்படுகின்றன. இருப்பினும் அவர் பேச்சுத் தொடர்கிறது. இருந்தாற் போலிருந்து திடீரென்று அவர் திருவாயிலிருந்து

Koviloor Digital Library

சிவலிங்கம் வெளிப்படுகின்றது. பெருவியப்பிற்குரியது இந்த மாபெரும் நிகழ்ச்சி. இந்த ஆத்மலிங்கத்தைப் பகவான் பெரும்பாலும் ஷிர்டி பாபா சிலேயின் திருமுடிமேல் அமரச்செய்கிருர். பின்னர், பண்டிகை முடிந்ததும், யாரேனும் ஓர் அணுக்கத் தொண்டருக்கு இது வழிபாட்டுக்காக வழங்கப்பட்டு விடுகிறது.

பகவானுடைய திருமேனியிலிருந்து இவ்வாறு தோன்றிய சிவலிங்கங்கள் பெரியவையும் உண்டு; சிறியவையும் உண்டு. அவற்றில் சில ஸ்படிகலிங்கங்கள்; சில பொன்னுலானவை; சில வெள்ளியினுலானவை. ஒரு லிங்கம்தான் வெளிப்படுகிறது என்பதன்று. இரண்டு, மூன்று, ஏன், ஒன்பது லிங்கங்கள் வரை ஒரே சமயத்தில் அவரிடத்திலிருந்து தோன்றியிருக்கின்றன. சுமார் ஒன்றரை அங்குல உயரம் வரை இவை இருக்கின்றன. விபூதி மூன்று பட்டையாக இவற்றில் தோன்றுவது கண்கொள்ளாக் காட்சி. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பசிதாகம் முற்றும் மறந்து நடுநிசியில் பரமசிவத்தின் நாமருசியை மாந்தி, பகவானிடமிருந்து லிங்கோத்பவ மஹோத்ஸவத்தையும் கண்ணாரக்கண்டு, உளமார வணங்கி வளமார் வாழ்வைப் பெற்றுவருவது கண்கூடு. இறைவன் இருக்கும் இடமாதலால் இதயம் என்று பெயர் பெற்றது. இந்த நம் இதயத்தில் இருக்கும் சத்தியப் பொருளே நாம் முயன்று கண்டு கொள்ளவேண்டும். தேகமே தேவாலயம்; "உள்ளம் பெருங் கோவில்; ஊனுடம்பு ஆலயம்."

தினந்தோறும் பிச்சையெடுத்து உண்ணும் ஏழைஒருவன் தான் இருக்கும் குடிசையிலேயே தன் காலடியிலேயே ஓர்அடி ஆழத்தில் பெரும் புதையல் இருப்பதை அறியாமல், தன்னே ஏழையாகவே எண்ணிக் கொண்டிருப்பதைப்போல், நம் இதயத்தையே இல்லமாகக் கொண்டிருக்கிருன் என்பது தெரியாமல் அவனே எங்கெங்கெல்லாமோ தேடி அலேந்து மலேந்து போகிறோம். எங்கும் போய்க் கரை காணுது எறிகடல்வாய் மீண்டேயும் வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவைபோல, இறுதியில் இறைவன் இருக்குமிடம் இதயம் என்று கண்டு

Koviloor Digital Library

அமைதியுறுவதைக் காண்பிக்கும் வகையில், பகவான் தம் திருமேனியிலிருந்து லிங்கத்தைத் தோற்றுவிக்கிறார் என்று கொள்வதில் தவறில்லை.

1957ம் ஆண்டு அக்டோபர் மாதம் பிரசாந்தி நிலயத்தில் மருத்துவமனையொன்று தொடங்கப்பெற்றது. ஒருமலைச்சரிவில் பாறைகளை வெட்டி, ஒன்றன்மேல் ஒன்றாக மூன்று தட்டுக்களாகத் தளம் அமைத்து அவற்றின் உச்சிதளத்தில் மருத்துவமனையைப் பகவான் அமைத்திருக்கிறார். முதன் முதலில் ஆண்களுக்கு ஆறும், பெண்களுக்கு ஆறுமாக பன்னிரண்டு படுக்கைகளைக் கொண்டிருந்தது மனை. எக்ஸ்ரே அமைப்பு ஒன்றும் நிறுவப்பெற்றது. அறுவை சிகிச்சைக்கும் வசதிகள் இருந்தன.

மலைமேல் எழுப்பப்பட்ட இந்த மனைக்கு, கல்லும் மண்ணும், நீரும் சேறும் சுண்ணும்பும் மரமும் இரும்பும் சிமெண்டும் எல்லாம் தொண்டர்களால் வரிசையாக ஒருவர் கையிலிருந்து இன்னொருவர் கைக்கு மாறி கீழேஅடிவாரத்திலிருந்து மலையுச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டது என்பது மலைப்பையுண்டுபண்ணும் செய்தியானாலும் மலைபோன்ற உண்மை. ராஜராஜன் தஞ்சைப் பெரிய கோயில் உச்சி விமானத்திற்கு வேண்டி பெருங்கல்லை வெகு தொலைவிலிருந்து சாளரங்கட்டி ஏற்றினான் என்பது வரலாறு. அத்தகைய முறை இங்கும் கையாளப்பட்டது எனலாம்.

மனிதனின் துயர்துடைக்கும் பணியில் பகவான்தன்னைப் பல்வகையாலும் ஒப்படைத்துக் கொண்டார் என்பதுதெளிவு.

உயிரினங்களனைத்தும் அவரது அன்பிற்குரியன. பிரசாந்தி நிலயத்திலுள்ள பசுப்பண்ணை எந்த விவசாயியும் பார்த்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று. பகவானுக்குப் பசுக்களிடம் ஈடுபாடு அதிகம். அவற்றைக் கண்ணுங் கருத்துமாகப் போற்றிக் காப்பாற்றுவார். தானே அவற்றுக்கு உணவு ஊட்டுவார்; ஆதரவோடு அரவணைப்பார். பொங்கல் திருநாளில் இப்பசுக்களை ஆபரணங்கள் அணிவித்து அழகு பார்ப்பார்.

Koviloor Digital Library

இதேபோல, குதிரை, மான், மயில், முயல் முதலிய உயிரினங்களும் அவரது அன்பில் வளர்ந்திருக்கின்றன.

நாய்கள் அவருக்குச் செல்லமான பிராணிகள். ஜேக், ஜில் என்ற இரண்டு நாய்க்குட்டிகள் அவரிடத்தில் வளர்ந்து வந்தன. ஜேக் ஆண்; ஜில் பெண். ஒவ்வொரு வியாழக் கிழமையும் அவை சொல்லி வைத்ததுபோல் பட்டினி விரதம் இருக்குமாம்; பாபாவே சொல்லியிருக்கிறார். என்ன முயன்றாலும் அவை இறைச்சியை உண்ணுவதில்லை. இவற்றில், ஜேக் அவரது தலைமாட்டிலும், ஜில் அவரது கால்மாட்டிலும் படுத்துக்கொண்டு உறங்கும். சில ஆண்டுகளுக்குப்பிறகு, பகவானுடைய அன்பை முழுமையும் துய்த்துவிட்டு, ஜேக் ஒருநாள் பகவானுடைய மடியில் தலையை வைத்து, அவரது திருமுகத்தைப் பார்த்தபடியே உடலைத்துறந்தது. இந்தப் பிரிவைத் தாளாமல், சில தினங்களில் ஜில்லும் இறந்தது. இரண்டு உடல்களும் நிலயத்திலே ஒரு சதுக்கத்திலே அடக்கம் செய்யப்பட்டு, அதன் மேலே சமாதி ஒன்றும் எழுப்பப்பட்டிருக்கிறது. துறவிகளுக்குரிய மரியாதை இவற்றுக்குச் செய்யப்பட்டது.

பகவானிடம் வளர்ந்த நாய்களுக்கெல்லாம் அழகழகான பெயர்கள் உண்டு. சிட்டியும் பிட்டியும், லில்லியும் பில்லியும், மின்னியும் மிக்கியும், ஹனியும் கோல்டியும், டாமியும் ஹென்றியும், ரோவரும் ரீடாவும் கொடுத்து வைத்த நாய்க்குட்டிகள்.

குலசேகராழ்வார் திருவேங்கடத்தான் கோயில் வாசலில் படியாய்க் கிடக்கும் பேற்றையும், ஸ்வாமி புஷ்கரணியில் மீனாய்ப் பிறக்கும் விதியையும் பெற ஏங்கினார். தேனார் பூஞ் சோலைத் திருவேங்கடச் சுனையில், மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே என்றும், படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே என்றும் பாடினார். இது போல, பிரசாந்தி நிலயத்தில் நாய்க்குட்டிகளாகவேனும் பிறக்கும் பேற்றினைப் பக்தர் உள்ளம் பிரார்த்தித்து நிற்கும்.

Koviloor Digital Library

மரத்திலிருக்கும் பழத்தைக்கிளி கொத்திப் பார்த்து பழுத்திருக்கிறதா என்று தெரிந்து கொள்ளும். குரங்கு பழத்தைத் தேடும் முயற்சியில் காயையும் பறித்து நாசமாக்கிவிடும். எறும்பு அப்படியன்று. நேரே போய்ச் சர்க்கரையை மொய்த்துக்கொள்ளும். அதற்குத் தெரியும் தனக்கு எது தேவையென்று. அது அநாவசியமாகத் தேடுவதில்லை; மற்றெந்தப் பொருளையும் நாடுவதுமில்லை. நாமெல்லாம் எறும்பினம்போல, பகவானிடத்திலே போய் மொய்த்துக் கொள்ள வேண்டும். வேறொன்றையும் நாடவும் வேண்டாம்;தேடவும் வேண்டாம்.

2

வேனிற் காலச் சாரல்கள்:

பங்களூருக்கருகில் ஒய்ட் பீல்ட் என்னும் இடத்தில் அமைக்கப்பெற்றிருக்கும் பிருந்தாவனம் பகவானின் ஆலயம். ஆண்டுதோறும் அங்கு நடைபெறும் வேனிற்காலப் பயிற்சி முகாம்கள் மிகவும் புகழ்பெற்றவை. எந்த ஒரு பல்கலைக் கழகமும் தனித்துச் சாதிக்க முடியாத ஓர் அரும்பெரும் கல்விப் பணியை இந்த முகாம்கள் நடத்திக் காண்பிக்கின்றன.

பொதுவாக நமது கல்விமுறையில் நமது பண்பாட்டுக்கும் சமய உணர்வுகளுக்கும் அளிக்கப்படும் இடம் மிகமிகக் குறைவு. மாணவ மாணவிகளுக்கு நம்முடைய வாழ்க்கை முறைக்கு ஆணிவேராக விளங்கும் வேதநெறியின் அளவும் அழுத்தமும் ஆழமும் தெரிவதற்கு வழியும் நேரமுமில்லாமலே கல்வி முடிந்து விடுகிறது. நமது தாய்நாட்டின் தத்துவ தரிசனங்களும் மெய்யுணர் நூல்களும் கற்கப்படாமலே போய் விடுகின்றன. உலகெல்லாம் வியக்கும் பேருண்மைகள் பெருநிதிகளாகப் பொதிந்து கிடக்கும் நமது பழம்பெரும் கருத்துக்

Koviloor Digital Library

கருவூலங்கள் பல அரசியல், சமூகச் சூழ்நிலைகளால் கவரப் பட்டு, முழுதும் மறந்தும் மறைந்தும் போய்விடக்கூடிய பேராபத்து என்றும் இருக்கிறது. தத்துவம் என்னும் முது கெலும்போட்டி, சமயம் என்னும் நாடிநரம்புகளால் நாட்டி, இறையுணர்வு என்னும் பேரொளியை அறிவில் பூட்டி எழும்பிய சமுதாயம் பாரதச்சமுதாயம்.

காலையில் எழுந்து இரவு உறங்கப்போகும்வரை நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் வகைப்படுத்தி, பயனுள்ள தாகவும் உடம்புக்கும் உள்ளத்திற்கும் உயிருக்கும் உரமேற்று வதாகவும் அவற்றைப் பிணைத்திருக்கிறார்கள் நமது அறிவொளி மிக்க பெரியோர்கள். வாழ்வும் சமயமும் பின்னிக் கிடப்பது நமது நாட்டிலேதான். கோயிலைச் சுற்றி ஊர் அமைவதும், எல்லாக்கலைகளும் விழாக்களும் கேளிக்கை களும் இறைவழிபாடாக நடப்பதும், அறத்தாலும் அருளாலும் வருவதே இன்பம் என்பதை நடைமுறையில் வாழ்ந்து காட்டு கின்ற சமுதாயம் பாரதச் சமுதாயம்.

இத்தகைய ஆன்மீகச் செல்வம் இங்கே கொள்ளையாய்க் கிடக்க, கானலைத் தண்ணீரென்று மயங்கி ஓடி தாழ்வுற்று வறுமை மிஞ்சித் தவிக்கும் தாய்த்திருநாடு தன்னை வாழ் விக்கும் வள்ளலாக வந்துதித்த பகவான் பாபா, வறண்டு கிடக்கும் இளம் உள்ளங்களில் தண்புனலாக தாய்நாட்டின் தரும சிந்தனைகளையும் தத்துவ தரிசனங்களையும் கலையுணர்வு களையும் பாய்ச்சி கோடி கோடிப் பண்புப் பயிர்களாக விளை விக்க வேண்டும் என்று திருவுளங் கொண்டார். அதன் விளைவுதான் வேனிற்கால ஆன்மீகக் கல்வி முகாம்கள். 1972ம் ஆண்டு மே மாதம் முதல் முகாம் நடந்தது. அதைத் தொடர்ந்து இன்றுவரை ஆண்டுதோறும் இந்த முகாம்கள் நடக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டை விடச் சிறப்பாக அமைந்து எல்லாம் கோலா கலமான விழாவாகி வருகிறது. பாபாவே முன்னின்று இதை நடத்துவதால், சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிவதைப்

Koviloor Digital Library

போல், பொன்மலர் வாசம் வீசுவதுபோல் எங்கும் ஒரே இனிமையும் குளுமையுமாக கண்ணன் வளர்ந்த அந்த நாள் பிருந்தாவனமாகி விடுகிறது இந்த நாள் பிருந்தாவனம்.

ஒரு மாதம் தொடர்ந்து நடக்கும் இந்த முகாமில் கற்பிக்கப்படும் பாடங்கள் எட்டுபிரிவுகளாகும். இந்து சமயத்தின் மெய்ந்நூல்களும் திருமறைகளும்; உலகச் சமயங்களின் ஒருமைப்பாடு; இந்தியப் பண்பாடு; இந்தியத் தத்துவதரிசனங்கள்; விஞ்ஞானமும் மனித வாழ்வின் உறுதிப்பொருள்களும்; பாரத நாட்டு முனிவர்கள்; இந்தியத் தருமநூல்களும் சட்டமும்; உலகத்துப் பேரிலக்கியங்கள்.

பாரதத்தின் எல்லா மாநிலங்களிலிருந்தும் மாணவ மாணவிகள் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இதில் சேருகிறார்கள். அவர்களுடைய குடும்பப் பின்னணிகள் கூர்ந்து ஆராயப்படுகின்றன. சொந்த நடத்தை சோதிக்கப்படுகிறது. மாநிலத்துக்கு இவ்வளவு பேர் என்று பங்கீடு செய்து மாணவ மாணவிகள் சம அளவில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் சுமார் அறுநூறிலிருந்து ஆயிரம் பேர் பயிற்சிக்கு வருகிறார்கள். ஓர் ஆண்டு படித்தவர்களே மறு ஆண்டும் சேர்க்கப்படுவதில்லை. கூடிய வரையில் எல்லோரும் இதில் பங்கு கொள்ளவேண்டும் என்ற கருத்தில் வந்தவர்களே திரும்பத் திரும்ப வருவதில்லை. பாரத நாட்டின் இளந்தலைமுறையே அங்கே வடிக்கப்பட்டு வந்து கூடுகிறது எனலாம்.

மாணவிகளுக்குத் தங்குமிடம் தனி. உணவு அருந்தும் போதும் அவர்கள் பந்தி முதலில் முடிந்த பிறகு பின் மாணவர்கள் செல்வார்கள். அணி அணியாகவும் அமைதியாகவும் மாணவ மாணவிகள் வந்து செல்வது அழகியதொரு காட்சி. அதுவே இங்கு நிலவும் ஒழுங்கிற்கும் கட்டுப்பாட்டிற்கும் ஒரு சாட்சியும் ஆகிறது.

மாணவரும் மாணவியரும் உணவருந்துமுன் கீதையிலிருந்தும் உபநிஷத்திலிருந்தும் சுலோகங்களைச் சொல்லு

Koviloor Digital Library

கோவிலூர்-630 307 R65

கிறார்கள். தட்டுக்களையெல்லாம் தாங்களே எடுத்து வைத்துக் கொண்டு, உணவருந்தியபின் அவற்றைக் கழுவி ஓரிடத்தில் ஒழுங்காகச் சத்தமில்லாமல் அடுக்கி வைக்கிறார்கள். இங்கு உணவு பரிமாறுவதும் மாணவர்களே. உணவுக்கான கறி காய்களை நறுக்கிச் சமையலறைக்குக் கொணர்வதும் மாணவர்களே. இதற்கென்று அமைக்கப்பெறும் சாரணர் படை எறும்பெனச் சுறுசுறுப்புடனும், பயபக்தியுடனும், பகவானை நினைந்து செயல் புரிகிறது. அங்கெங்கினுதபடி எங்கும் நிறைந்து அன்பினால் ஆட்டுவிப்பவர் அவரே. ஒரு மாபெரும் தலைவனுக்குத் தாள் பணிந்து தலைப்பொறுப்பாக அணி வகுத்துப் பணிசெய்யும் ஒரு தானையின் கட்டுப்பாட்டை இங்கு காணலாம்.

அதிகாலையில் வைகறைப் பொழுதில் பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து மாணவ மாணவிகள் "ஓம்" என்ற பிரணவத்தை நீண்டு ஒலிப்பார்கள். பிரணவநாதம் எங்கும் அலைஅலையாகப் பரவும். அமைதியையும் ஆனந்தத்தையும் ஒருங்கே இது ஊட்டும். உள்ளம் ஒருமைப்பட்டு உழைப்புக்குத் தயாராகும்.

இதைத் தொடர்ந்து நகரஸங்கீர்த்தனம் தொடங்கும். பிருந்தாவனத்தைச் சுற்றிலுமுள்ள சின்னஞ்சிறு கிராமங்களின் தெருக்களிலே இந்த ஸங்கீர்த்தனம் நடைபெறும். ஒரு மணி நேரம் இது நடக்கும். இதன் முடிவில், பஜனை கோஷ்டி பிருந்தாவனத்தின் தோரண வாயிலில் நின்று பஜனையைப் பூர்த்தி செய்யும் பொழுது, பகவான் தேஜோமயமாக, தன்து ஆசாரக் கோவிலின் மேல்மாடியில் வந்து நின்று தரிசனம் தருவார். பின் எல்லோரும் கலைந்து செல்வர்.

இதனைத் தொடர்ந்து, யோகாசனப் பயிற்சியும் தியானமும் நிகழ்கின்றன. காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு, 9மணிக்கு வகுப்புகள் தொடர்கின்றன. இதற்கென்றே எழுப்பப்பட்டிருக்கும் பிரம்மாண்டமான மண்டபத்தில் இந்த வகுப்புக்கள் நடக்கின்றன.

Koviloor Digital Library

காலையில் மூன்று சொற்பொழிவுகளும், மதியஉணவிற்குப் பிறகு, மாலை இரண்டு சொற்பொழிவுகளும் நிகழ்த்தப் பெறுகின்றன. பாரதத்தின் பல்வேறு பல்கலைக்கழகங்கள்,வித்யா பீடங்களிலிருந்து கற்றுணர்ந்த அறிஞர் பெருமக்கள் சொற்பொழிவாற்றுகிறார்கள். பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே இவை நிகழ்த்தப் பெறுகின்றன.

சிறிது இடைவேளை சிற்றுண்டிக்குப்பிறகு, மாலையில் ஐந்தரை மணிக்கு மறுபடியும் மண்டபத்தில் எல்லோரும் வந்து கூடுகிறார்கள். பொது மக்களும் இப்பொழுது அனுமதிக்கப்படுகிறார்கள். மண்டபம் நிரம்பி வழிகிறது. காரணம், பகவான் ஒவ்வொரு நாளும் ஆறுமணி தொடங்கி ஆற்றும் அருளுரைதான். பகவான் தமது உரையைத் தொடங்குவதற்கு முன்னால்,சிறிது நேரம் மாணவ மாணவியரால் பஜனை நடக்கிறது. சில நேரங்களில், பகவானே இதில் கலந்து கொள்வது மனதை நெகிழவைக்கும். எதுவாயினும் அது யாராயிருந்தாலும், குறித்த நேரத்தில் அது நடக்க வேண்டும்; அதேபோல் குறித்த நேரத்தில் முடியவேண்டும்.

பஜனை முடிந்தவுடன், காலையிலும் மாலையிலும் நிகழ்த்தப் பெற்ற சொற்பொழிவுகளின் சுருக்கத்தை, ஒரு மாணவனும் ஒரு மாணவியும் படிக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திற்கும் இதில் சமமாக வாய்ப்பு அளிக்கப்படுகிறது. பகவானுடைய திருப்பாதங்களில் தலைவைத்து வணங்கி அவரது ஆசியுடன் இம்மாணவ மாணவிகள், 'கணீ'ரென்று மிகஅழகான ஆங்கில நடையில் பாடச் சுருக்கங்களை வாசிக்கிறார்கள். தலையாய கருத்துக்களைத் தவறில்லாமல் தருகிறார்கள். கூடியிருக்கும் பொதுமக்களுக்கு அன்று நடந்தேறிய வகுப்புக்களில் சொல்லப்பட்ட செய்திகள் சுருக்கமாக இதனால் கிடைக்கின்றன. அவர்களும் மகிழ்ந்து ஆரவாரம் செய்து இளைய சமுதாயத்தை ஊக்குவிக்கிறார்கள்.

மாணவ மாணவிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களைச் சிறந்த பேச்சாளர்களாக்கியிருக்கிறார் பகவான். அவர்களில்

Koviloor Digital Library

சிலரது பேச்சுத்திறன், இதில் துறை போகிய சிறந்த பேச்சாளர்களைக் கூடப் பிரமிக்க வைக்கும். பெரியதொரு ஆற்றல் அவர்களை ஆக்குவிப்பதும் ஊக்குவிப்பதும் கண்கூடு.

பல்வேறு மாநிலங்களிலிருந்தும் வரும் மாணவ மாணவிகளுக்குத் தலைமை தாங்கி அவர்களை நடத்திச் செல்லும் ஆசிரியர்களும், ஆசிரியைகளும் அவர்களுக்குப் பல்வகையிலும் உதவி ஊக்கமும் உற்சாகமுமளிக்கிறார்கள். இந்த முறையில் அன்றைய பாடச் சுருக்கங்கள் வழங்கப்பட்டபிறகு, பகவானுடைய உரை தொடங்குகிறது. மழைத்துளிக்காகக் காத்திருக்கும் சாதகப் பறவைபோல, இதற்கென்றே வெகுதொலைவிலிருந்து வந்திருக்கும் அன்பர் கூட்டமும் கண்களால் பகவானுடைய திருவுருவத்தை அள்ளிப் பருகிக்கொண்டு, அமுதமென அருவியாகவும் ஆற்றொழுக்காகவும் பெருகும் அவரது சொற்களைச் செவி மடுத்து, தெள்ளிய ஆனால் ஆழமான அவரது சிந்தனை ஓட்டத்தை மனத்தில் வாங்கி நடுநடுவே வெடிக்கும் அவரது நகைச் சுவையில் மகிழ்ந்து அகமும் முகமும் மலர, மகுடிக்காடும் நாகம்போல உள்ளம் ஒடுங்கியிருக்கிறது. எங்கும் ஒரே பரவச வெள்ளம். பகவான் பேச்சை முடிக்கிறபொழுது ''ஐயோ முடிந்து விட்டதே'' என்று எங்கும் எல்லா உள்ளங்களும். இனிமேல் இருபத்திநான்கு மணி நேரமாகுமே மறுபடி அந்தத் தெய்வீக வெண்கலமணிக்குரலைக் கேட்க! உலகத்து ஆசாபாசங்கள் அனைத்தும் அடங்கி துயரங்களும் பயங்களும்மறந்து, தூய மனோநிலை ஒன்றுதான் அங்கு மிஞ்சி நிற்கும்.

மனிதன் தன்னை உள்ளது உள்ளவாறு நேருக்கு நேர் கண்ணாடியில் காண்பதுபோல் காண்பது இந்த நேரங்களில் தான். ஒவ்வொரு உயிரும், தான் ஏதோ ஜனன மரணத்திற்குட்பட்ட சிறு புழுப்பிறவியன்று; காலங்கடந்த பெருஞ்சத்திய ஒளியின் தூய ஒளிச்சுடர் என்று உணரும் நேரம் அது. மனித இனத்தையே உயர்த்துகிறார் இங்கு பகவான்.

Koviloor Digital Library

உடலுழைப்புக்கென்றும் மனிதப் பண்பும் பணிவும் வளரவும் ஞாயிறுதோறும் சமூகசேவையில் இம்மாணவ மாணவிகள் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

3

ஸத்ய ஸாயி ஸேவா ஸமிதி

பாபாவின் கருணை உயிரினங்கள் அனைத்தையும் தழுவி நிற்கிறது. எங்கு துயர் தலைகாட்டுகிறதோ அங்குபகவானின் அருட்செயல்கள் தோன்றி அதைத் தொலைத்துக்கட்டு கின்றன. மக்கட்பணியே மகேசன்பணி என்ற தாரக மந்தி ரத்தை நாள்தோறும் பாபா நடத்திக் காட்டுகிறார். ஸத்ய ஸாயி ஸேவா ஸமிதிகள் பாபாவின் கரங்களாக நீண்டு பாரத நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மக்களுக்குப் பாபாவின் அருளை எடுத்துச் செல்லுகின்றன.

மாநில, மாவட்ட அளவிலும் கீழ்மட்ட அளவிலும் இந்த ஸமிதிகள் செயற்படுகின்றன. குழந்தைகளுக்கென்று பால விகாஸ் என்ற தனி அமைப்பும், மகளிருக்கென்று மஹிள விபாக் என்ற தனி அணியும் தொடர்ந்து பணி செய்கின்றன. ஸேவா தளத்தொண்டருக்கென்றும், குழந்தைகளுக்கென்றும் சிறந்த ஆன்மீகம் சார்ந்ததொரு முழுக்கல்வி தரப்படுகிறது. மாநாடுகளும் வகுப்புக்களும் அவ்வப்பொழுது பலவேறு இடங் களில் தொடர்ந்து பலநாட்கள் நடத்தப்பட்டு வந்திருக் கின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் சேரிகளில் சென்று சாலைகள் போடுதல், துப்புரவு செய்தல் முதலியவற்றோடு, பிணிவாய்ப்பட்டு வசதியின்றி வாடும் வறியவர்க்கு, இலவச மான மருத்துவ உதவிகள் அளிக்க மருத்துவமனைகள் ஆங்காங்கு அமைக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்று

Koviloor Digital Library

கின்றன. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களும் எல்லோரும் பெற்று உய்யவேண்டும் என்பது பகவானின் குறிக்கோள். வைரம் பாய்ந்த கட்டுடலும், அஞ்சாத நெஞ்சமும், நேர்மையான நடத்தையும், உண்மையான சொல்லும், இரக்கமுள்ள உள்ளமும், உறுதியான நோக்கும், வளமான வாழ்வும், முடிவில் நிறைந்த பேரின்பவீடும் பொதுச் சொத்தாக வேண்டும். இல்லையென்பான் இல்லை என்பது நாட்டின் நிலையாக ஓங்கவேண்டும்.

உண்மை, அறம், அமைதி, அன்பு, அஹிம்சை இவ்வைந்தும் ஸத்ய ஸாயி ஸேவா ஸமிதியின் காவற்பெரும் தூண்கள்.

ஏதோ ஒன்றைக் கெட்டியாக விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு ''நான் கண்ட முயலுக்கு மூன்றே கால்'' என்று பிடிவாதம் செய்யாமல், ஸத்ய ஸாயி ஸேவா ஸமிதி கட்டுப் பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து பணி நிறுவனங்களிலும், காலத்திற்கேற்றவாறு, தேவைக்கேற்றவாறு நடைமுறையில் நேரக்கூடிய குறைகளறிந்து, அவ்வப்பொழுது மாற்றங்கள் வேண்டுமானால் அவற்றைக் கவனித்து புதியன புகுத்த பம்பாய் மாநகரத்தில் ஓர் ஆராய்ச்சி நிலயமே அமைக்கபட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் கூர்ந்து பார்த்தால் ஓர் அனைத்திந்திய பல்கலைக்கழகம் பாபாவின் இதயம் என்பதைத் தலைமைப் பீடமாகக் கொண்டு ஆரவாரமும் ஆர்ப்பாட்டமும் இல்லாமல் அமைதியாக இயங்கி வருகிறது என்பது புலனாகும். முதிய பாரதம் விலகி ஒரு புதிய பாரதம் உருவாகிக் கொண்டிருக்கிறது. இளைய தலைமுறைகள் அமோகமாக விளைந்து கொண்டிருக்கின்றன. நடுவில் வந்து புகுந்துகொண்டிருந்த புல்லுருவிகள் கெல்லி எறியபட்டு, பல்லாயிரம் காலமாகப் பாரதம் வளர்த்த தூய நல்லுணர்வுகள் தளிர்க்கத் தொடங்கியிருக்கின்றன. பெரியதொரு பண்பாட்டுப் புரட்சி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ''கண்டதே காட்சி கொண்டதே கோலம்'' என்ற அடாவடி வழியிலிருந்து மீண்டு, ஆணி வேராக மறைந்து காக்கும் ஆன்மீய அடித்தளங்கள்

Koviloor Digital Library

ஆராய்ந்து உணரப்பட்டு வருகின்றன. சத்திய ஒளி மெல்ல வைகறையாகப் படரத் தொடங்கிவிட்டது. உள்ளத் தாமரைகள் மெள்ள இதழ் விரிக்கின்றன.

4

ஷிர்டி பாபாவும் ஸத்ய ஸாயியும்

‘‘நானே ஸாய் பாபா!’’ என்று பகவான் ஸத்ய ஸாய் பாபா சின்னஞ்சிறு வயதினிலே உலகறியச் சொன்னபொழுது அப்பொழுது அதைப்பற்றி யார் என்ன புரிந்து கொண்டார்களோ தெரியாது. ஆனால் இன்றோ பகவானே தமது திருவாயினால் பலமுறை தானும் ஷிர்டி பாபாவும் ஒன்றே என்று கூறிவருகிறார். பிரசாந்தி நிலயத்தில் சிவராத்திரித் திருநாளில் ஷிர்டி பாபாவின் திருவுருவத்துக்குப் பகவான் திருநீற்று அபிஷேகம் செய்வதை கண்டவர்களுக்கு, பகவானுடைய மனம் எவ்வளவு தூரம் ஷிர்டி பாபாவினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறது என்பது புரியும். ஸாய் பாபாக்களின் அவதாரங்கள் தொடர் நிகழ்ச்சி என்பார் பகவான். ஷிர்டி ஸாய்பாபாவின் மறு அவதாரமாக தான் ஸத்ய ஸாய் வடிவாக வந்திருப்பது போலவே, மறுபடி பிரேம ஸாய் என்றதொரு அவதாரம் தொடரும் என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

ஷிர்டிபாபாவின் குழந்தைப் பருவம் தொடங்கிப் பதினாறு வயது வாலிபப்பருவம் வரை உள்ள வரலாற்றை எந்த நூலும் தெரிவிக்கவில்லை. பகவான் பாபாதான் முதன் முறையாக இந்த வரலாற்றினை அறிவித்தார். அந்த வரலாற்றின் நுட்பமான நிகழ்ச்சிகளையெல்லாம் கண்ணால் காண்பதுபோல் வரிசையாகப் பகவான் தம் இளம் வயதிலேயே விவரித்த பொழுது, அவர் ஷிர்டி பாபாவின் மறு அவதாரமே என்பது

Koviloor Digital Library

உறுதியாயிற்று. எனினும் அது பரவலாக எல்லோருக்கும் தெரிந்த பொது உண்மையாக அப்பொழுது நிலைபெறவில்லை. பகவான் தமது சரிதத்தைத் தாமே கூறுவதாகச் சொன்ன வரலாறு சுருக்கமாக இதுதான்.

கங்காபவாடியா ஒரு படகோட்டி. அவனது மனைவி தேவகிரியம்மா. ஒரு நாள் இரவு நேரத்தில் கங்காபவாடியா தனது படகுகளைக் கவனிக்கப் போயிருந்தபொழுது ஒரு பிச்சைக்காரன் போல் தோன்றிய கிழவன் தேவகிரியம்மாவிடம் வந்து பசிக்கு உணவு கேட்டான். அந்த அம்மையார் அளித்த உணவை உண்டு, திண்ணையிலேயே படுத்து உறங்குவதாகச் சொன்னான். சிறிது நேரங்கழித்து கதவைத் தட்டினான் கிழவன். ஏனென்று கேட்டதற்கு, தனது கால்களைப் பிடித்து விடுவதற்கு யாரேனும் வேண்டும் என்றான். தேவகிரியம்மாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. வந்திருப்பவன் கிழ விருந்தாளியானதால் விருந்தோம்பலில் குறையேற்படுமே என்று பயந்தாள். அக்கம் பக்கத்திலும் யாரும் கிடைக்கவில்லை. தனது குலதெய்வமான ராஜ ராஜேசுவரியைத் தொழுதாள்; அழுதாள்.

அதே கணம் பின்பக்கம் கதவு தட்டப்படும் ஒலிகேட்டது. திறந்து பார்த்தால் அங்கு ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். தன்னால் அக்கிழவனுக்குப் பணிவிடை செய்ய முடியும் என்றாள் அவள். அவ்வாறே செய்யவும் தொடங்கினாள். சிறிது நேரத்திற்குப் பிறகு கிழவனும் அந்தப் பெண்ணும் இருந்த அறையிலிருந்து கதவு தட்டப்பட்டது. கிழவனையும் பெண்ணையும் எதிர்பார்த்துக் கதவைத் திறந்த தேவகிரியம்மாவின் முன்பு உமையும் உமையொரு பாகனும் காட்சி தந்தார்கள். "உன் வயிற்றில் மூன்றாவது மகனாக நான் வந்து பிறப்பேன்" என்று பரமேசுவரன் சொல்லி மறைந்தான்.

இறைவனது வாக்கின்படி, தேவகிரியம்மா மூன்றாவது முறையாகக் கருவுற்றாள். இதன் நடுவில் அவள் கணவ

Koviloor Digital Library

னுக்குத் திடீரென்று இறைவனை நேருக்கு நேர் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றி, விரைவில் தடுக்க முடியாத வெறியாகிவிட்டது; வெளியே புறப்பட்டுவிட்ட கணவனைத் தொடர்ந்து இரு குழந்தைகளையும் தன் பிறந்தகத்தில் சேர்த்துவிட்டு தேவகிரியம்மாவும் சென்றாள். வழியில் வலிகண்டது; ஓர் ஆலமரத்தடியில் குழந்தையும் பிறந்தது. அந்தப் பச்சிளம் குழந்தையையும் திரும்பிப் பாராது அதைத் தழைகளைப் போட்டு மூடிவிட்டு, கணவனைத் தொடர்ந்து சென்று விட்டாள் அந்த பத்தினிப் பெண்.

மரத்தடியில் குழந்தை கிடந்தது. அவ்வழியே வந்தஒரு மனிதனும் அவனது மனைவியும் இக்குழந்தையின் அழுகுரல் கேட்டு அதைக்கண்டெடுத்து குழந்தையில்லாத தங்களுக்கு இறைவனே இதையளித்தான் என்று பேருவகையோடு அதை வீட்டுக்குக் கொண்டு சென்றார்கள். சிலநாட்களில் கணவன் இறந்து போனான். குழந்தை வளர்ந்து சிறுவனானான். அவன் அன்னையிட்டபெயர் பாபு. அவன் செயல்கள் வியப்பூட்டுவனவாக இருந்தன. மசூதிகளில் ஒரு சிவலிங்கத்தைக்கொண்டு போய் வைத்துப் பூசை செய்வான்;கோவிலில் உட்கார்ந்து குரான் ஓதுவான்.

ஒரு சமயம் அண்டை வீட்டுப் பையன் ஒருவனோடு கோலி விளையாடும் பொழுது, அந்தப் பையன் பாபுவிடம் எல்லாக் கோலிகளையும் தோற்றுவிட்டான். விளையாடுவதற்கு வேறு கோலியில்லாததால் தன் வீட்டிற்குப்போய், பூசையறையில் வைத்திருந்த சாளக்ராமத்தை எடுத்து வந்து விளையாடினான். அதையும் தோற்றுவிட்டான். விஷயம் அந்தப் பையனுடைய தாயின் காதிற்குப் போயிற்று. அவள் ஓடி வந்தாள். இதற்குள் பாபு அந்தச் சாளக்ராமத்தைத் தனது வாயில் போட்டுக் கொண்டு விட்டான். வாயையும் கெட்டியாக மூடிக் கொண்டான்.

அந்தத் தாய் சும்மா விடவில்லை. பூசைக்குரிய சாளக்ராமமல்லவா? பாபுவின் தாடைகளை இறுக அழுக்கி அவன்

Koviloor Digital Library

வாயைத் திறக்குமாறு செய்தாள். ஆனுல் அந்த வாயினுள் அவள் கண்டது சாளக்ராமம் அன்று. அன்று ஆயர்பாடியில் கண்ணன் வாயினுள் ஏழுலகமும் யசோதை கண்டதுபோல, உலகங்களெல்லாம் கண்டாள் அப்பிள்ளை வாயுளே. பாபு சிரித்தான். ''உன் சாளக்ராமம் பூசையறையிலே இருக்கிறது, போய்ப்பார்!'' என்ருன். அப்படியே அது இருந்தது. அந்தப் பெண் வந்து பாபுவின் காலடி வீழ்ந்தாள்; கதறினுள். ''என் தெய்வமே!'' என்று வணங்கினுள்.

இதெல்லாம் சுத்தப் பைத்தியக்காரத்தனம் என்றுஊரார் பேசினுர்கள். பாபுவின் திருவிளையாடல் ஓயவில்லை. வளர்ப்புத் தாயான அந்த அம்மாள் பார்த்தாள். இது நமக்குக் கட்டுபடியாகாது என்று,பையனை இழுத்துக் கொண்டுபோய் வெங்குசர் என்ற ஒரு சாதுவிடம் சேர்த்துவிட்டாள். ஏற்கனவே இது போல நடக்குமென்று வெங்குசரின் கனவில் இறைவன் கூறியிருந்தான். அந்தப் பையன் தானேதான் என்றும் சொல்லியிருந்தான். வெங்குசத்தின் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை.

பாபு தன் குருவின் அன்பைப் பரிபூரணமாகப் பெற்று வளர்ந்தான். இதைக் கண்டு மற்றச் சீடர்களுக்கு மனத்திலே பொருமை தீயாக எரிக்கத் தொடங்கியது. பாபுவைத் தீர்த்துக்கட்ட அவர்கள் முடிவு செய்து விட்டார்கள். ஒருநாள் ஒரு தனிக் காட்டில் பாபுவைத் தாக்கி பெரும் கல்லினுல் அடித்தார்கள். பாபுவின் தலையிலிருந்து ரத்தம் பெருகியது. இருந்தும் ஒரு சிறு முனகல்கூட அவன் வாயிலிருந்து வரவில்லை. தன்மேல் வீசப்பட்ட கல்லை எடுத்துக்கொண்டு தன் குருவிடம் சென்ருன். கல்லில் எங்கும் ரத்தக்கறை படிந்திருந்தது.

இந்தக் காட்சியைக் கண்டு, நடந்ததையும் கேட்ட வெங்குசரின் துயரத்திற்கு அளவேயில்லை. அடிபட்டு வழிந்த ரத்தம் இறைவனுடையது என்பது அவருக்குத் தெரிந்திருந்தது அல்லவா? தன் வேட்டியைக்கிழித்து பாபுவினுடைய தலையைச் சுற்றிக் கட்டுப்போட்டார். ரத்தக்கறை படிந்த

Koviloor Digital Library

கல்லைத் தானே வைத்துக் கொண்டார். ஷிர்டிஸாயிபாபாவின் வரலாற்றில் இந்தக் கல்லைப்பற்றியும், வெங்குசரின் சமாதி யைப்பற்றியும் செய்திகள் தரப்பட்டிருக்கின்றன. அந்த ஸமாதியின் மேல்தான் ஷிர்டி பாபா அமர்வது வழக்கம்.

மேலே சொன்ன வரலாற்று விவரங்களெல்லாம் பகவானே தெரிவித்தவையாகும். இதுவரையில் யாரும் அறிந்திராத செய்திகளுமாகும்.

சிஞ்சோலி ராணியாக விளங்கிய அம்மையார் ஒருவர் புட்டபர்த்தியிலே பகவானைப் பார்க்கவேணுமென்று அங்கு வந்தார். அவர் தலைவாயிலில் நுழைந்து கொண்டிருக்கும் பொழுதே பகவான் தம்முடைய அணுக்கத் தொண்டர் ஒருவ ரிடம். ''அந்த அம்மையாரை, நான் வெகு நாட்களுக்கு முன் கொடுத்திருந்த பித்தளைக் கமண்டலுவைக் கொண்டுவரும்படி சொல்!'' என்றார்.

ராணியாருக்கே இது அவ்வளவாக நினைவில்லை. என்றாலும், வீட்டில் நன்றாகத் தேடிப்பார்த்ததில், அந்தக் கமண்டலு அகப்பட்டது. பல பழைய பாத்திரம் பண்டங் களுக்கிடையே அது இருந்தது. ஒரு சமயம் ஷிர்டி பாபா அந்த வீட்டிற்கு விஜயம் செய்தபோது விட்டுச் சென்ற அந்த கமண்டலு வீட்டுப் பெரியவர்களால் வெகுகாலம் மட்டுமரியா தைகளுடன் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது.

இன்னொரு நிகழ்ச்சி. ஷிர்டி பாபாவின் நெருங்கிய சீடர் களில் ஒருவர் காகா ஸாகிப் தீக்ஷித். அவருடைய மருமகனை தீக்ஷித் புட்டபர்த்திக்கு வந்தார். தானே ஷிர்டிபாபாவாக இருந்தேன் என்று பகவான் ஸத்ய ஸாய் பாபா சொல்லி வரு வதின் உண்மையை நேரில் சோதித்து முடிவுகட்டவே அவர் வந்தார். தன்னுடைய மாமனுடைய போட்டோ ஒன்றைத் தம் சட்டைப்பையில் அவர் எப்போதும் வைத்திருப்பார். இவரைப் பார்த்ததுமே, பகவான் சொன்ன முதல் வார்த்தை: ''என்னுடைய அன்பன் ''காகா''வின் புகைப் படத்தை இப்படிக் கொடு!''.

Koviloor Digital Library

ஷிர்டிக்குப் போகும் பக்தர்கள் புட்டபர்த்தி பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டு இங்கு வருகிறார்கள். அவர்களைப் பார்த்ததும் பகவான், அவர்களாக ஏதும் சொல்லுமுன்பே, அவர்கள் ஷிர்டிக்குப் போயிருந்த விவரமனைத்தையும் தானே முந்திக் கொண்டு அடுக்கடுக்காக எடுத்துரைக்கிறார். அவர்களுக்கு ஷிர்டியில் தோன்றிய எண்ணங்களையும், அவர்கள் செய்து கொண்ட விண்ணப்பங்களையும் சொல்லி அவற்றை நிறைவேற்றியும் வைக்கிறார். இதேபோல, ஷிர்டிக்கு யாராவது போவதாகச் சொன்னால், அவர்களுக்கு நுணுக்கமான செய்திகளையும் வழிகளையும் இடங்களையும் சொல்லி அனுப்புகிறார். "துவாரகாமயியில் போய்த் தூங்கு. அங்கு நான் உன்னுடைய கனவில் தோன்றுவேன்" என்று கூறி அப்படியே தோன்றவும் செய்திருக்கிறார்.

ஷிர்டி பாபாவின் அடியார்கள் அவரிடம் வந்தால் "உங்களை நான் கடந்த பல ஆண்டுகளாக அறிவேன். நீங்கள் அன்று அங்கே வந்திருந்தீர்கள். இப்படி இப்படி இருந்தீர்கள். இன்னின்ன பேசினீர்கள்" என்று நினைவு படுத்துவார்.

சென்னை நகரில் மயிலையில் ஸாயி ஸமாஜில் பேசும் பொழுது, பகவான் பாபா, "இந்த உடலில் இங்கு வருவது இதுதான் முதல் தடவை என்றாலும், இந்தக் கோயிலில் நான் ஏற்கனவே இருக்கிறேன்!" என்று கூறியிருக்கிறார்.

அன்பர்களுக்கும் அடியார்களுக்கும் அவர் அவ்வப்பொழுது ஆசியாக அளிக்கும் பதக்கங்களிலும் படங்களிலும் பெரும்பாலும் ஷிர்டி பாபாவின் உருவம் பதித்திருப்பதைப் பலரும் பார்த்திருக்கிறார்கள். சிலசமயம், பகவான் பாபாவின் உருவத்தில் ஷிர்டி பாபாவின் உருவம் இதயஸ்தானத்தில் தோற்றமளிக்கும்.

ஷிர்டி பாபாவும் புட்டபர்த்தி பாபாவும் ஒன்றாக இருக்க முடியுமா என்ற ஐயப்பாடு, தேர்ந்த பக்தர்களுக்குக்கூட ஏற்படுவதுண்டு. அந்தச் சமயங்களில், ஏதேனும் ஓர் உரு

Koviloor Digital Library

வத்தில் அந்த பக்தர் முன் தோன்றி, தன் இரண்டு உள்ளங் கைகளைக் காண்பித்து, அதில் ஒன்றில் ஷிர்டி பாபாவின் உருவமும், இன்னொன்றில் தன் உருவமும் காட்டி விளங்க வைத்திருக்கிறார்.

ஷிர்டிபாபா அடியார்க்கு வழங்கி வாழ்த்தும் ஊதிப்பிரஸா தத்தைப் பகவான் பாபாவும் பல அன்பர்களுக்கு வழங்கி யிருக்கிறார். ஒவ்வோர் ஆண்டும் ஷிர்டி பாபாவின் பிறந்த நாள் ஷிர்டியில் கொண்டாடப்படும் பொழுது, பகவான் தனது சூக்ஷ்ம சரீரத்தில் அங்கு செல்கிறார். திரும்பியபின், "நான் ஷிர்டி சென்றிருந்தேன்" என்று அருகிலிருப்பவர்களிடத்தில் கூறுவார். ஷிர்டி பாபாவின் அடியார்களில் ஒருவர் உடலைத் துறக்கும் நாளை முன்கூட்டியே சொல்லி, அந்த நாளில் தன் உடலை விட்டு நீங்கி அந்த நல்ல அடியாருக்குத் தன் தரிச னத்தையும் ஷிர்டி பாபாவின் தரிசனத்தையும் ஒருங்கே அளித்திருக்கிறார்.

பகவான் ஸத்ய ஸாய் பாபாவின் அருளிச்செயல்கள் யாவும் ஷிர்டி பாபாவினுடையதைப் போலவே நிகழ்வது கண்கூடு. இவரே தான் அவர் என்பதில் எந்த ஆதாரத் தையும் அலைந்து தேடி தூண்டித் துருவிப் பார்க்கவேண்டிய தில்லை. பகவானுடைய சொல் ஒன்றே போதும். இது குறித்துச் சாட்சிகள் விசாரணை தேவையில்லை.

5

அருளில் விளைந்த அதிசயங்கள்

வினை தெரிந்த நாள் முதலாக, இல்லை இல்லை, அவர் பிறந்த நாள் தொடங்கி அதிசய நிகழ்ச்சிகளே பகவானுடைய சரித்திரத்திலே அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. அக்ஷய

Koviloor Digital Library

ஆண்டில் கார்த்திகை ஸோம வாரத்தில் ஆர்த்ரா நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில் அவதாரம் நிகழ்ந்த செயலே தெய்வீக மானது. பெற்ருேர் ஒருமுகமாக நிறைவேற்றிய ஸத்ய நாராயண பூஜையின் பலனுக, சிவனுக்குரிய மாதத்தில், அவனுக்குரிய நக்ஷத்ரத்தில் வந்துதித்த குழந்தை சத்தியா.

தொட்டிலில் கிடந்த சின்னஞ்சிறு குழந்தை, படுக்கையின் கீழிருந்து ஏதோ ஒரு விசையினுல் உந்தப்பட்டதுபோல மேலும் கீழுமாக அசைவதைச் சுற்றிலுமிருந்த தாய்மார்கள் கவனித்தார்கள். என்னவென்று தெரிந்து கொள்ள, படுக்கையை அகற்றிப் பார்த்தபொழுது. அங்கு ஒரு நாகப்பாம்பு சுருண்டு படுத்திருந்தது.

எப்பொழுதும் விபூதியும் நெற்றியுமாய் இருக்கவேண்டும் என்று பிடிவாதம் செய்வான் ஸத்தியா. உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்கும் எந்தச் சூழ்நிலையும் அவனுக்குப் பிடிக்கவில்லை என்பது விரைவிலேயே தெளிவாயிற்று. கோழியையோ மீனையோ ஆட்டையோ கொன்று உணவு சமைக்க யாரேனும் முற்படும்பொழுது, அவனுக்குப் பொறுக்காது. அந்த உணவை அவன் சாப்பிட மறுத்து விடுவான். தன்வீட்டிலேயே சாப்பிடாமல், வேறு வீடுகளுக்குச் சென்று கேட்டுச் சாப்பிட்டு விட்டு வருவான். இதனுலெல்லாம் அவனை ஒரு ''பிரம்ம ஞானி'' என்றே எல்லோரும் அழைக்கலாயினர்.

பசி என்று வந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் அன்னமிடவேண்டும் என்று அடம்பிடிப்பான். அப்படிச் செய்யாவிட்டால் அழுது அமர்க்களம் செய்வான். ''உன் சோற்றை வேண்டுமானுல் பிச்சைக்காரனுக்குப் போடு. அப்புறம் உனக்குச் சோறு கிடையாது'' என்று மிரட்டினுலும் மசிய மாட்டான். சரியான வழி கிடைத்தது என்று மகிழ்ந்து தன் பங்கை எடுத்து வாரி வழங்கி விடுவான்.

ஆனுல் அவன் பசியினுல் வாடினதாகவே தெரியவில்லை. வயிறு நிரம்பியதாகவே காணப்படும். போதும் போதாத

Koviloor Digital Library

தற்கு, அவன் உள்ளங்கை நெய்யும் பாலுமாக மணக்கும். ஒரு "பெரியவர்" வந்து தனக்கு உணவூட்டி விட்டதாகத் தன் தாயாரிடம் சொல்லுவான். யார் அந்தப் பெரியவர்? யாருக்குத் தெரியும்?

ஊரில் ராமநவமி உற்சவம். மாட்டு வண்டியில் ராமரின் படத்தை வைத்து ஊர்வலம் விட்டார்கள் புட்டபர்த்திச் சிறுவர்கள். ஸத்தியாவின் வீட்டு வாசலில் வண்டி வந்த போது, ஐந்து வயது நிரம்பாத ஸத்தியா வண்டியின்மேல் ஸ்ரீராமனின் படத்துக்குக் கீழே "ஜம்"மென்று உட்கார்ந்திருப்பதைக் கண்டார்கள் வீட்டிலிருப்பவர்கள். ஏன் சத்தியாவை மட்டிலும் அப்படி உயர உட்காரவைத்து ஊர்வலம் விடுகிறீர்கள் என்று கேட்டதற்கு, சிறுவர்கள் ஒரு முகமாகச் சொன்ன பதில் "அவன் எங்கள் குரு!". ஐந்து வயதுப் பாலகன் பிரம்ம ஞானியாகவும் குருவாகவும் தன்னை யொத்த விளையாட்டுத் தோழர்களாலும் வயதில் மூத்த பெரியவர்களாலும் அழைக்கப்படுவதற்குரிய சின்னங்கள் பால ஸத்தியாவிடம் மிகுதியாகவே காணப்பட்டன என்று ஊகிக்கலாம்.

காலிப்பையிலிருந்து நினைத்தபோதெல்லாம் மிட்டாய் களை எடுத்து எல்லோருக்கும் விநியோகம் செய்யும் விந்தை அப்போதே தொடங்கி விட்டது.

ஸத்தியாவின் இளம் உள்ளம் துறவை நாடியே நிற்பதும் தெளிவாயிற்று. எது வேண்டுமானாலும் பிறருக்குக் கொடுத்து விட்டு, தனக்கு என்று மிகுந்ததைத்தான் ஸத்தியா எடுத்துக் கொள்வான். இந்தத் துறவு வெறும் உலர்ந்த பாலைநிலமாக மாறாமல், அதனூடே பக்தி என்னும் குளிர்ந்த நீரோட்டம் 'சல சல'வென்று பாய்ந்து அதைச் சோலை நிலமாக்கியது. கண்ணனின் லீலைகளைப் பாடி ஆடி ஊர் தெருக்களில் இந்தப் பக்திப் பிரவாகத்தை பெருக விட்டான் ஸத்தியா. இதிலே ஷிர்டி பாபாவின் திவ்ய

Koviloor Digital Library

சரிதத்தையும் கருத்துப் பொருளாக்கி அவன் நடித்துக் காட்டியதுதான் வியப்புக்குரியதாக இருந்தது.

இறைவனது பாட்டே திருப்பாட்டு; மற்றதெல்லாம் வெறும் பாட்டு என்று திரைப்படப் பாட்டுகளை ஒதுக்கிய ஸத்தியா, புட்டபர்த்தியையே தனது பக்தியினாலும் பஜனை யினாலும் பிருந்தாவனமாக, கோகுலமாக மாற்றிக்கொண் டிருந்தான். இவ்வுலகத்தையெல்லாம் ஒரு பிருந்தாவன மாக்குவதற்கு அங்கு ஓர் அடையாள ஒத்திகை நடத்திக் கொண்டிருந்தான். பாட்டும் பேச்சும், மேடை அமைப்பும் எல்லாம் ஸத்தியாவினுடையது. இயக்குவதும் அவனே. ஒரு சமயம் நாடகத்தின் நடுவே, நரசிம்மாவதார வேடம் பூண்டிருந்த ஸத்தியா, தூண் பிளந்து வெளியே பாய்ந்து இரண்ய கசிபுவின் மார்பைப் பிளந்து மாய்க்க வேண்டிய கட்டத்தில், நரசிம்மமாகவே தீயெழ விழித்து மூரிமுழங்கிய போது ஊரே பயந்து விட்டது. ஸத்தியாவின் உக்கிரமும் அடங்கவில்லை. கற்பூரம் காட்டி, கன்னத்திலும் போட்டுக் கொண்டபோதுதான், வந்த ஆவேசம் 'மலை'யேறியது. இதனால், சத்தியாவின் பஜனைக்கு மிகுந்த புகழ் உண்டாகி விட்டது. பக்கத்துக் கிராமங்களில் எல்லாம் இதையே பேசினார்கள். மற்ற ஊரிலேயெல்லாம் தொத்து நோய் வந்து தொல்லை தந்தபோது, புட்டபர்த்தி மட்டும் பிழைத்து நின்றது. எல்லாம் சத்தியா செய்யும் பஜனையினால் தான் என்று நம்பிய மற்ற ஊரார், சத்தியாவைத் தங்கள் ஊருக்கு வந்து பஜனை செய்ய வருந்தி வருந்தி அழைக்க ஆரம்பித் தார்கள். ஊரிலே உள்ள பேரிலாத் தெய்வங்களெல்லாம் ஸத்தியாவின் பேரைக் கேட்டு பெயர்ந்தோடிப் போகும் என்பது அவர்களது அசையாத நம்பிக்கை.

ஒரு சமயம் ஒரு புகழ் பெற்ற நாடகக் கம்பெனி ஊருக்கு வந்து நாடகங்கள் நடத்தியது. அதில் வரும் நடிகை மிகவும் லாகவமாகத் தலையில் கரகம் ஏந்தி, ஆடி குனிந்து தரை மேல் வைத்திருக்கும் ஒரு கைக்குட்டையைப் பல்லினால் கவ்வி எடுப்பாள். நாடகக் கொட்டகை மகிழ்ச்சியால்

Koviloor Digital Library

அதிரும். இதைப் பார்த்தான் ஸத்தியா. தானும் அதைப்போல் செய்யவேண்டும் என்று ஆசை மிகுந்தது. அவ்வளவு தான். அந்த வித்தையைப் பயிலத் தொடங்கினன். வெகு விரைவில் அது அவன் வசப்பட்டுவிட்டது.

இதை அறிந்த ஊரிளைஞர்களில் உற்சாகமுள்ள சிலர், கிராமத் திருவிழாவில் இதைச் சத்தியா செய்து காட்ட வேண்டுமென்று ஒற்றைக் காலில் நின்ருர்கள். சத்தியா ஒத்துக் கொண்டான். ஊர் கூடியது. ஒரே பரபரப்பு. நாடகக் கம்பெனி நடிகை ருஷ்யேந்திரமணியே வந்து நடிக்கிருர் என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்ததால் யாரும் சத்தியா இதைச் செய்யப்போகிருன் என்று எதிர்பார்க்கவில்லை. ''ருஷ்யேந்திரமணியும்''மேடைமேல் வந்தாள். தலையில் கரகத்தை வைத்துக்கொண்டே சுற்றிச் சுழன்று ஆடினுள். பின் உச்சக் கட்டமாக, தரைமேல் இருக்கும் கைக்குட்டையை எடுக்கும் நேரம் வந்தது. ஆனுல் இங்கு வைக்கப்பட்டிருந்தது கைக் குட்டையன்று; ஒரு சிறு ஊசி. அதுவும் கண்ணிமைகளால் எடுக்கப்படவேண்டும். ருஷ்யேந்திரமணியாக நடித்த ஸத்தியா அதைக் கண்ணிமைக்கும் நேரத்தில் கஷ்டமில்லாமல் எடுத்து விட்டான். எடுத்தது ஸத்தியா என்று அவன் பெண் வேடத்தைக் கலைத்து விட்டு மேடைமீது நின்ற போதுதான் ஊருக்குத் தெரிந்தது. ஒரே பேராரவாரம் விண்ணை முட்டி எழுந்தது. பரிசுகளும் பாராட்டுக்களும் குவிந்தன.

ஆனுல் கண்பட்டுவிட்டது. மறுநாள் சத்தியாவின் கண்கள் சிவந்து வீங்கி விட்டன. இடைவிடாமல் கண்களிலிருந்து நீர் வழியலாயிற்று. கண்ணைத் திறக்கவே முடியவில்லை. சுரமும் வந்து சேர்ந்து கொண்டது.

அன்று இரவு தலைமாட்டில் ஏதோ காலடிச் சத்தம் கேட்டு ஸத்தியாவின் தாய் விழித்துக் கொண்டாள். ''யாரது'' என்று கேட்டாள். பதிலில்லை. அந்தக் காலடிச் சத்தம் சத்தியா இருக்கும் அறைப் பக்கமாகச் சென்றது.

Koviloor Digital Library

எல்லாம் மர்மமாக இருந்தது. சடக்கென்று எழுந்திருந்து சத்தியாவின் பக்கம் சென்று பார்த்தாள். அங்கும் ஒருவரும் இல்லை. சத்தியா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவன் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். சுரமே இல்லை. கை விளக்கைக் கொண்டு வந்து முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். கண் நோய் இருந்ததற்கு அடையாளமே இல்லை. மறுநாள் சத்தியா எப்போதும் போல வளைய வந்தான்.

ஏதேனும் பொருள் காணுமற்போய்விட்டால் சத்தியா விடம் தான் எல்லோரும் வந்து சொல்வார்கள். அவனும் சர்வசகஜமாக அது இருக்குமிடத்தைத் தெரிவிப்பான்.

சத்தியாவின் கைகளிலிருந்து எப்பொழுது வேண்டு மானுலும் விபூதியாய்க் கொட்டும். ஷிர்டிபாபாவின் படங்கள் வந்து தோன்றும். அவர் அணிந்திருந்த காவி ஆடையின் துண்டுகள் கைகளில் வந்து அமரும். அவரது சந்நிதியில் காணிக்கையாக வைக்கப்பட்ட பேரீச்சம்பழங்கள் வந்து குவியும்.

ஒரு சமயம் ''நீதான் ஸாயி பாபா என்பதற்கு என்ன அடையாளம்?'' என்று கேட்டார்கள். ''மல்லிகைப் பூக்களைக் கொண்டு வாருங்கள்!'' என்ருன் சத்தியா. கொண்டு வந்தார்கள். அவற்றை வாங்கித் தரையில் தூவினுன் சத்தியா. அவை ''ஸாய் பாபா'' என்று எழுத் துக்களாக மாறின.

ஒரு சமயம் ஹம்பியில் விரூபாக்ஷர் கோயிலுக்கு சத்தியா வையும் அழைத்துக் கொண்டு எல்லோரும் சென்றிருந் தார்கள். அங்கு மூலவருக்குத் தீபாராதனை நடந்தது. அந்த ஒளியில் அங்கு மூலவராக நின்றது விரூபாக்ஷலிங்கமல்ல; சத்தியாவின் உருவம் ஆசிகூறும் பாணியில்கையை உயர்த்தி நின்றதைத்தான் எல்லோரும் கண்டார்கள். ஒருவேளை சத்தி யாதான் ஒருவருக்கும் தெரியாமல் கர்ப்பகிருஹத்தின் உள்ளே போய் அவ்வாறு நின்று வேடிக்கை செய்கிருனே என்று

Koviloor Digital Library

எண்ணி விசாரித்ததில், சத்தியா கோயிலுக்குள்ளேயே வராமல் வெளியே நின்றுவிட்டது தெரிந்தது. இந்த அதிசயம் ஊரெங்கும் பரவி விட்டது. சத்தியாவுக்கு எல்லோரும்பூஜை செய்தார்கள்!

பஜனையும் பாட்டும் அன்று இரவு முழுதும் தொடர்ந்து நடந்தன. யாருக்கும் நிறுத்த மனமில்லை. பயங்கரமான நோயுள்ளவர்கள் நோய் தீர்ந்து வாழ்த்தினர்கள். ஹம்பியும் ஹாஸ்பேட்டையும் பூலோக வைகுண்டமாயின. ஹம்பியிலிருந்து திரும்பிய மறுநாள், அதாவது 1940 அக்டோபர்மாதம் 20ந்தேதியன்றுதான், பள்ளிக்குப்போன சிறிது நேரத்திற்கெல்லாம் சத்தியா திரும்பி வந்தான்; வீட்டுக்குள் போகவில்லை; புத்தகமூட்டையைத் தூக்கி எறிந்தான். "நான் இனி உங்கள் சத்தியா இல்லை; நான் ஸாய்!" என்று முழக்கமிட்டான். குரல்கேட்டு எட்டிப்பார்த்த அண்ணியாருக்கு சத்தியாவைச் சுற்றித் தெரிந்த சத்திய ஒளிவட்டம் தென்பட்டு கண்ணைப் பறித்தது. "ஓ!" வென்று அலறிவிட்டார் அந்த அம்மையார். "நான் போகிறேன்! மாயை மாய்ந்தது. என்னைப் பக்தர்கள் அழைக்கிறர்கள்!" என்று அழுத்தமான வாக்கு சத்தியாவிடமிருந்து ஒலித்தது. இனி அவன் நமக்குத் தெரிந்த சத்தியா என்ற வாலிபன் இல்லை. பகவான் ஸத்ய ஸாயிபாபா என்று பாரெல்லாம் பாடிப் பரவப் போகிற ஒரு பரதத்துவத்தைத்தான் நாம் பார்க்கப் போகிறேம். பெற்ற தாயே வந்து அழைத்தபோது, "யாருக்கு யார் சொந்தம்?" என்று கேட்ட அந்தச் சத்திய ஒளியைத்தான் காணப் போகிறேம். பெற்ற தாயிடம் சிறிது சோறு வாங்கி, அதைப் பிண்டமாக உருட்டி, மூன்று கவளங்கள் உண்டு. "பொய் மாயப் பேய் பொடியாகிப் போயிற்று; வருந்தற்க! என்று பூர்வாசிரமத்துக்கும் எல்லா பந்தங்களுக்கும் சேர்த்து பிண்டப்பிரதானத்துடன் சிராத்தம் செய்துவிட்ட, பெருந்துறவுத் தூய்மையைத்தான் சந்திக்கப் போகிறேம். தன்னுடைய மாயா சக்தியினல், நடக்க முடியாததையும் நடக்கவைக்கும்,

Koviloor Digital Library

இல்லாதவற்றையும் இருக்க வைக்கும் பேராற்றலைத்தான் பார்க்கப் போகிறோம்.

தனது அவதார காலத்தில் முதல் பதினாறு வருடங்கள் விளையாட்டிலும், அடுத்த பதினாறு வருடங்கள் அருட்செயல் களிலும், மற்றைய ஆண்டுகள் அருளுபதேசங்களிலும் செல வாகும் என்று பாபாவே கூறியிருக்கிறார்.

மானுட அறிவிற்கு அப்பாற்பட்ட அதிசயங்கள் அள வற்றவை பாபா நிகழ்த்தியிருக்கிறார்; நிகழ்த்தி வருகிறார். அவை நமக்குத் தெரிந்த இயற்கை நியதிகளை மீறியவை. பாபாவின் பார்வையில் அவை இயற்கையேயாகும். நமக்கு விந்தையாகத் தோன்றுகின்ற ஒன்று அவருக்கு மிக இயல் பானதொரு நிகழ்ச்சியாகும். இதைத் தெரிந்து கொண்டால், அவர் ஏதோ இயற்கை நியதிகளை மீறி அதிசயங்கள் செய் கிறார் என்று சொல்லத் தோன்றாது. நாம் உண்மைக்கு உறங்கிக் கொண்டிருக்கிறோம்; அவர் பொய்க்கு உறங்கிக் கொண்டிருக்கிறார். நாம் இருப்பது இரவின் இருள்; அவர் இருப்பது பகலின் ஒளி. இருளில் தோன்றும் மருள்கள் இயற்கையா? பட்டப்பகலில் தோன்றும் தெளிவுகள் இயற் கையா? நாம் முன்னதுதான் சரி என்று சாதிப்போம். அவர் பின்னதுதான் சரி என்று போதிப்பார். ஊன்றிப்பார்த்தால், அவரது செயல்கள்தான் இயற்கை; நமது செயல்களெல்லாம் செயற்கை. உள்ளது உள்ளபடி தோன்றுவது இயற்கை யென்றால், அவரது நிலைதான் இயற்கை. எல்லாவற்றையுமே மாற்றி அறிகின்ற நம் நிலைதான் நிலை குலைந்த செயற்கை.

அவரது அருளிச் செயல்களில் சிலவற்றை மட்டும் இங்கே சொல்லி மகிழலாம்.

சித்ராவதி ஆற்றின் கரையிலிருக்கும் புளியமரத்தில் புளியம் பழத்தைத்தானே நாம் எதிர்பார்க்கலாம்? பகவானின் முறைவேறு. அவர் அதன் கிளைகளை உலுக்கும்போது ஆப்பிள்பழங்கள் உதிரும். அதுமட்டுமன்று. ஒரு கிளையி லிருந்து ஆப்பிளும், மற்றொரு கிளையிலிருந்து மாம்பழமும், மற்

Koviloor Digital Library

ரென்றிலிருந்து ஆரஞ்சுப்பழமும் அவர் பறித்துத் தருவார். அவரைப் பொறுத்தவரை, அந்தப் புளியமரம் என்ன, எந்த மரமும் கற்பகவிருக்ஷமாகி விடுகின்றது. உண்மையில், கற்பக விருக்ஷமாக இருப்பது மரமா, பகவானு?

என்னேடு உங்களால் ஓடமுடியுமா? என்று தன்னெடொத்த இளங்காளைகளுக்குச் சவால் விடுவார். அவர்கள் கண்மூடிக் கண் திறப்பதற்குள் வெகுதொலைவில் நின்று கொண்டு எட்டியும் எட்டாமல், மிகவும் அருகில் இருந்தும் தூர இருந்து சிரிப்பார்.

''இதோ பாருங்கள்!'' என்று கூவி அழைப்பார். பார்த்தால், பாபா இருக்கமாட்டார்; பேரொளியொன்று - பிழம்பாக சுழன்று வானத்துப் பிறைமதியைப் பிளந்துகொண்டு செல்லும். அல்லது, ஷிர்டி பாபாவின் பேருருவம் எங்கும் வியாபித்துக் காணும். அல்லது, பிருந்தாவனத்து மாயக் கண்ணன் மயிற்பீலியும் வனமாலையுமாகக் குழலூதி நிற்பான். அல்லது, நெற்றியிலிருந்து ஒளிக்கற்றை சீறிப்பாய்ந்து, ஒற்றை நெற்றிக்கண்ணனுன பரசிவத்தைப்போல் தோன்றும். அல்லது, ஷிர்டி பாபாவின் ஸமாதி கண்முன் வந்து தோன்றும்.

கடற்கரையில் நின்று ஒரு கோப்பையை வீசிக் கடலுக்குள் எறிவார். திரும்பி அது வந்து அவர் காலடியில் கிடக்கும். அதை எடுத்துப் பார்த்தால், உப்புத் தண்ணீருக்குப் பதிலாக அமுதமாக இனிக்கும் நீர் நெஞ்சைக் குளிர வைக்கும். ஒரு சமயம், கடலலைகள் ஒரு பூமாலையைக் கொணர்ந்து அவர் மலர்ப் பாதங்களில் சூட்டின.

பெருந் திரளாக பெருந்தரத்து உயர்குடி மக்கள் கூடியிருந்த இடத்தில், ஒரு சக்கிலியன் முண்டியடித்துக்கொண்டு இவரை நோக்கி, வந்து விட்டதே துணிச்சலான செயல் என்ருல், அவன் கேட்டது அதைவிடத் துணிகரமானது. ''ஐயா! என் வீட்டுக்கு வரணுமுங்க!'' இது அவன் 'அடாத' வேண்டுகோள். ''ஆகா! வருகிறேன்'': இது இவர் திடுக்

Koviloor Digital Library

கிடாத பதில். அவனும் தன் விலாசத்தைச் சொல்லவில்லை, இவரும் கேட்டுக் கொள்ளவில்லை. எப்பொழுது என்று அவன் கேட்கவில்லை; இவரும் சொல்லவில்லை. அழகாயிருக்கிற தல்லவா? நாட்கள் ஓடின. சக்கிலியனைப் பார்த்து எல்லோரும் பைத்தியம் என்று பட்டங்கட்டியதுதான் மிச்சம். அவனும் கிட்டத் தட்ட எல்லாவற்றையும் மறந்து விட்டுத் தன் பாட்டுக்குச் செருப்புத் தைத்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் அவன் பக்கத்தில் ஒரு பெரிய கார் வந்து நின்றது. சக்கிலியன் முதலில் பயந்து போனன். ஆனால் காருக்குள் தெரிந்த அந்த முகத்தைப் பார்த்ததும் அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ''ஏறு காரில்!'' என்ருர் பாபா. ''ஓட்டு இவன் வீட்டுக்கு!'' என்ருர் டிரைவரிடம். தூரத்தில் வண்டியை நிறுத்தி விட்டு, இறங்கி விடுவிடென்று சந்து பொந்தெல்லாம் நுழைந்து அந்தச் சக்கிலி ஏழையினுடைய குடிசைக்குச் சொல்லி வைத்ததுபோலச் சென்று நின்ருர். மிட்டாய்களும் பழங்களும் நிறைய அவர் கையசைத்ததும் வந்து சேர்ந்தன. அதை அந்த ஏழையின் குடும்பத்தினருக்குக் கொடுத்து மகிழ்ந்தார். அக் குடிசையில் கொஞ்ச நேரம் அமர்ந்திருந்தார்; ஏழைகளின் மனது குளிர்ந்து நிறைந்தது.

புட்டபர்த்திக்கு வரும் பக்தர்களுக்கெல்லாம் உணவளிக்கும் பணியை மேற்கொண்டிருந்த அம்மையார் சுப்பம்மாள். இவரோடுதான் பாபா தங்கியிருந்தார். அன்பின் திருவுருவம் இந்தப் பெண்மணி. ராமபிரானுக்குச் சபரியைப்போல், பகவானுக்குச் சுப்பம்மாள். இந்தப் பெருமாட்டிக்கு ஒரு சமயம் உடல் நலிவுற்றது. பாபா அப்போது பங்களூருக்குச் சென்றிருந்தார். சுப்பம்மாள் பகவானையே தியானித்திருந்தாள். அந்த உடல்நிலையிலும் பிரசாந்தி நிலயத்தைப் பார்க்க வேணுமென்று ஒரு மாட்டு வண்டியில் வந்தார். பிரசாந்தி நிலயம் கட்டப்பட்டு வந்த நேரம் அது. இந்தச் சிரமத்தினுல் அவள் உடல்நிலை இன்னும் மோசமாயிற்று.

Koviloor Digital Library

பாபா பங்களூரிலிருந்து புறப்பட்டுவிட்டார். இதற்குள் சுப்பம்மாள் இறந்து விட்டாள் என்று உறவினர் எல்லாம் அநேகமாக முடிவு செய்து விட்டார்கள். இருந்தும் அவர்களால் நிச்சயிக்க முடியவில்லை. இவ்வாறு மூன்று நாட்கள் கழிந்தபின், நான்காம் நாள் பாபா சுப்பம்மா கிடத்தப்பட்டிருந்த இடம் வந்தார். பகவான் வந்ததும் சுப்பம்மா கண்களைத் திறந்து பார்த்தாள். அவருடைய கைகளைப் பிடித்துக் கொண்டாள். பாபா தன் கையைச் சுப்பம்மாளின் வாயருகே கொண்டு சென்றார். அவருடைய கையிலிருந்து கங்கை நீர் பெருகியது. அதைச் சுப்பம்மாள் அளவிலாத ஆர்வத்துடன் பருகினாள். மறுகணம் அவள் ஆவி பிரிந்தது.

திருச்சி நகரில் பாபா ஒரு சமயம் தங்கி அந்நகரத்து மக்களுடைய வரவேற்பினை ஏற்றுக் கொண்டிருந்தார். திருச்சி நகரவீதிகளில் அவர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட பொழுது, தற்செயலாக ஒரு கார் ஒரு சிறு பையனை மோதித் தள்ளிவிட்டது. பையனுக்குப் பலத்த காயம். பெருங்கூட்டம் கூடிவிட்டது. போலீஸாரும் அந்த இடத்துக்கு விரைந்தனர். இதையறிந்த பாபா பையன் கிடத்தப்பட்டிருந்த இடத்துக்கு வந்தார். பையனுடைய உடம்பை தம் பட்டுக்கையினால் ஒரு தடவை தொட்டார். அவ்வளவுதான், பையன் ஒரு துள்ளுத் துள்ளி எழுந்து ஆனந்த நடமாடினான். உடம்பில் ஒரு வலியுமில்லை; ஒரு கீறல்கூட தென்படவில்லை.

மற்றொருநாள் பாபா மேடையில் அமர்ந்து இருக்கையில், கூட்டத்தில் யாரோ ஒருவர் "பாபாவாவது, பகவானாவது" என்று ஏகடியம் பேசிக்கொண்டிருந்தார். இதை உணர்ந்த பாபா, அந்த ஆசாமியின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு பையனை மேடைக்கு வரச் சொன்னார். அவன் ஒரு பிறவி ஊமை; செவிடுங்கூட. அவனை மைக்கின் முன் நிறுத்தி வைத்து "உன் பெயரென்ன?" என்று கேட்டார். பையன் கணீரென்று "வெங்கடநாராயணன்!" என்று பதில்

Koviloor Digital Library

சொன்னுன். மறுநாள் காலே, பாபா தங்கியிருந்த வீதி முழுவதும் ஊமைகளும் செவிடுகளுமாக நூற்றுக்கணக்கில் கூடி விட்டார்கள்!

தமது பதினைந்து வயதில் புட்டபர்த்திக்குப் பகவான் வந்த நேரம். ஒரு நாள் அவரது உள்ளங்கையில் ஒரு பழம் வந்தது. அதுபோன்ற பழத்தை யாரும் அது வரை கண்ட தில்லே. ''அது என்ன பழம்?'' என்று கேட்டதற்கு, ''அது ஷிர்டியிலிருந்து வந்திருக்கிறது'' என்ருர் பாபா. ''நான் ஸாயிபாபா!'' என்று அவர் சிலநாட்களுக்கு முன்னர்தான் அறிவித்திருந்தார்.

பழத்தை எல்லோருக்கும் விண்டு கொடுக்க ஏற்பாடா யிற்று. வந்திருந்தவர்களுக்கெல்லாம் ஆளுக்கொரு பழம் முழுசாகக் கொடுத்தால் என்ன என்று யாரோ அபிப்பிராயப் பட்டார்கள். இதுதான் பாபாவிற்குப் பிடித்த விளேயாட்டா யிற்றே? ''கொண்டுவா ஒரு கூடையை!'' என்ருர். கூடை கொண்டுவரப்பட்டது. இதில் நாற்பது பழம் தானே பிடிக்கும் என்ருர்கள். ''பரவாயில்லே'' என்று பாபா அந்தக்கூடையை லேசாக தட்டினுர். கூடை நிரம்பியது. அங்கிருந்த நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கும் கண்டு மிஞ்சியது அதில் இருந்த பழக்குவியல்!

புது டில்லி ஸ்கூட்டரோட்டி ஒருவனின் கதையும் சுவை யானது. தில்லுமுல்லுகள் பண்ணி மீட்டரை முடுக்கி அதிகம் காண்பிக்க வைத்து காசு பண்ணுவதில் நிபுணன் இவன். டில்லி மாநகருக்குப் பகவான் விஜயம் செய்தபோது அவரைக் காணும் தற்செயலான வாய்ப்பு இவனுக்கும் கிடைத்தது. விட்ட குறை தொட்ட குறையும் வந்து ஒட்டிக் கொண்டது. மறுநாள் ஒரு மனிதரைத் தன் வண்டியில் ஏற்றிக்கொண்டு போனுன். இறங்கும்பொழுது அவர் பணம் கொடுக்கும் பொழுது பத்து ரூபாய் நோட்டாகக் கொடுத்தார். அவன் பெற்றுக்கொண்டு மீதிச் சில்லறையும் கொடுத்தான். பிறகு வண்டியைக் கிளப்பிக்கொண்டு போனுன்.

Koviloor Digital Library

சில நிமிடங்கள் கூட ஆகியிருக்காது. ஸ்கூட்டர் அந்தப் பிரயாணியிடம் மறுபடி வந்து நின்றது. "ஸார்! நீங்க நோட்டைக் கொடுக்காமலேயே சில்லரையை வாங்கிட்டீங்க. ரூபா நோட்டைக் கொடுக்கலியே!" என்றான் ஸ்கூட்டரோட்டிய மனிதர் வாதாடிப் பார்த்தார். பயனில்லை. ஒரே படியாகச் சாதித்து விட்டான். வேறு வழியில்லாமல் நோட்டைக் கொடுத்து விட்டுப் போய்ச் சேர்ந்தார். இத்தனைக்கும் முதல் நாள்தான் பாபாவைப் பார்த்ததைப் பற்றியெல்லாம் அளந்திருந்தான் அவரிடம்! பேச்சு சுவாரசியத்தில் தமது பெயர் தனது வீடு வாசல் எல்லா விவரமும் அவர் சொல்லிவிடும் அளவுக்கு நெருக்கம் வந்துவிட்டிருந்தது. இந்தக் காலத்தில் யாரையும் நம்புவதற்கில்லை என்று சொல்லிக் கொண்டு போனார்.

ஆனால் மறுநாள் விடிந்ததும் அந்த ஸ்கூட்டரோட்டி ராமானுஜத்தின், ஆம், அவர் பெயர் ராமானுஜம், வீட்டுக் கதவைத் தட்டிக்கொண்டு நின்றான். "ஸார்! உங்ககிட்ட பணம் வாங்கிக்கிட்டு போனதக்கப்புறம்தான் கவனிச்சேன். என் பையிலேயே அதை நான் போட்டிருந்திருக்கேன். உங்ககிட்டே தெரியாமே அதிகமாப் பணம் வாங்கிட்டேன். அதைத் திருப்பிக் கொடுக்கத் தான் வந்தேன். நல்ல காலம், நீங்க உங்க பெயரையும் வீட்டு விலாசத்தையும் பேச்சோடு பேச்சா சொன்னது நினைவு வந்திச்சு. இல்லேன்னா, பெரிய தப்பு பண்ணியிருப்பேன்!" என்றான். ராமானுஜம் சொன்னார். "அப்பா! எல்லாம் பாபா செயல்!" "ஆமாங்க! இன்னையிலிருந்து நான் புது மனுசன். இனி ஒரு தப்புத் தண்டாச் செய்யறதில்லே. சத்தியம்!" என்றான் ஸ்கூட்டரோட்டி.

பகவானுடைய சைகைகளுக்குப் பஞ்சபூதங்களும் செவி சாய்க்கின்றன. ஒரு விஜய தசமி பண்டிகையின்போது பகவான் ஊர்வலமாக அழைத்துச் சென்று கொண்டிருந்தார்கள். அலங்கார ரதத்தில் பகவான் அமர்ந்திருந்தார். ஊர்வலம் புறப்பட்டபோது வானம் கருமேகம் சூழ்ந்து

Koviloor Digital Library

இருண்டது. இடிகள் உறுமின. மின்னல் வெட்டியது. ஆனால் ஊர்வலம் நடந்து கொண்டிருந்தது. மூன்று மணி களாயின. மழை இன்னும் பெய்யவில்லை என்பது பெரு வியப்பாயிருந்தது. ஊர்வலம் நிலைக்கு வந்தது. பகவான் இறங்கித் தன் இருப்பிடம் சென்றார். எல்லோரும் தத்தம் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள். ஒருவரும் வெளியே தங்கி விடவில்லை என்பதை நிச்சயம் செய்து கொண்டதுபோல், மழை பிடித்துக் கொண்டது; பிரளயமாகக் கொட்டியது.

இது ஒரு தனிச் சம்பவமாக இருந்தால் ஏதோ தற்செயலாக நிகழ்ந்தது என்று ஒதுக்கி விடலாம். பலநேரங் களில் இவ்வாறு நடந்திருக்கிறது. குடகு தேசத்திலே, மர்க் காராவில் பகவான் மேடையில் பேசிக்கொண்டிருக்கிறார். அது மாரிக்காலம்; கார் மேகங்கள் குமுறிக் கொண்டிருக் கின்றன. எந்த நேரமும் அடைமழை பிடித்துக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது. அதோ, தூரத்து மலைத்தொடர்களில் மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. பாபாவே துளியும் கலக்க மில்லாமல் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார். ஒரு மணி, ஒன்றே முக்கால்மணி பேசிமுடித்துவிட்டுச் சொல்வார்: ''இனி அவரவர்கள் வீட்டுக்குத் திரும்புங்கள். இன்னும் பத்து நிமிஷம் அவகாசம் இருக்கிறது. அதன்பின் அந்த மழையும் இங்கே வந்துவிடும். இதற்குள் நியாயமாக வந்திருக்க வேண்டும்!''

பத்து நிமிடங்கள் கழித்து சொல்லி வைத்ததுபோல்மழை கொட்டத் தொடங்கியது!

சில ஆண்டுகளுக்கு முன்னால், நவராத்திரி பண்டிகை யின்போது, புட்டபர்த்தியில் எங்கும் மழை. ஆனால் மக்கள் அமர்ந்து உணவருந்தும் இடத்தில் மட்டும் ஒரு சொட்டுக்கூட விழவில்லை.

பொங்கிவரும் சித்ராவதி ஆற்றுப் பெருவெள்ளம் மேலும் மேலும் பெருகிப் பிரசாந்தி நிலயத்தைத் தொடுகிறது. மேலும் மேலும் வருமோ என்னும் அச்சம் உண்டானபோது,

Koviloor Digital Library

பகவான் அலைதெறிக்கும் வெள்ளத்தின் விளிம்பில் வந்து நிற்கிறார். "போதும் போ!" என்று ஆணையிடுவது போல் கூறுகிறார். சீறிவந்த வெள்ளம் மாறி வடிந்து பின்வாங்குகிறது.

ஷிர்டி பாபாவினுடைய ஆட்சித்திறன் ஸத்யஸாயியிடத்திலும் வெளிப்படுவதில் வியப்புக்கொன்றுமில்லை.

"நானிருக்கப் பயமேன்?" என்ற வாசகம் ஷிர்டி பாபாவின் அபயவரமாக எல்லோருக்கும் நன்கு தெரிந்த ஒன்று. பகவான் ஸத்ய ஸாயியின் வாக்கிலிருந்தும் இதே போன்ற திருக்காப்புக்கள் பல அவ்வப்பொழுது வெளியாகும். அச்சமென்னும் பாம்பை அடித்து ரத்தம் குடிப்பார்கள் அன்பர்கள்.

6

பகவானும் பகவத்கீதையும்

பகவத்கீதையைப்பற்றி யாரேனும் பேசினால் பகவானுக்கு உண்டாகிற மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அகமும் முகமும் மலர நின்று ரசிப்பார். அதுவும் பேசுகின்றவர் உள்ளத் தூய்மையோடு அன்பு மீதூரப் பேசினால், பகவானுடைய பார்வையில் அருளும் அன்பும் ஆதரவும் அலைதெறிக்கும். சண்டப் பிரசண்டமாக, நூல்களையெல்லாம் கரைத்துக் குடித்து, பிரதிவாதி பயங்கரமாக இருக்கவேண்டுமென்பதில்லை. குழந்தைபோல் மழலையாகச் சொன்னாலும், பகவானுக்கு உவகையுண்டாகும். ஆனால் பேசுவது கீதையாக இருக்கவேண்டும்.

பகவான் கீதையைப் பற்றிப் பேசும்போதும், இதே மகிழ்ச்சியும் எழுச்சியும் போட்டியிட்டுக்கொண்டு பக்தர்

Koviloor Digital Library

உள்ளத்தில் பொங்கி வழியும். கண்ணனே கீதையில் நேராக நம்மோடு பேசுகிறன். அது அவனுடைய வாய் மொழி. பகவான் கீதையைப் பற்றிப் பேசும்பொழுது கண்ணனே நேராக வந்து நம்முடன் பேசுவது போன்ற உணர்வு உண்டாகும். பகவத் கீதையின் கருத்துக்களைப் பகவான் நமக்காக எளிய முறையில் வடித்து இனிய நடையில் சொல்லியிருக்கிறார்.

கீதை ஒரு படகு, இருளின் அக்கரைக்கு நம்மைக் கொண்டு சேர்க்கிறது. அது வேதங்களின் ஸாரம்; பிழிவு. கீதையில் இறைவனது இன்குரல் ஒலிக்கிறது.

‘‘தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே’’ என்று கீதை தொடங்கி, ‘‘யத்ர யோகேசுவர, க்ருஷ்ணோ யத்ர பார்த்தோ தனுர்தர: தத்ர ஸ்ரீ: விஜயோபூதி: த்ருவா நீதி: மதிர் மம:’’ என்று முடிகிறது. எனவே, ‘‘தருமத்தைச் செய்; தருமத்தை நினை’’ என்பது தான் கீதையின் போதனை.

தருமம் இருக்குமிடம் வெற்றியும் வீறு நடை போடும். ஏனெனில் அங்குக் கண்ணன் இருப்பான். அவன் எங்கும் இருந்தாலும், தருமம் தங்குமிடம் அவனுக்கு மிகவும் உகந்தது. பாலில் வெண்ணெய் எங்கும் இருந்தாலும், தயிராக்கிக் கடையும் பொழுதுதான் வெளிப்படுகிறது.

கீதை அர்ஜுனனுடைய துயரத்தில் தொடங்கி துறவு நிலையில் நிறைவுறுகிறது. துயரத்தில்தான் வாழ்வின் உண்மைகள் துலாம்பரமாகின்றன. ‘‘எனக்கு என்றும் துயரத்தைக்கொடு!’’ என்று வேண்டிக் கொண்டாள் குந்தி. இல்லா விட்டால் உன்னை மறந்து விடுவேன் என்று அதற்குக் காரணம் சொன்னாள்.

கண்ணனிடம் சரண் புகுதல், அறவழி நிற்றல், பிறவிப் பிணியினின்று மீளுதல் இம்மூன்றும் கீதை உபதேசிக்கும் உண்மைகள். கீதையைப் புரிந்து கொள்வதும் அதன்படி நடப்பதும் ஒன்றுதான். ஸத்யம் தர்மம் என்ற இரண்டடுக்கு மாடிக்கட்டடம் கீதை. ஸத்யம் கீழ்த்தளம்; தருமம் மேல்

Koviloor Digital Library

தளம். உண்மையைக் கொண்டாடினால் போதாது; பேச வேண்டும். தருமத்தைப் புகழ்ந்தால் போதாது; செய்ய வேண்டும்.

பசித்தவனுக்கு வேண்டியது ஒரு கவளம் சோறு. களஞ்சியத்திலிருக்கும் அத்தனை தானியமுமல்ல. கீதை முழுவதையும் கூடப் படிக்க வேண்டும் என்பதில்லை. ஆன்மப் பசியைத் தீர்க்க ஒரு சுலோகம் போதும்.

தீப்பெட்டியில் நிறையக் குச்சிகள் இருந்தாலும், தீமூட்டுவதற்கு ஒரு குச்சிபோதும். கீதையில் 700 சுலோகங்கள் இருக்கின்றன. அறிவுத்தீயை மூட்ட ஒரு சுலோகம் போதும்.

கீதையைப் புரிந்து கொள்ள வேண்டும். அதை நெட்டுருப்போட்டு மண்டையில் ஏற்றிக் கொண்டால் மஸ்தகம் புஸ்தகமாவது தான் மிச்சம்.

கீதை பொது மனிதனுக்கே. முற்றும் துறந்தவர்களுக்கும் துயரமில்லை. முற்றும் உணராதவர்களுக்கும் துயரமில்லை. நடுத்தர வகுப்பினருக்குத்தான் எல்லாத் துன்பங்களும். ஆகையால் இந்தப் பொதுவான சராசரி மனிதனுக்குத்தான் கீதை மிகவும் பயனுள்ளது.

யோகம் என்றால் சம்பாதிப்பது; க்ஷேமம் என்றால் அதைக் காப்பது. இந்த இரண்டு பொறுப்புக்களையும் இறைவன் ஏற்றுக் கொள்வான். எப்பொழுது? அவனையே எப்பொழுதும் நினைத்திருந்தால். இதைச் செய்யாமல், இறைவன் பார்த்துக் கொள்வான் என்று சோம்பிச் சும்மா உட்கார்ந்துவிடக் கூடாது.

உடம்பின் எந்தப் பகுதியிலிருந்து எடுத்தாலும், ரத்தம் ஒன்றாக இருப்பதுபோல், இறைவன் எங்கும் ஒரே தன்மையனாக இருக்கிறான். அவன் நம்மிடமிருந்து யோகத்தையும் தவத்தையும் கேட்கவில்லை. நம் இதயத்தை மட்டும் கேட்கிறான். எது எதற்கெல்லாமோ இதயத்தைப் பறி கொடுப்பதில்லையா நாம்? அதை இறைவனுக்குக் கொடுப்பதிலா சிரமம்?

Koviloor Digital Library

இறைவன் எல்லோருக்கும் உரியவன். இதில் வேற்றுமைகள் கிடையாது. அவனது தர்பாருக்கு எல்லோரும் வரலாம். அதன் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும். நாம்தான் போவதில்லை. கதகதப்பு வேண்டுமென்றால் நெருப்பின் அருகில் சென்று அமரவேண்டும். எட்ட இருந்து கொண்டே சூடே இல்லையே என்று குறை சொல்லக்கூடாது. குற்றம் நெருப்பினுடையதன்று; நம்முடையது.

மின்விசிறி, மின்விளக்கு, மின்னடுப்பு முதலிய எல்லாவற்றிலும் இருக்கும் மின்சக்தி ஒன்றுதான். அது போல, எல்லாவற்றிலும் இருந்து நடத்தும் சக்தியே ஆண்டவன்.

நம்முடைய உடம்பு உணவினாலாவது கண் கூடு; உணவு மண்ணிலிருந்து வருகிறது. மண் நீரிலிருந்தும், நீர் நெருப்பிலிருந்தும், நெருப்பு காற்றிலிருந்தும், காற்று ஆகாயத்திலிருந்தும், ஆகாயம் மாயையிலிருந்தும், மாயை இறைவனிடத்திலிருந்தும் உண்டாகின்றன.

வானத்தில் மேகங்கள் வந்து போகின்றன. இதனால் வானத்துக்கு ஒன்றுமில்லை. இதுபோல உலகங்கள் தோன்றி மறைந்தாலும், இறைவன் எப்போதும் ஒன்றுபோலவே இருக்கிறான். நூல்கள்தான் துணிக்கு ஆதாரம்; துணி நூல்களுக்கு ஆதாரமன்று. இதுபோல, இறைவனை நம்பித்தான் உலகம் இருக்கிறது.

பூக்கள் ஒரு நாரில் கோர்க்கப்பட்டு மாலையாவதுபோல, உலகம் யாவும் இறைவனிடத்திலே கோர்க்கப்பட்டிருக்கிறது. உயிரினங்களெல்லாம் இறைவனது பராபிரகிருதி; உயர் இயற்கை; ஜட உலகம் அவனது அபராபிரகிருதி, தாழ் இயற்கை. முன்னது அவனுடைய ஸ்வரூபம்; பின்னது அவனுடைய ஸ்வபாவம்.

பரம்பொருள் எல்லாவற்றிலும் இருக்கிறது என்று சொல்லுவதைவிட எல்லாம் பரம்பொருளே என்று சொல்வதுதான் முறையாகும். சூரியன் தண்ணீரில் பிரதிபலிப்பதுபோல,

Koviloor Digital Library

பிரகிருதியில் பரதத்துவம் பிரதிபலிக்கிறது. பிரதி பிம்பமும் சூரியனும் வேறு வேரு என்ன?

களிமண்ணினுல் செய்த பண்டங்களெல்லாம் களி மண்ணைத் தவிர வேறில்லை. எல்லாப் பெயர்களிலும் உருவங் களிலும் ஆத்மா மெய்ப்பொருள் ஒன்றே சத்தியம். நெருப் புடன் சேர்ந்த இரும்பு சுடுகிறது. சூடு என்னவோ நெருப் புக்குத்தான் உண்டு. இதுபோல உலகத்தோடும் உடம் போடும் சேர்ந்த மெய்ப் பொருள் தானும் இன்பதுன்பங்களை அடைவதுபோல் தோற்றங்கொள்கிறது.

மெய்ப்பொருள் ஒன்றுதான். ஆனுல் உடல்களின் வேறு பாட்டிற்கேற்ப அது பலவாகக் காண்கிறது. சூரியன் ஒன்று தான், ஆனுல் அது பிரதிபலிக்கும் குளம் குட்டை கிணறு முதலியவற்றில் பலவாகக் காட்சி தருவதில்லையா? அதுபோல, நாமெல்லாம் பல உயிர்களாகத் தோற்றியபோதிலும், உண் மையில் ஒரே தத்துவம்தான். பன்மை வெறும் தோற்றம் தான்.

ஓர் உடலில்தான் பரம்பொருள் ஒளி அறிவாக இயங்கு கிறது. ஒரு கல்லில், மரத்தில், அது அவ்வாறு இயங்குவ தில்லை. விளக்கைக் கண்ணுடி ஜாடிக்குள் வைத்தால் பிரகாச மாகத் தெரிகிறது; மண் பானைக்குள் வைத்தால் தெரிவதே யில்லை.

ஓர் அறையில் இருக்கும் இருட்டு அந்த அறையையே மறைப்பதுபோல், தண்ணீரில் உண்டாகும் பாசி அந்தத் தண்ணீரையே மறைப்பதுபோல், கண்ணில் உண்டாகும் சதை நம் கண்ணையே மறைப்பதுபோல், நம்மிடத்திலேயே மாயை தோற்றங்கொண்டு நம்மையே நம்மிடத்திலிருந்து மறைக்கிறது.

இறைவனும் நானும் வேறல்ல என்ற மெய்யறிவினுலும் மாயையை வெல்லலாம். அல்லது, இறைவனைச் சரண டைவது மூலமும் வெல்லலாம். முதலாவது ஞானயோகம்; இரண்டாவது பக்தியோகம்.

Koviloor Digital Library

மாயை என்பது எங்கிருந்தோ வந்து நம்மிடம் ஒட்டிக் கொண்ட அழுக்கன்று. நம்மிடத்திலேயே நம்முடைய மனத்தைப் பற்றி நிற்கும் ஓர் இயல்பு அது. மாயை ஓர் இல் பொருள். அது இருந்ததுமில்லை; இருக்கவுமில்லை. இருக்கப் போவதுமில்லை. என்றுமே இல்லாத ஒன்றிற்கு மாயை என்று பெயர். இருப்பதுபோல அது தோற்றங்கொள்கிறது, பாலை வனத்தில் கானல் நீரைப் போல!

ஒன்றிருக்குமிடத்தில் இரண்டைப் பார்ப்பதுதான் மாயை யின் காரியம். ஒன்றே உண்மை என்பதை உணராததுதான் அறியாமை அல்லது அவித்யை. மாயை இறைவனின் கைப் பாவை; அது நம்மை ஏமாற்றும்பொழுது அது அவித்யை எனப்படுகிறது.

உலகம் இரண்டு வகையாகக் காணப்படுகிறது: (1) நாமம் (2) ரூபம். இவ்விரண்டுமே மாயையின் தோற்றங் கள்தாம். உலகம் என்பது இவையே. ஸத்வம், ரஜஸ் தமஸ் என்ற முக்குணங்களால் ஆனது மாயை. ஸத்வம் தங்கத்திலைான கயிறு, ரஜஸ் செம்பாலான கயிறு; தமஸ் இரும்பினாலானது. இம்மூன்றுமே நம்மை இறுகக் கட்டி விடும் மாயையின் இயல்புகள்.

இந்த உலகம் ஒரு மரத்துக்கு ஒப்பிடப்படுகிறது. இது ஸம்ஸாரவிருக்ஷம். இது விநோதமானது. இதன் வேர்கள் மேலேயும் கிளைகள் கீழ் நோக்கிப் படர்ந்தும் தலைகீழாகத் தொங்கும் மரம். இதன் பழங்கள் பிறவிச் சுழலுக்குக் காரண மாக இருப்பவை. இது அழியும் தன்மையுடையது. ஆதலால் மெய்யன்று. இது எப்பொழுதும் மாறிக் கொண்டே யிருக்கும். ஆதலால் இதில் பற்று வைக்கக் கூடாது.

மனம் எவ்வளவு முன்னேறுகிறதோ அவ்வளவுக்கவ் வளவு மனிதன் வளருகிறான். மனமே மனிதன். மனமே விடுதலைக்கும் காரணம்; பிறவித்தளைக்கும் காரணம். மனத்தை வென்றவனே ஜீவன் முக்தன்.

Koviloor Digital Library

நூல்களால் ஆனது துணி. நூல்களையெல்லாம் ஒவ்வொன்றாகப் பிரித்து எடுத்து விட்டால் துணியே இருக்காது. இதுபோல ஆசைகளால் ஆனது மனம். ஆசைகளைப் பிரித்து எடுத்து விட்டால் மனம் அழிந்து விடும். ஆசைகளை அடக்குவதற்குப் பெரும் போர் நடத்த வேண்டியதில்லை. அதற்காக அவற்றினிடத்தில் இச்சகம் பேசவேண்டியதுமில்லை. "அறிவு மயமான எனக்கும் அறியப்படும் ஜடப் பொருளான ஆசைகளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை" என்று கை கழுவி விடும்போது மனம் கழன்று கொள்ளும். திருடனைப்போல நழுவி விடும். நம் வீட்டில் யார் யார் வருகிறார்கள் போகிறார்கள் என்று கண்காணிப்பதுபோல, நம்முடைய கண் காது வழியாக வருவது எது, போவது எது என்று கண்காணிக்கவேண்டும். மனத்துக்கு வெளியே நின்றுகொண்டு அதன் வேலைகளைக் கண்காணியுங்கள்; அதோடு கலந்து விடாதீர்கள். மனம் மின்சாரம் போன்றது. அதைத் தொடாமல் அதோடு சேராமல் வேலைவாங்க வேண்டும். எத்தனைக்கெத்தனை மனத்தைவிட்டு விலகியிருக்கிறீர்களோ, அத்தனைக்கத்தனை நல்லது. மனத்தை வெற்றி கொண்டால் மற்றவை தாமே வழிக்கு வரும்.

முக்தி பெற வேண்டுமானால் மோகத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமானால், அறியாமை அழிய வேண்டுமானால், உறுதியான முயற்சிவேண்டும். கடையில் கறி காய் வாங்குவதுபோல் முக்தியைக் கணப் பொழுதில் பேரம் பேசிப் பணம் கொடுத்து வாங்கமுடியாது. போர்க் குதிரைகளைப் பழக்கினால்தான் போர்க்களத்தில் உதவும்.

பலவீனமானவர்கள் மயிலின் தோகைபோல் சிலிர்த்துக் கொண்டே இருப்பார்கள். கடியாரத்தின் உள் நாக்கைப் போல அசலாடிக்கொண்டே இருப்பார்கள்.

"கண்ணை மூடிக்கொண்டால் இருட்டாகத்தெரிகிறது" என்று சொல்கிறோம். இருட்டை எப்படிப் பார்க்கமுடியும்? இருட்டையும் பார்க்கும் ஒளி ஒன்று நம் பார்வையிலேயே

Koviloor Digital Library

இருக்கிறது என்பது இதிலிருந்து தெரிகிறது. "எனக்கு இது தெரியவில்லை" என்று சிலசமயம் சொல்லுகிறோம். தெரியவில்லை என்பது இங்கே தெரிகிறது. இதனை அறிவிக்கும் ஒளியே ஆத்மா. அதுவே நாம்.

நீங்கள் எத்தனை குருமார்களைத் தேடிப் பெற்றாலும் சரி. இந்த உடலோ, உள்ளமோ, உயிரோ 'நான்' இல்லை. தூய பேரறிவான மெய்ப்பொருள் நான் என்று உணராதவரையில் ஒரு பயனுமில்லை. ஓட்டையான பாத்திரத்தை வைத்துக் கொண்டு தண்ணீரை இறைக்க முயலுகிற கதையாகிவிடும். இப்படி உணருவது ஞானம்.

ஞானமில்லாத மனிதன் விளக்கில்லாத வீடு. ஞானம் என்பது எங்கும் நடுவில் மாறாமல், ஏறி இறங்காமல் நேராக நம் ஊருக்குக் கொண்டு சேர்க்கும் ரயில் வண்டியைப் போன்றது. இதில் ஏறியவன் ஞானி.

சிலசமயம், ஏறி இறங்கவேண்டியதில்லை என்றாலும், சில பெட்டிகளை (compartments) மட்டும் ஆங்காங்கு கழட்டி வேறு வேறு வண்டிகளில் இணைத்துவிடுவார்கள். இங்கு ரயில்கள் மாறும்; நாம் ஏறி இறங்க வேண்டியதில்லை. இதில் ஏறிக் கொண்டவன் அறிவு பெற விரும்புகிறவன். இவனை ஜிக்ஞாஸு என்கிறது கீதை.

பல ஜங்ஷன்களில் ஏறி இறங்கி ஆங்காங்கு பல வண்டி மாறி ஊர்ப் போய்ச் சேர்பவன் ஆர்த்தன் என்கிற பக்தன். ஏதேனும் சங்கடங்கள் வரும்போது மட்டும் இறைவனை வருந்தி அழைக்கும் வகையரு இவன்.

பல வண்டிகள் மாறுவது மட்டுமல்லாமல், கிடைத்த வண்டிகளில் ஏறிக்கொண்டு ஆங்காங்கு தங்கித் தங்கிப் பின் முடிவில் ஊர் போய்ச் சேர்பவன் அர்த்தார்த்தி. இவனும் பக்தன்தான். ஆனாலும் தன் காரியத்திலேயே குறி. அது வேண்டும் இது வேண்டும் என்று இறைவனை நச்சரிக்கும் கும்பலைச் சேர்ந்தவன்.

Koviloor Digital Library

"நான் யார்?" என்ற ஆராய்ச்சியே ஞானயோகம். இது முக்திக்கு ராஜபாட்டை. தன்னையறிதலே எல்லாவற்றிலும் சிறந்தது. பகவத் கீதையில் மணிமகுடத்தில் பொருத்திய மதிப்பிலா மாணிக்கமாகத் திகழ்கிறது ஞானயோகம்.

ஞானி இறைவனைத் தவிர வேறொன்றையும் மனத்திலும் கருதமாட்டான். பார்க்குமிடந்தோறும் நீக்கமற நிறைந்திருப்பவன் இறைவனே. இதனால்தான் "ஞானி எனக்குப் பிரியமானவன்" என்று கண்ணன் கூறுகின்றான். ஞானியினது பக்தி இயற்கையாகவே அமைந்தது. மற்றையது எல்லாம் ஏதோ ஒரு காரணத்துக்காக ஏற்பட்டது.

ஞான யோகத்தைப் பழகுபவன் தியானத்தையும் சேர்த்துப் பழகவேண்டும். இல்லாது போனால், ஒரு சாதகன் குறிப்பிட்ட நோக்கமில்லாத மரப்பொம்மைக்குச் சமமாகி விடுவான். தனிமையில் தியானத்தையும் ஞானத்தையும் பயிலவேண்டும். அப்பொழுதுதான் புலனடக்கம் வரும். புலனடக்கமில்லாதவன் வரண்ட ஆற்றைப் போன்றவன். சாதகனுடைய மனம் காற்றில்லாத இடத்தில் எரியும் விளக்கைப்போல அசையாமலிருக்க வேண்டும்.

ஞானம் ஸரஸ்வதி ஆறு என்றால், பக்தி கங்கை; உழைத்தல் யமுனை. இம் மூன்றும் கலந்தால் த்ரிவேணி. உள்ளமும் உழைப்பும் உணர்வும் கலந்து பழகவேண்டும்.

சாதாரணமாகப் பக்தி என்று குறிப்பிடப்படுவது இறைவன் பால் அன்பு என்பதைக் குறிக்கும். ஆனால், இறைவன் உங்கள் பால் செலுத்தும் அன்பின் அளவைத்தான் பக்தி என்பது குறிக்கும். அவனுக்குப் பிடித்ததைச் செய்வதே பக்தி. இன்னும் சொல்லப்போனால், நம் உள்ளத்தில் நிரம்பிய இறைவனுடன் இரண்டற ஒன்றிவிடுவதே பக்தியாகும்.

பக்தி வெளித் தோற்றத்தினால் அமைவதில்லை. அது உளமார வளர்ந்திருக்கவேண்டும்.

Koviloor Digital Library

ஸகுணபக்தி, நிர்க்குணபக்திக்குச் சாதனம். இறைவனையும் நம்மையும் பிரித்துக் காண்கிற பக்தி ஸகுணபக்தி. எல்லாமே இறைவனுகக் காண்கிற பக்தி நிர்க்குண பக்தி. இருப்பினும் இருசாராருமே அன்பு மயமானவர்கள்.

ஒரு பக்தன் தன்னுடைய உள்ளத்திலிருந்து வெறுப்பு, கோபம் முதலியவற்றைக் களைந்தால் மட்டும் போதாது. மலையும் மரமும் கூடத்தான் வெறுப்பு, கோபம் இவை இல்லாமலிருக்கின்றன. அதனுல் அவை பக்தர்களாகிவிடமாட்டா. மனத்தில் அன்பையும் வளர்க்கவேண்டும். வயலில் பயிர் செய்ய வேண்டுமானுல், களை பிடுங்கினுல் மட்டும் போதாது. உரம் போடவேண்டும்; உழ வேண்டும்; விதைக்க வேண்டும்; தண்ணீர் பாய்ச்சவேண்டும்.

தருமம் அல்லது அறமே செய்யத்தக்கது. எல்லாவற்றையும் இறைவனுக்குக் காணிக்கையாக்குவதே அறம். அறம் என்பது ஏதோ சில அசாதாரணமான ஆற்றல் படைத்தவர்களுக்கு மட்டுமன்று. எல்லோரும் அதை நடத்திக் காட்டலாம்.

உலகில் ஒவ்வொரு பொருளுக்கும் அதற்கென்று ஒரு தருமம் உண்டு; நெருப்பு சுடுவதும், தண்ணீர் குளிர்ச்சியாக இருப்பதும் அதனதன் தருமம். மனிதனுக்கும் ஒரு தருமம் உண்டு. உண்மையைப் பேச வேண்டும். நல்லதைச் செய்ய வேண்டும். இப்பொழுது எல்லோரும் தருமத்தைப் பற்றிப் பேசுகிருர்கள். அதை நடத்திக் காட்டவேண்டும். முதலைக்குத் தண்ணீரிலிருந்தால்தான் பலம்.

அதருமத்திற்கு முயற்சி தேவையில்லை. தருமத்திற்குத் தான் தேவை. காட்டுச்செடி வளர வேளாண்மை செய்ய வேண்டாம். வேதம், கீதை முதலிய மெய்ந்நூல்களில் சொல்லியிருப்பதே தருமம்.

தருமம் செய்யும்போது பலனில் கருத்தை ஊன்ருமல், அதை இறைவனது முடிவுக்கு விட்டு விட்டு, கைம்மாறு

Koviloor Digital Library

கருதாத கடமையாகச் செய்வது கர்மயோகம், நிஷ்காம கர்மம்.

ஒவ்வொரு மனிதனும் தனக்கேற்பட்ட பணியினைச்செய்ய வேண்டும். இந்த உலகம் ஒரு தொழிற்சாலை போன்றது. அதில் நாம் எல்லோரும் தொழிலாளிகள். இதில் அவரவர்க்குரிய பணியைச் செய்யாமல் பின்வாங்கக் கூடாது; சோம்பியிருக்கவும் கூடாது. அதற்கு உரிமையும் கிடையாது. சூரியன் தன்னுடைய தொழிலைச் செய்யாமல் தூங்கினால் என்ன ஆகும்? இறைவனே தொழில் செய்கிறான். அதனால் அவனுக்கு ஆகவேண்டியது ஒன்றும் இல்லாவிட்டாலும் அவன் அதைத் தொடர்ந்து செய்கிறான். ஞானிகளும் பிறரது நன்மைக்காக வேலை செய்கிறார்கள்.

நமது இயல்புக்கு ஒத்துவரக்கூடிய தொழிலே சிறந்தது. நமக்கு ஒத்துவராத, நமது ஆற்றலுக்கு அதிகமான வேலைகளைத் தலைமேல் போட்டுக் கொண்டால், தீராத தொல்லைகளும் கவலைகளும்தான் பெருகும். இயற்கையை ஒட்டி வாழ வேண்டும்.

உடல் உயிருக்குச் சொந்தம்; உலகம் இறைவனுக்குச் சொந்தம். உடலுறுப்புக்களில் "இது உயர்ந்தது; இது தாழ்ந்தது" என்று உயிர் பாரபட்சம் காட்டுவதில்லை; தாரதம்மியம் பாராட்டுவதில்லை. இதுபோல, உலகத்தில் உள்ள உயிர்களெல்லாம் இறைவனது குடியரசில் சமஅந்தஸ்து உடையவை.

உடலெங்கும் ஒரே ரத்தம்தான் ஓடுகிறது. அது எல்லா உறுப்புக்களுக்கும் வேற்றுமையின்றிப் பாய்ந்து உயிரூட்டுகின்றது. சமுதாய ஊழியரும் இப்படித்தான் சமுதாயம் என்ற உடலுக்கு உயிர் ஊட்டுகிறார்கள். இதில் எந்த உயர்வு தாழ்வும் கற்பிக்க முடியாது; கூடாது.

சர்க்கரைப் பொம்மையின் எந்த இடத்தைப் பிட்டுச் சுவைத்தாலும் அது இனிமையாக இருக்கும். அதுபோல,

Koviloor Digital Library

சமுதாயத்தில் பல தொழில் செய்பவரும் சமமான தகுதி யுடையவர்கள்தான். தொழில்களில் உயர்வு தாழ்ச்சி சொலல் பாவம். வயிற்றின்மேல் கோபித்துக் கொண்டு மூளை வேலை நிறுத்தம் செய்தால் என்ன ஆகும்? சமுதாயத்தில் பலதொழில் செய்பவரும் ஒற்றுமையாக இயைந்து வாழவேண்டும்.

எவ்வளவு கொடுக்கிறீர்கள் என்பது முக்கியமன்று; எப்படிக் கொடுக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம். குசேலரும் திரௌபதியும் விதுரரும் கொடுத்தது கொஞ்சம் அவல் அல்லது கீரை அல்லது எளிய பத்திய உணவு. ஆனால், அவர்கள் பெற்றது மலையத்தனை அருள்!

டாக்டர் பொய் சொன்னாலும் தர்மா மீட்டர் சரியான அள வைக்காட்டி விடும். இதுபோல, இறைவன் உங்கள் இதய ஆழத்தை அளக்கிறான். வெளிப்பூச்சை மதிப்பதில்லை.. கோபி களும், ஜனகனும், நந்தனாரும், சபரியும், விபீஷணனும், அனுமானும், வால்மீகியும் இதற்கு உதாரணங்கள்.

சரணாகதி மூன்று வகைப்படும்:—1. தவைவாஹம் (நான் உன்னுடையவன்) 2. மமைவத்வம் (நீ என்னுடையவன்) 3. த்வமேவாஹம் (நான் நீயே). இந்த மூன்றாவதுதான் அத்வைத சரணாகதி.

நாக்கில் தடவப்பட்ட எண்ணெய்போல, கண்ணில் இடப் பட்ட மைபோல, தாமரை இலை மேல் நீர்த்துளிபோல, நாம் செய்யும் செயல்கள் நம்மைப் பற்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்!

ஞானி ஏதாவது செய்து கொண்டிருப்பதுபோல் தோன்றி னாலும் உண்மையில் உள்ளிருந்த அமைதியோடு இருக்கிறான். ஞானிக்குச் செயல் கிடையாது, சும்மா இருக்கிறான் என்ப தற்கு இதுதான் பொருள்.

ஒன்றும் செய்யாமலிருந்துகொண்டே எல்லாம் செய் வதும், எல்லாம் செய்து கொண்டே ஒன்றும் செய்யாமலிருப் பதும்தான் இங்கு ரகசியம். தேரில் செல்பவனுக்குச்

கோவிலூர் ஆதீனம்

Koviloor Digital Library

சாலையின் இருமருங்கிலும் இருக்கும் மரங்களும் மலைகளும் எதிர்த் திக்கில் ஓடுவதுபோல் தெரியும். அதுபோல, செய லின்மை செயல் போலவும், செயல் செயலின்மைபோலவும் மாறித் தோன்றும்.

வினைகளைக் காட்டிலும் "நான் செய்கிறேன்" என்ற எண்ணம் தான் நம்மைக் கட்டிப் போடுகிறது. சூன்னத் திற்குத் தனியாக எந்த மதிப்பும் கிடையாது. ஆனால் ஏதேனும் ஓர் எண்ணுடன் அது சேரும்பொழுது அதற்கு மதிப்பு வந்து விடுகிறது. அதுபோல, நம் செயல்கள் "நான்" என்னும் எண்ணத்துடன் சேரும்பொழுது பிறவிப் பிணி வந்து ஒட்டிக்கொள்கிறது.

நாம் பிறந்திருப்பது மறுபடி பிறக்காமலிக்க என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்து முடித்துக் கொள்வதற் காகத்தான். இறப்பதும் மறுபடி வந்து பிறந்து இறக்காம லிருக்கத்தான். நல்ல பிறவியைவிட, நல்ல மரணத்தைத் தான் நாம் விரும்பவேண்டும்.

7

பகவானின் குட்டிக் கதைகள்

ஆழங் காண முடியாமல் நீலவான விதானத்தில் ஆங்காங்கு எட்டிப் பார்த்துக் கண் சிமிட்டும் நட்சத்திரங் களைப்போல, பகவானுடைய பேச்சுக்களின் நடு நடுவே தெறிக்கும் குட்டிச் சிறுகதைகளுக்குக் கணக்கு வழக்கேயில்லை. அரிய விஷயங்களைச் சொல்லிக் கொண்டே வரும்போது, சற்று நிறுத்தி "ஒக சின்ன கதா" என்பார் பகவான். உடனே அத்தனை பக்தர் உள்ளங்களும் குதூகலிக்கும்; கதையின் சுவையைப் பூராவும் நுகர்ந்து திளைக்கத் தயாராகி

Koviloor Digital Library

விடும். அதுவரையில் அவர் பேசியது ஒரு சிறிது ஒரு சிலருக்குப் புரிந்து கொள்வது கடினமாயிருந்தாலும், "சின்ன கதா" அதைப் புரியவைத்துவிடும் என்று எல்லோருக்கும் தெரியும். காதைத் தீட்டிக்கொண்டு கேட்பார்கள். அத்தனை பேரையும் ஒரு நொடியில் பாப்பாக்களாக மாற்றி, தான் ஒரு கதை சொல்லும் தாத்தாவாகி விடுவார் இந்தப் பாபா.

முறுக்கேறிய நாடி நரம்புகளெல்லாம் இளகி நிதானத்திற்கு வரும். ரத்த அழுத்தம் இறங்கிச் சீரடையும். அகமும் முகமும் ஆனந்தத்தில் மலர்ந்து வேதனைச் சுருக்கங்களும் கவலைக் கோடுகளும் மறைந்து தோற்றத்தில் ஒரு பொலிவு வரும். புரியாத பல உண்மைகள் புரியும். சிரித்துச் சிந்தித்துச் செயல்படும் திறன்வரும். பொதுவாக உலகம் உல்லாச புரியாகும். பாபாசொல்லும் "சின்ன கதா"வின் சீர்மை இது!

8

கதை 1

இதய விளக்கு

ஒரு சமயம், மெய்யறிவு பெறவேண்டும் என்று ஆசைப்பட்டு ஒரு மாணவன் குருவைத் தேடிச் சென்றான். அவர் தவம் செய்துகொண்டிருந்த மலைக்குகைக்குச் சென்றான். குகைக்குள் ஒரு சிறு அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இவன் நுழைந்த வேகத்தில், விளக்கு அணைந்துவிட்டது. அந்தப் பீதியில் "நமசிவாய" என்ற மந்திரத்தை உரக்க உச்சரித்தான் மாணவன். "யார் அங்கே?" என்றார் குரு. "அறிவை நாடி வந்திருக்கிறேன். தயை செய்யவேண்டும்!" என்றான் மாணவன். "சரி, அந்த விளக்கை முதலில் ஏற்று!" என்றார் குரு.

Koviloor Digital Library

தீக்குச்சியை எடுத்து விளக்கை ஏற்ற முயன்றான் மாணவன். முடியவில்லை. "விளக்கில் எண்ணெய் இருக்கிறதா பார்!" என்றார் குரு. எண்ணெய் இல்லாதது மட்டுமில்லை; தண்ணீர் கொஞ்சம் இருந்தது. "நீரை நீக்கிவிட்டு, எண்ணெயை ஊற்றி விளக்கை ஏற்று!" என்றார் மறுபடியும். இருந்தும், மாணவனால் விளக்கை ஏற்ற முடியவில்லை. "ஒரு வேளை திரி ஈரமாயிருக்கலாம். வேறு திரி போட்டு ஏற்று!" என்றார். இப்பொழுது மாணவனால் விளக்கை ஏற்ற முடிந்தது.

"இப்பொழுதாவது எனக்கு உபதேசம் செய்யவேணும்" என்றான் மாணவன். "உபதேசமா? இதுவரையில் உனக்கு உபதேசம்தானே செய்துகொண்டிருந்தேன்" என்றார் குரு. மாணவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அப்பொழுது குரு சொன்னார்:

"இதயம் என்னும் அகல்விளக்கில் உன் உயிர்த் திரி இருக்கிறது. உலகத்து ஆசைகள் என்னும் நீரினால் அந்தத் திரி இதுவரை நனைந்து போயிருந்தது. அதனால் அதில் அறிவு என்னும் தீ பற்றவில்லை. அந்த நீரையெல்லாம் நீக்கி, உயிர்த் திரியை வைராக்கியத்தில் உலர்த்து. பின் விளக்கில் ஆண்டவன் நாமஸ்மரணம் என்னும் எண்ணெயை நிரப்பி திரியை அதில் நனை. இப்பொழுது குருவிடம் உபதேசம் என்னும் தீக்குச்சியை வாங்கி விளக்கை ஏற்று! போ!"

9

கதை 2

கண்ணனும் கண்ணாடியும்

ஒரு சமயம் ஒரு புகழ் வாய்ந்த ஓவியன் துவாரகையில் கண்ணனிடத்தில் வந்தான். "சுவாமி! தங்கள் திருவுரு

Koviloor Digital Library

வத்தை நான் வரையப் போகிறேன்'' என்றான். கண்ணனும் சரி என்றான். ''இன்னும் ஒரு வாரத்தில் இந்தப் படம் பூர்த்தியாகி உங்கள் கையில் கிடைத்துவிடும்!'' என்று சொல்லிவிட்டுப் போனான் ஓவியன்.

சரியாக ஒரு வாரம் கழித்து சொன்னபடியே ஓவியன் படத்தை எடுத்துக் கொண்டு வந்தான். எல்லாரும் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்க, கண்ணனிடம் அந்தப் படத்தைக் காண்பிக்கும் பொருட்டு, அதன் மேல் மூடியிருந்த துணியை அகற்றினான். அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஏனென்றால், அது கண்ணனது உருவம்போலவே இல்லை.

மறுபடி மறுபடி வரைந்தான் ஓவியன். மறுபடி மறுபடி இப்படியே நடந்தது. ஓவியன் பயந்துபோய் ஊரைவிட்டே ஓடிப் போனான்.

வழியில் நாரதரைப் பார்த்தான். அவரிடம் விஷயத்தைச் சொன்னதும் அவர் சொன்னார்: ''அசடே! ஸ்வாமிக்குத் தனியொரு உருவம் கிடையாது. எல்லா வடிவங்களும்அவன் வடிவங்களே. இங்கே வா. உனக்குக் காதோடு ஒரு ரகசியம் சொல்கிறேன். அதன்படி செய். எல்லாம் சரியாகப்போகும். உனக்கு வெற்றிதான்!'' என்று நாரதர் ஓவியன் காதில்ஏதோ சொன்னார்.

ஓவியன் முகம் மலர்ந்தது. உடனே கண்ணனிடம் ஓடினான். இந்த முறை அவன் எதையோ துணியினால் மூடி மறைத்துக் கொண்டு வந்திருந்தான். கண்ணனைப் பார்த்து, ''ஸ்வாமீ! நீங்கள் இந்தத் தடவை எப்படி உருமாறினாலும், படம் உங்களைப் போலவே இருக்கும் பாருங்கள்!'' என்று சொல்லித் தன்னிடம் இருந்த பொருளைத் திறந்து காட்டினான். அது ஒரு நிலைக்கண்ணாடி. அதில் கண்ணன் முகம்அப்படியே தெரிந்தது!

உங்கள் மனத்தையும் கண்ணாடியைப் போல் சுத்தமாக வைத்திருங்கள். அன்பினாலும் பக்தியினாலும் அதை

Koviloor Digital Library

எப்பொழுதும் துப்புரவாக வைத்திருங்கள். அதில் இறைவனின் வடிவம் அப்படியே தெரியும்.

10

கதை 3

கண்ணுக்குத் தெரியாத பழங்கள்

அன்று சனிக்கிழமை. தகப்பனுர் பூஜை செய்து நிவேதனம் செய்வதற்கு வாழைப்பழம் தேவைப்பட்டது. பையனைக் கூப்பிட்டுக் கையில் ஒரு ரூபாயைக் கொடுத்து வாங்கிவரச் சொன்னுர். பையன் அப்படியே கடைக்குப் போய் வாங்கிக்கொண்டு திரும்பிவரும் வழியில் ஒரு பெண்ணும் அவளுடைய மகனும் பசியால் வாடுவதைக் கண்டான். இளைத்து எலும்பும் தோலுமாக பாதி உயிராக அவர்கள் இருப்பதைப் பார்த்தவுடன் இரக்கம் மேலிட்டுத் தன் கையிலிருந்த வாழைப்பழங்களையெல்லாம் அவர்களுக்குக் கொடுத்து விட்டான். அதோடு நில்லாமல், அவர்கள் குடிப்பதற்குத் தண்ணீரும் கொண்டு வந்து கொடுத்தான். அந்த எளிய உள்ளங்கள் இவனை வாழ்த்தின.

வீட்டுக்குப் போனதும் "பழங்கள் எங்கே?" என்று தகப்பனுர் கேட்டார். பையன் சொன்னுன்: "அப்பா! நான் வாங்கி வந்திருக்கும் பழங்கள் புனிதமானவை; என்றும் கெடாதவை; அவற்றைக் கண்ணுல் காணமுடியாது!" என்று சொல்லி, வழியில் இரண்டு ஏழைகளுக்குப்பசிதீர அவற்றைக் கொடுத்ததையும் கூறினுன்.

தகப்பனுர் மிகுந்த மகிழ்ச்சியுடன் "குழந்தாய்! நீயே எனது தவப்புதல்வன்! என்னுடைய பூஜைகளெல்லாம் வீண்

Koviloor Digital Library

போகவில்லை!" என்று வாரி அணைத்து உச்சி மோந்து மகிழ்ந்தார்.

11

கதை 4

இரட்டிப்புக் கூலி

தன்னுடைய கைக்கடியாரத்தைச் சரி செய்வதற்காக கடியார ரிப்பேர்க்காரனிடம் கொடுத்தான் ஒருவன். ரிப்பேர்க் காரன் அதைப் பார்த்து விட்டு, "கடியாரம் ரொம்பப் பழசு. இதைச் சரி செய்யக்கூலி அதிகமாக ஆகும்" என்றான். கடியா ரத்தின் விலையைவிட இரண்டு மடங்கு செலவாகிவிடும் என்றும் சொன்னான். சொந்தக்காரன், "பரவாயில்லை. ஆனால் ஆகட்டும். சரிசெய்து கொடு" என்று உறுதியாகச் சொன்னான்.

ரிப்பேர்க்காரனுக்குச் சந்தேகம் வந்தது. இந்தப் பழைய ஓட்டைக் கடியாரத்தை இவன் ஏன் இத்தனை செலவில் ரிப்பேர் செய்து வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறான்! இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. இந்தக் கடியாரம் அதிர்ஷ்டப் பொருளாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டே கெட்டுப்போன பகுதிகளையெல்லாம் எடுத்து எறிந்துவிட்டு, புதிய பகுதிகளைப் பொருத்திச் சரிசெய்து சொந்தக்காரனிடம் கொடுத்துவிட்டுக் கூலி கேட்டான்.

அடுத்தகணம் அவன் கன்னத்தில் இரண்டு அறை விழுந்தது. சுற்றி நின்றவர்கள் இந்த ஆசாமியைப் பிடித்துப் போலீஸில் ஒப்படைத்தார்கள். ஏன் அடித்தாய் என்று போலீஸார் கேட்டதற்கு அந்த ஆசாமி சொன்னான்:

Koviloor Digital Library

‘‘கடியாரம் வாங்கிய விலையைப்போல் - இரண்டு மடங்கு கூலி அந்தக் கடைக்காரன் கேட்டான். ஒருத்தன் கன்னத்தில் ஓர் அறை அறைந்து நான் அந்தக் கடியாரத்தை எடுத்தேன் அதுதான் நான் வாங்கிய விலை. அதற்கு இரண்டு மடங்கு என்றால் இரண்டு அறைதானே? அதைத்தான் கொடுத்தேன். இதில் என்ன தப்பு?’’

12

கதை 5

சப்பை மூக்கு

ஒரு பெரிய பணக்காரன். அவனுக்கு ஒரு மகள். அவளுக்கு மூக்கு கொஞ்சம் சப்பையாக இருந்தது. பெண்ணுக்குக் கல்யாணம் செய்யவேண்டும் என்று தகப்பன் விரும்பினான். பெண் பார்க்க வந்த பையன்களுக்கெல்லாம், இவனுடைய சொத்தின்மேல் ஆசையிருந்தது; ஆனால் பெண்ணுடைய சப்பை மூக்கு இந்த ஆசையைத் தவிடு பொடியாக்கியது.

எப்படியோ கடைசியில் ஒரு மாப்பிள்ளை கிடைத்தான். திருமணம் நடந்தது.

கணவனும் மனைவியும் மிகுந்த தெய்வ பக்தி உடையவர்களாகி விட்டார்கள். கோயில் குளங்களுக்குப் போனார்கள்; தலயாத்திரை சென்றார்கள். புண்ணிய நதிகளில் குளித்தார்கள். எம்பெருமான்..

Koviloor Digital Library

இப்படி இருக்கையில் ஒரு நாள் ஒரு சாதுவைக் கண்டார்கள். மூக்கைச் சப்பையாகப் படைத்தவன்தான் அதைச் சரி செய்ய முடியும் என்று அவர் சொன்னார். இவர்கள் முன்னைவிட இன்னும் அதிகமாகப் பக்தி செய்யத் தொடங்குனார்கள்.

இமாலயத்திற்குப் போய் அங்கு தனிமையில் ஒரு மாதம் இருப்போம் என்றாள் மனைவி. அப்படியே போனார்கள். விரதமும் நோன்புமாக இருக்கலானார்கள். ஆண்டவனுக்கு அன்பு சுரந்தது. இவர்கள் முன் வந்து தோன்றினான். அவனுக்கு எல்லாம் தெரிந்திருந்தாலும், முறைப்படி, "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான். மனைவி உடனே, "ஐயனே! எனக்கு அழகான பெரிய மூக்கு வேண்டும்!" என்றாள். "அப்படியே!" என்று சொல்லி இறைவன் மறைந்தான்.

ஆவலோடு மனைவி ஒரு கண்ணாடியை எடுத்து அதில் தன் முகத்தைப் பார்த்தாள். அப்பொழுதுதான் அவளுக்கு முன்னிருந்த முகமே தேவலை என்று தோன்றியது. அழகான உயர்ந்த மூக்கு அவளது முகத்திற்குப் பொருந்தவில்லை. கோரமாக்கி விட்டது.

மறுபடியும் விரதமும் நோன்பும் முன்னிலும் கடுமையாகக் கடைப்பிடித்தார்கள். கடவுளும் வந்தார். "என்னை எதற்கு மறுபடியும் அழைத்தீர்கள்?" என்று கேட்டார். மனைவி தனது மூக்கைக் காண்பித்து "ஸ்வாமி! எனக்கு இது வேண்டாம்" என்றாள். "அப்படியே!" என்றான் இறைவன். அவ்வளவுதான். மூக்கு மறைந்து விட்டது. இருந்த மூக்கும் போய்விட்டது!

கடவுள் கண் முன் வந்து நின்று என்ன வேண்டும். என்று கேட்டாலும், நமக்கு ஒன்றும் சரியாகக் கேட்கத் தெரியாது.

Koviloor Digital Library

13

கதை 6

தன்னம்பிக்கை

திரளான மக்கள் பழங்களையும் பூக்களையும் வாங்கிக் கொண்டு அந்தச் சுவாமியாரைக் காண வந்திருந்தார்கள். சுவாமியார் தமது சீடனைக் கூப்பிட்டு, அந்தப் பழங்களை எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுக்கும்படி சொன்னார். ''யாருக்கு முதலில் கொடுக்கட்டும்?'' என்று கேட்டான் சீடன். ''யாரிடத்தில் உனக்கு அதிக நம்பிக்கையும் மதிப்பும் இருக்கிறதோ அவருக்குக் கொடு!'' என்றார் சுவாமியார். ''சரி!'' என்ற சீடன் முதல் பழத்தைத் தானே தின்று விட்டான். கேட்டதற்கு, ''எனக்கு என்னிடத்தில் தான் நம்பிக்கையும் மதிப்பும்'' என்று சொல்லி விட்டான். யார் முகத்திலும் ஈயாடவில்லை, சுவாமியார் உள்பட.

14

கதை 7

பணம் படுத்தும் பாடு

தகப்பனார் இறந்து விட்டார். தாய்தான் ஒரே மகனை அவனைக் கண்மணியாக வளர்த்தாள். நிரம்பச் சொத்து இருந்தது. வயது வந்து வாலிபனானான். கெட்டபழக்கங்களும் வந்து சேர்ந்தன. கெட்ட நண்பர்களும் வந்து ஒட்டிக் கொண்டார்கள். பணம்மட்டும் கரைந்து கொண்டுவந்தது.

Koviloor Digital Library

தினந்தோறும் தாயிடம் பணத்திற்காகத் தொந்தரவு செய்வான்; பிடுங்கி எடுப்பான். தாயின் மனம் வெறுத்துப் போயிற்று. நாளடைவில் மகனுக்கும் தாயிடம் பற்று விட்டுப் போயிற்று.

குடும்பப்பெயரைக் கெடுக்கும் இப்படிப்பட்ட மகன் இருப்பதைவிட இறப்பதே மேல் என்று தாய் ஒரு திட்டம் போட்டாள். நினைத்த போது பணம் தராத தாய் இருந்தென்ன செத்தென்ன என்று மகனும் அவளை ஒழித்துக்கட்ட வழி தேடினன்.

தனக்கு அவள் சாப்பாடு போடும்போது, குனிந்து பரிமாறுவாள் அல்லவா? அப்பொழுது ஒரு இரும்புத் தடியால் தலையில் ஒரே போடாகப் போட்டுக் கொன்று விடுவது என்பது அவன் திட்டம். நாளையும் நிச்சயித்து விட்டான்.

அதே நாளில், மகனுடைய சாப்பாட்டில் விஷத்தைக் கலந்து விடுவது என்பது தாயாரின் திட்டம். அந்த நாளும் வந்தது.

தாய் உணவு பரிமாறக் குனிந்தாள். அவ்வளவுதான். மடேரென்று தடியால் அடித்து அவளைக் கொன்று விட்டான் மகன். பின் சோற்றை விடுவானேன் என்று ஒரு கவளம் தின்றான். சுருண்டு கீழே விழுந்து செத்துப்போனன். பணத்தாசை!

15

கதை 8

மூன்று கேள்விகள்

தன்னிடம் வந்தவர்களிடத்திலெல்லாம் அந்த அரசன் மூன்று கேள்விகளைக் கேட்பான். ‘‘மனிதரில் சிறந்தவர்

Koviloor Digital Library

யார்? காலத்திற் சிறந்தது எது? செய்கையிற் சிறந்தது எது?'' இவைதான் கேள்விகள். இவற்றிற்கு விடை தெரிந்து கொள்ள அரசனுக்கு வெகு ஆவல்.

ஒரு நாள், இவன் வேட்டைக்காக காட்டுக்குப் போனான். அலைச்சலினால் களைப்படைந்து அவன் போய்க் கொண்டிருந்தபோது, அங்கு ஓர் ஆசிரமத்தைக் கண்டான். அதில் வசித்த ஒரு முனிவர் ஆசிரமத்துப் பூச் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார். அரசன் வருவது தெரிந்து, கால் அலம்ப நீரும் உண்ணப் பழங்களும் அளித்து உபசரித்தார். அதே நேரம், உடலெல்லாம் காயம்பட்டு இரத்தக் கிளரியாக ஒரு மனிதனைத் தூக்கிக்கொண்டுவந்து முனிவரின் முன்னால் கிடத்தினார்கள். முனிவரும் ஆதரவுடனும் அன்புடனும் மூலிகைகள் வைத்துக் கட்டி மருத்துவம் செய்தார். கனிவான இன் சொல் கூறி அம் மனிதனுக்கு தைரியம் சொன்னார்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, அரசன் எழுந்து முனிவரிடம் விடை பெற்றுச் செல்ல விரும்பினான். ஆயினும் அவனுடைய மூன்று கேள்விகளுக்கு இந்த முனிவர் என்ன விடை தருவார் என்று அறிய ஆவல் மிகுந்தது. அதை முனிவரிடம் தெரிவித்தான். அவர் சொன்னார்: ''அரசே! நீ வரும்பொழுது செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தேன். அது என்னுடைய கடமை. உன்னைக் கண்டதும் உன் களைப்பையும் தாகத்தையும் நீக்க ஓடிவந்தேன். நீ என்னுடைய விருந்தினன். உன்னைக் கவனிக்கவேண்டியதும் என்னுடைய கடமை. அப்பொழுது, காயம்பட்ட இந்த மனிதன் வந்தான். உடனே அவனுக்கு மருத்துவம் செய்தேன். நோய் தீர்ப்பதும் எனது கடமை. உன்னிடம் உன் தொண்டினைக் கேட்டு யார் வருகிறார்களோ அவர்களே சிறந்த மனிதர்கள் அவர்களை மகிழ்விக்கும் முறையில் நீ செய்யும் தொண்டே சிறந்த செய்கையாகும், தொண்டு செய்யும் இந்தக் கணமே சிறந்த நேரம்!''

Koviloor Digital Library

16

கதை 9

கஞ்சாவும் சாக்கட்டியும்

கஞ்சா என்னும் போதைப் பொருளுக்கு அடிமையாகி விட்டான் ஒரு மனிதன். இதிலிருந்து விடுபடவேண்டும் என்று ஆனமட்டும் முயன்றும், அவனால் முடியவில்லை. நாளுக்கு நாள் இந்தப் பழக்கம் அதிகமாகிக்கொண்டு வந்தது. உடலில் நோயும் கண்டது. ஒரு நாள் அவன் ஊருக்கு ஒரு பெரியவர் வந்தார். அவரிடம் போய் வணங்கித் தன் நிலையைச் சொன்னான் கஞ்சாப் பேர்வழி. "விடவேண்டும் என்று மனமார விரும்புகிறேன். ஆனாலும் முடியவில்லையே, ஸ்வாமீ!" என்று காலைப்பிடித்துக் கொண்டு கதறினான்.

"தினமும் எவ்வளவு கஞ்சா சாப்பிடுகிறாய்?"என்று அவர் கேட்டார். "இவ்வளவு சாப்பிடுகிறேன்" என்று கையால் காண்பித்தான். உடனே அந்தப் பெரியவர் ஒரு சாக்கட்டித் துண்டை எடுத்து அவன் சாப்பிடுகிற அளவாக அதை உடைத்து, அவன் கையில் கொடுத்தார். "நீ கஞ்சா சாப் பிடுவதை விடவேண்டியதில்லை. ஆனால் ஒவ்வொரு நாளும் இந்தச் சாக்கட்டியின் அளவுதான் சாப்பிடவேண்டும். அப்பொழுது உன் நோயும் குணமாகிவிடும்" என்றார்.

கஞ்சா ஆசாமிக்கு ஒரே மகிழ்ச்சி. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள். கஞ்சாவையும் நிறுத்த வேண்டாம்; நோயும் குணமாகி விடும். ஆகா! இவரல்லவோ பெரியவர் என்று எண்ணி மகிழ்ந்து போனான். அந்தச் சமயம் பார்த்துப் பெரியவர் "ஆனால்..." என்று நிறுத்தினார். பிறகு "ஒன்று மில்லை. ஒவ்வொரு நாளும் நீ கஞ்சா உருண்டையைச் சாப் பிடுவதற்கு முன்பு, இந்தச் சாக்கட்டியினால் கரும்பலகையில்

Koviloor Digital Library

"ஓம்" என்று மூன்று தடவை எழுதிவிட்டுச் சாப்பிட வேண்டும் தெரிகிறதா?" என்ருர்.

"என்னவோ ஏதோ என்று பயந்து போய்விட்டோம். இது என்ன பிரமாதம்?" என்று எண்ணிக் கொண்டான் அந்த ஆசாமி.

அன்றைய தினமே இதைச் செய்யத் தொடங்கினுன். இப்படியே ஒவ்வொரு நாளும் தொடர்ந்து செய்து வந்தான். சாக்கட்டியும் தேய்ந்துகொண்டே வந்தது. இது அவனுக்குத் தெரியவில்லை. தினம் அந்தச் சாக்கட்டி எவ்வளவு இருக்கிறதோ அந்த அளவு தானே சாப்பிடவேண்டும்? சாக்கட்டி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வந்ததால், கஞ்சாவின் அளவும் குறைந்து கொண்டே வந்தது. ஒரு நாள் சாக்கட்டி தீர்ந்து போய்விட்டது. அன்றைக்கு அவன் சாப்பிடவில்லை. அதற்கு பிறகும் சாப்பிடவில்லை. அதற்கு அவன் ஆசைப்படவும் இல்லை. தனக்குத் தெரியாமலே கஞ்சாப் பழக்கம் போய்விட்டது. "ஓம்" எழுதும் பழக்கம் பிடித்துக் கொண்டது. நோயும் தீர்ந்துவிட்டது. உடலும் உள்ளமும் சரியாகப்போய் விட்டன.

17

கதை 10

கண்ணனின் தலைவலி

ஒருசமயம், கண்ணன் தனக்குத் தலைவலி என்று படுத்து விட்டான். தலைவலியாவது ஒன்ருவது! எல்லாம் கபட நாடகம். ருக்மிணியும் சத்தியபாமையும் வந்து என்னென்னவோ செய்தார்கள். பலனில்லை. நாரதருக்குச் சொல்லி அனுப்பினுர்கள். அவரிடம் கண்ணன் "என்னுடைய

Koviloor Digital Library

பக்தனின் கால் தூசியைக்கொண்டு வாருங்கள். அதுதான் மருந்து!" என்று சொல்லி விட்டான்.

நாரதர் சிட்டாய்ப் பறந்தார். எல்லாப் பக்தர்களிடமும் போய்க் கெஞ்சினுர். யாரும் கொடுக்கவில்லை. "எங்களுடைய கால்தூசியை பகவானுக்கு மருந்தாகத் தருவதா? அபசாரம்!" என்று விலகி ஓடிவிட்டார்கள். யாரும் பகவானுடைய தலை வலியைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை! தங்களது சிறுமையையும் பக்தியையுமே பற்றிக் கவலைப் பட்டுக் காப்பாற்றிக் கொண்டார்கள்! தன் தகுதியைத் தானே குறைத்து மதிப்பிடுவதும்கூட ஒருவகை ஆணவம்தான் என்பதை இவர்கள் அறியவில்லை.

நாரதர் மறுபடி கண்ணனிடமே ஓடி வந்தார். "யாரும் தரமாட்டேன் என்கிருர்களே? அபசாரம், பாவம் என்கிருர்களே?" என்ருர் அலறினுர். "நாரதா! பிருந்தாவனத்துக் கோபிகளைக் கேட்டாயா?" என்ருன் கண்ணன். உடனே ஓடினுர் நாரதர் பிருந்தாவனத்துக்கு.

சேதி காதில் விழுந்ததும், ஒரு கணம் கூடத் தாமதியாமல், ஒவ்வொரு கோபியும் தனது கால் தூசியை அள்ளி அள்ளி மூட்டைகட்டிக் கொடுத்தாள். தூக்கிக்கொண்டு ஓடினுர் நாரதர் துவாரகைக்கு.

அங்கு கண்ணன் சர்வ சாதாரணமாக நாரதரை வரவேற்ருன். தலைவலியும் இல்லை, ஒன்றும் இல்லை. நாரதர் புரிந்துகொண்டு கண்ணன் காலில் விழுந்தார்.

18

கதை 11

கரடியும் மாயையும்

அது ஒரு காட்டாறு. அதன் கரையில் சிறுவர்கள் மாடு மேய்த்துக்கொண்டிருந்தார்கள். அது மாரிக்காலம். திடீரென்று

Koviloor Digital Library

அந்தக் காட்டாற்றில் வெள்ளம் பெருகிவிட்டது. அந்த வெள்ளத்தில் ஒரு கரடி விழுந்து விட்டது. அதை வெள்ளம் அடித்துக் கொண்டு வந்தது. இதை ஒரு சிறுவன் பார்த்தான். தூரத்திலிருந்து பார்க்கும்பொழுது அது அவன் கண்ணுக்கு ஒரு பெரிய கம்பளி மூட்டையைப்போல் தோன்றியது. உடனே அவன் தண்ணீரில் குதித்து அதை நோக்கி நீந்திப் போனான். கிட்ட நெருங்கி அதைத் தொட்டதுதான் தாமதம்; கரடி அவனைப் பிடித்துக் கொண்டது. எவ்வளவோ திமிறியும் பையனால் அந்தப் பிடியிலிருந்து விடுபட முடியவில்லை.

கரையிலிருந்த மற்றச் சிறுவர்கள் ''மூட்டையை விட்டு விடு! திரும்பி வா!'' என்று கத்தினார்கள். அவர்களும் அதைக் கம்பளி மூட்டை என்றே நினைத்தார்கள். மீண்டும் மீண்டும் கையை ஆட்டிக் கத்தினார்கள். ''ஐயோ! நான் விட்டாலும் அது என்னை விடமாட்டேன் என்கிறதே!'' என்று அலறினான் அந்தச் சிறுவன்.

இப்படித்தான் உலகம் என்ற மாயை பிடித்துக்கொண்டு நம்மை விடமாட்டேன் என்கிறது. குற்றம் யார் மேல்? நாம் போய் அதை ''அழகாயிருக்கிறது'' என்று தழுவிக் கொண்டால் அது நம்மை இறுகப் பிடித்துக் கொள்கிறது.

19

கதை 12

தானீஷா பாரதம்

டெல்லி தானீஷா தனது அரசவைக்கு விஜய நகரத்துக் கவிஞர்கள் எட்டுப் பேரையும் வரவழைத்தான். மஹாபார

Koviloor Digital Library

தத்தின் சிறப்பு என்ன என்று சொல்லும்படி கேட்டான். அவர்களும் மிக அழகாக எடுத்துச் சொன்னார்கள்.

இதைக் கேட்ட தானீஷா, அவர்களைப் பார்த்து, தன்னைத் தர்மபுத்ரனாக வைத்து ஒரு மகாபாரதம் எழுதும்படி கேட்டான். இதில் அவனுடைய நான்கு மந்திரிகளும் மற்றப் பாண்டவர்களாகவும், அவனுடைய எதிரிகளெல்லாம் கௌரவர்களாகவும் சித்திரிக்கப்படவேண்டும். இப்படி ஒரு புது காவியம் எழுதவேண்டுமென்று வேண்டிக்கொண்டான்.

வந்த கவிஞர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன செய்வதென்றும் தெரியவில்லை. இப்படி ஒரு நவீன மகா பாரதம் இயற்றுவது அவர்களுக்கு இஷ்டமில்லை. இது ஒரு வடிக் கட்டின முட்டாள்தனம் என்பது அவர்கள் முடிவு. என்றாலும், கேட்பதோ அரசன்; முடியாது என்று சொன்னால் தலை போய்விடும். என்ன செய்வது? குழம்பிக் கொண்டிருந்தார்கள்.

அச் சமயம் தெனாலிராமன் அங்கு வந்து சேர்ந்தான். அவனுக்கு நடந்ததெல்லாம் தெரியும். இந்த முட்டாள் தானீஷாவுக்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்கவேண்டும் என்று முடிவு செய்தான்.

தானீஷாவிடம் வந்து, "அரசே! உங்களைத் தலைவனாக வைத்து ஒரு புது மகா பாரதம் நான் எழுதித் தருகிறேன். இதற்கு விஜய நகரத்துக் கவிஞர்கள் எதற்கு?" என்றான். "சரி. ஒரு வாரத்திற்குள் காவியம் தயாராகட்டும்" என்றான் தானீஷா.

ஒரு வாரக் கெடுவும் முடிந்தது. தெனாலிராமன் இன்னும் முதல் வரியைக்கூட எழுத ஆரம்பிக்கவில்லை. "ராமா! உன் தலை போய்விடும்!" என்றார்கள் சுற்றியிருந்தவர்கள். "சும்மா இருங்கள்!" என்று கூறிவிட்டு, தெனாலிராமன் ஒரு காகிதக் கத்தையைக் கையில் எடுத்துக்கொண்டு தானீஷாவிடம் போனான்.

Koviloor Digital Library

அரசன் சபையைக் கூட்டிவிட்டான். பெருங்கூட்டம். மகாபாரதம் தயாராகி விட்டதா என்று அரசன் கேட்டான். "அரசர் பெருமானே! தயாராகிவிட்டது. ஆனால் அதை அரங்கேற்றுமுன் இரண்டொரு சந்தேகங்களை நீங்கள் தீர்த்து வைக்க வேண்டும்" என்றான் ராமன்.

"என்ன?" என்று அரசன் கேட்டான்.

"அரசே! அந்தச் சந்தேகங்களை இந்தப் பொதுச் சபையில் எல்லோருக்கும் முன்னிலையில் கேட்பது உசிதமன்று. உங்களிடம் தனிமையில்தான் சொல்லவேண்டும்" என்றான் ராமன்.

அரசனும் ராமனும் ஒரு தனியிடத்துக்குச் சென்றார்கள். அங்கு ராமன் "அரசே! இந்த மகாபாரதத்தில் திரௌபதியாக யாரை நான் எழுதுவது?" என்று கேட்டான். மேலும் சொன்னான். "மகாராணியைத் திரௌபதியாகப் போட்டால், பஞ்ச பாண்டவர்களுக்கும் திரௌபதி மனைவியான மாதிரி, மற்ற மந்திரிகளுக்கும் மகாராணி மனைவியாக எழுதும்படி நேரிடும். அது அவ்வளவு சரியல்லவே என்று யோசிக்கிறேன். நீங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ அப்படிச் செய்துவிடுகிறேன். ஏதோ எனக்குப் பட்டதைச் சொன்னேன்."

"பாரதமும் வேண்டாம்; மண்ணாங்கட்டியும் வேண்டாம். எழுதியதையெல்லாம் கிழித்து நெருப்பில் போடு. வெளியில் சொல்லாதே" என்றான் அரசன்.

எல்லோரும் பாண்டவராக முடியுமா! எல்லோரும் துரௌபதியாக முடியுமா!

Koviloor Digital Library

20

கதை 13

நஷ்டஈடு

நான்கு சகோதரர்கள் சேர்ந்து பருத்தி வியாபாரம் தொடங்கினார்கள். ஒரு கிடங்கும் வாங்கினார்கள். எலிகளின் தொல்லையைத் தொலைக்க ஒரு பூனையும் வளர்த்தார்கள். பூனையின் கால்களில் தங்கக் கொலுசு பூட்டினார்கள். ஒவ்வொரு சகோதரனும் ஒவ்வொரு காலுக்குப் பொறுப்பு என்று ஏற்பாடு.

ஒரு நாள் பூனை நொண்டிக்கொண்டு வந்தது. ஒரு காலில் ஏதோ அடி. அதற்கு மருந்து போட்டு கட்டுக் கட்டினார்கள். பூனை அங்குமிங்கும் நடமாடியபோது அந்தக் கட்டு அவிழ்ந்து துணி தொங்கியது. அடுப்படிக்குப் பூனை போனபோது துணி தீப்பற்றிக் கொண்டது. இதனால் துன்பமடைந்த பூனை பஞ்சுக்கிடங்கிற்குள் ஓடியது. பஞ்சுக்கிடங்கு முழுவதும் எரிந்து நொடியில் சாம்பலாகி விட்டது.

மற்ற மூன்று சகோதரர்களும் சேர்ந்து, பூனையின் காயம் பட்ட காலுக்குப் பொறுப்பான சகோதரன் நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று தாவா செய்தார்கள்.

விஷயம் கோர்ட்டுக்குப் போயிற்று. நீதிபதி இரண்டு தரப்பு வாதங்களையும் கேட்டார். பின்பு தீர்ப்பளித்தார். தீர்ப்பு வருமாறு: ''காயம்பட்ட காலினால் நடக்க முடியாது. காயம்படாத மற்ற மூன்று கால்களால்தான் பூனை பஞ்சுக் கிடங்குக்குள் ஓடமுடிந்தது. எனவே, அந்தக் கால்களுக்குப் பொறுப்பான மற்ற மூன்று சகோதரர்களும், காயம்பட்ட காலுக்குப் பொறுப்பான சகோதரனுக்கு நஷ்டஈடு தர வேண்டும்!''

அறிவு எதையும் எப்படி வேண்டுமானாலும் வாதிட்டுக் காட்டும் என்பது இதிலிருந்து தெரிகிறதல்லவா?

Koviloor Digital Library

21

கதை 14

கர்வ பங்கம்

குருக்ஷேத்திரத்தில் போர் நடந்து கொண்டிருந்தது. அர்ஜுனனிடத்தில் தன்னுடைய பலத்தினுலும் திறமையி னுலுமே எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன என்று எண்ணிச் சற்று இறுமாப்பு அடைந்திருந்தான். அது மட்டு மன்று. கண்ணனைத் தன் தேரோட்டி என்று எண்ணினுன். தன்னை எஜமானனுகவும் கருதிக்கொண்டு விட்டான். தேரோட்டி முதலில் இறங்க வேண்டும்; அப்புறம்தான் எஜமானனுகிய தான் இறங்க வேண்டும் என்ற ஜபர்தஸ்து அவனிடம் தோன்றியது. ஒரு நாள், "நீ முதலில் இறங்க வேண்டும்; அப்புறம் நான் இறங்குகிறேன்" என்று கண்ண னிடமே சொன்னுன்.

ஆனுல் கண்ணன் கேட்கவில்லை. அர்ஜுனன் எவ்வளவோ சொல்லியும் மறுத்து விட்டான். முதலில் அர்ஜுனன் இறங்கவேண்டும் என்று கண்டித்துச் சொல்லி விட்டான். மிகுந்த மனக் குறையோடு அர்ஜுனன் தேரிலி ருந்து இறங்கினுன். அதன்பின் கண்ணன் இறங்கினுன். அடுத்த கணம் தேர் தீப்பற்றி எரிந்து சாம்பலாகிப் போயிற்று.

அது காறும் கண்ணனுல் தேர் காப்பாற்றப்பட்டு வந்தது; அர்ஜுனன் காப்பாற்றப்பட்டு வந்தான். எல்லாம் அவன் செயல் என்பதை அர்ஜுனன் உணரவில்லை.

卐